# மல்லிகை!

'MALLIKAI' PROGRESSIVE MONTHLY MAGAZINE

ஆசிரியர்: டொமினிக் ஜீவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் இலக்கியப்பணியில் "மல்லிகை"யின் சாதனைகள் தொடர வாழ்த்துகிறோம்.

**விவசாயிகளே!**

உங்கள் பயிர்களைத்தாக்கும் சகலவிதமான பூச்சி புழுக்களையும் அழித்தொழிக்க — இதோ நாம், மேற்கு ஜெர்மனியிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்துள்ளோம் ...

| | |
|---|---|
| பரத்தியன் E. 50 | ரேகுரே - 40 |
| எலேசால் 80% W. P. | எம். சி. பீ. ஏ. 40 |

மற்றும் சகலவித கிருமிநாசினிகள்.
களை கொல்லிகள், பங்கசு கொல்லிகள்
அனைத்திற்கும் எம்மை நாடுங்கள்

**புதியவீடு கட்டுவோர்க்கு ...**

உங்களுக்குத் தேவையான சகலவிதமான
இரும்புச் சாமான்களையும்
SLON பைப் வகைகள் இணைப்புக்கள்
அனைத்தையும், நிதான விலையில் பெற
எம்மை நாடுங்கள்.

# கல்கிசன்ஸ்

147, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7711

---

*Estate Suppliers Commission Agents*

*Varieties of*
CONSUMER GOODS
OILMAN GOODS
TIN FOODS
GRAINS

O

*The Earliest Suppliers for*
**ALL YOUR WHOLESALE & RETAIL NEEDS**

*Dial 26587 to*

# E. Sittampalam & Sons

223, FIFTH CROSS STREET,
COLOMBO - 11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*If you are a Writer*
*Publisher or*
*Book Seller*

*Please Contact*

**O. S. M. ALI**

*Representative of Sri Lanka*
*Tamil Books Publication*
*for*
*U. S. Library of Congress*
*Public Library, New York*
*Mary Martin - S. India*

*191 & 231,*
*Wolfendhal Street,*
*Colombo – 13.*

*66/3, Awwal Zavia Rd.,*
*Grand Pass,*
*Colombo – 14.*



வெளிநாட்டிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட

*National*
*Sanyo*
*Sony*

போன்ற தரமான
ரேடியோ
கஸற் ரேடியோ
ரேப்ரெக்கோட்டர்

ஜப்பான், சுவிஸ் நாட்டு

*Mondia*
*Garuda*
*Omax*
*Seiko*
*Citizen*

கைக் கடிகாரங்களுக்கும்
சுவர் மணிக்கூடுகள்

*Iron Box*
*Cassette Tape*
*Fan*

போன்ற வாழ்க்கைக்குத்
தேவையான பொருட்களும்

ஒரு வருட உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ளத்
தொடர்புகொள்ள

யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த ஸ்தாபனம்

**Malayan Radio Service**

**48, KASTHURIAR ROAD,**
**JAFFNA.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

# Pl. Sv. Sevugan Chettiar

*Dealers in TIMBER, CHIPBOARD & WALL PANELLING*

*Phone : 24629*

**140, ARMOUR STREET,**
**COLOMBO 12.**



கண்ணதாசனின்

அர்த்தமுள்ள இந்து மதம்

சகல பாகங்களும்

கல்பனா

மாதம் ஒரு நாவல்

ஆசிரியர் : ஜெயகாந்தன்

ஜெயகாந்தனின்

சகல படைப்புகளும்

இலங்கை விற்பனையாளர்
எம்முடன் தொடர்புகொள்ளவும்

வாணி தமிழ் இங்கிலிஸ், இங்கிலிஸ் டீச்சர்
போன்ற ஆங்கிலத்தைச் சுலபமான முறையில்
கற்றுத் தெளியும் நூல்களும்

ஜோதிட நூல்களும்

உயர் கல்விக்கான
தமிழில்
வங்கியியல்,
பொருளியல்,
உடலியங்கியியல்,
இயந்திரவியல்,
கணக்கியல்,
மற்றும்

அண்ணா மருத்துவ
பல்கலைக் கழக வெளியீடுகள்
ஆயுர்வேத, சித்தவைத்தியத்
தமிழ்ப் புத்தகங்களும்

சகல விதமான புத்தகங்களும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

# ALL CEYLON DISTRIBUTORS

*Cable :* KENNADIES
*Tphone :* 34529

353 - 7, DAM STREET,
COLOMBO - 12.

ஈழத்தின்
தரமான இலக்கியத்
தாக்கத்தை ஏற்படுத்தி வரும்
மல்லிகையின் 15 வருட சாதனைக்கு
எமது மனமார்ந்த பாராட்டுக்களைத்
தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி
அடைகின்றோம்

M. A. SULTAN AND COMPANY

Distributors for THE CEYLON TOBACCO CO., LTD.

66, GRAND BAZAAR,
MANNAR.



மல்லிகையில் வெளியாகும் கதைகள், கவிகளில்வரும் பெயர்கள் நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே
சிந்தனை, கருத்து எல்லாம் ஆக்கியோர் தனித்துவம்
பொறுப்பும் அவரே

MALLIKAI
Editor: Dominic Jeeva
234B, K. K. S. Road,
JAFFNA.
Sri Lanka

முகவரி:
ஆசிரியர் டொமினிக் ஜீவா
234B- கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
இலங்கை.

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் - பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்'

# மல்லிகை

## பதினைந்தாவது ஆண்டுமலர் - ஆகஸ்ட், '79 விலை: 3/-

பதினைந்தாவது ஆண்டு மலரை உங்களது கரங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

பல வழிகளில் சிரமப்பட்டு வேலை செய்தும் நாட்கள் பிந்தி விட்டன. அதற்காக இலக்கிய நெஞ்சங்களை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

நம்மைப் போன்ற சாதன வசதி குறைந்தவர்கள் இப்படியான மலர்களை வெளியிடும் பொழுது ஏற்படும் சிரமங்கள் உங்களுக்குத் தெரியாததல்ல. எனவே ஈழத்து இலக்கியத்தின் மீது உள்ள ஆழமான விசுவாசத்தினால் எத்தனை சிரமங்கள் வந்தாலும் தொடர்ந்து முன்னேறுவோம் என நீங்கள் நிச்சயமாக நம்பலாம்.

குழந்தைகள் ஆண்டுக்கான குழந்தை மலரொன்றை டிசம்பர் மாதத்தில் வெளியிடலாம் என்பது எண்ணம். எமது இந்த எண்ணத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டும். சகல இலக்கிய நண்பர்களும் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும்.

ஜனவரியில் பொங்கல் மலர் வெளிவரும். அந்த நல்ல செய்தியை இப்போதே சொல்லி வைக்கின்றோம்.

மலர் பிந்தியதால் செப்டம்பர் இதழ் வெளிவராது. தொடர்ந்து ஒக்டோபர் இதழில் பல புதுமைகளைக் காணுங்கள்.

இம் மலரைத் தயாரிப்பதற்குச் சகல ஒத்துழைப்புத் தந்தவர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் விளம்பரம் தந்துதவிய ஆர்வலர்களுக்கும் ஓவியர் ரமணி அவர்களுக்கும் மனப்பூர்வமான நன்றியை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளுகின்றோம்.

- ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆத்ம உணர்வு உங்கள் முன் சமர்ப்பிக்கப் படுகின்றது.

இதயத்துக்கு நெருக்கமான இனிய நண்பர்களே!

இது உங்களுக்கு எழுதும் நாலாவது கடிதமாகும்.

பன்னிரண்டாவது ஆண்டு மலர் தலையங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கடிதப் பரிமாற்றம் அடுத்த அடுத்த மலர்களிலும் தொடர்ந்து நாலாவதை எட்டிப் பிடித்துள்ளது.

வருடா வருடம் ஆண்டு மலருக்கு ஆண்டு மலர் — இப்படியே எனக்கும் உங்களுக்குமிடையே இந்தக் கடித உறவை வளர்த்துக் கொள்ளலாம் என்பது எனது எண்ணமாகும்.

எத்தனை எத்தனை அறிவு பூர்வமான தலையங்கங்களை எழுதினாலும் ரஸனை மிக்க கற்பனை இலக்கியங்களைப் படைத்தாலும் இப்படியான நேரடிச் சம்பாஷணையில் ஏற்படும் ஆத்ம சுகம் வேறெதிலுல் இல்லை என்பதே எனது அநுபவ வெளிப்பாடாகும்.

நீங்கள் மல்லிகையின் வளர்ச்சியைக் கூர்ந்து அவதானித்து வந்திருப்பீர்கள். சில சமயங்களில் உழைப்பின் அசுர தாக்கத்தால் மனம் மரத்துப் போய் விடுவதுமுண்டு. தளரும் உணர்வுகள் விரக்தியால் சலிப்படைவதுமுண்டு. வாய் கிழிய இலக்கியத்தைப் பற்றிப் பேசும் பேசுவதே மட்டும்- இலக்கிய சேவை எனக் கருதும் சிவருடைய ஒத்துழைப்பற்ற மனப் பான்மையை எண்ணி மனம் வெப்பியாரப் படுவதுமுண்டு.

ஆனால் நிதானமாக நின்று, நிதானித்துப் பின்னோக்கிப் பார்க்கும் பொழுது மலைப்பாக இருக்கிறது.

தற்செயலாக வீதியில் சந்திக்கும் முன்பின் தெரியாத யாரோ ஒரு தரமான ரஸிகர் காட்டும் பரிவு கலந்த முகமலர்ச்சியை, அன்புப் புன்முறுவலைப் பார்க்கும் பொழுது நான் விழலுக்கு நீர் பாய்ச்சவில்லை என்ற பேருண்மையை உணரக் கூடியதாகவுள்ளது.

எனது பாரிய சிரமங்கள் நல்லெண்ணம் படைத்தவர்களின் அக்கறைக்கும் அபிமானத்திற்கும் உரியதாகின்றது என்பதை எண்ணும்போது புதுப் பலமும் புத்தூக்கமும் பெற்று உழைக்க முற்படுகின்றேன்.

உங்களுக்கு நிறைய நிறையத் தகவல்களைச் சொல்ல வேண்டும் என்ற மன உந்துதலினால்தான் இப்படிக் கடிதம் வரைய முற்பட்டுள்ளேன்.

அப்படியானால் எதைச் சொல்வது? எதை விட்டு விடுவது?

இந்தப் பதினைந்து ஆண்டுக் காலத்தில் — சரியாகச் சொல்லப் போனால் நான் இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்த முப்பது வருட காலத்தில் — எத்தனை எத்தனையோ அநுபவங்களை எல்லாம் பெற்று வந்திருக்கிறேன்.

இலக்கிய உலகின் தடியடி ராமன்களையும் கண்டிருக்கிறேன்; வாய்ச் சவடால் பேர்வழிகளையும் பார்த்திருக்கிறேன்; படபடப்பு - பரபரப்பு ஜாம்பவான்களை அவதானித்திருக்கிறேன். அதே சமயம் இலக்கியத்திற்கு நட்பிற்கு — ஆத்மபூர்வமாகத் துணை நிற்பவர்களையும் தரிசித்திருக்கிறேன்.

இந்தக் கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட கால அநுபவம் என் மன நிலையைப் பதப்படுத்தி வைத்திருக்கின்றது; எனவே இலக்கிய உலகை வலிமை உணர்வுடன் அவதானிக்கக் கூடிய ஓர் ஆளுமையைக் காலம் எனக்கு வசப்படுத்தித் தந்துள்ளது.

எனவே உழைப்பில் மௌனம் இன்று அதிகம் நெருக்கமாக உறவாடுகின்றதென்றால் மேலே குறிப்பிட்ட அநுபவங்கள்தான் அதற்கு ஆதார சுருதியாகும்.

நமது நாட்டு மக்கள் மத்தியில் குறிப்பாகத் தமிழர்கள் மத்தியில் — அசகாய சூரத்தனங்கள் என்றுமே விலைபோனதில்லை என்ற உண்மை ஏற்கனவே எனக்கு நன்கு தெரியும்.

மலைப்பதைப் போல, ஆரம்பத்தில் காட்டிக் கொள்வார்கள் என்பது உண்மைதான். ஆனால் நாளாவட்டத்தில் சவடால் பேர்வழிகளை இனங்கண்டு புரிந்து கொண்டு காலை வாரிவிட்டு விடுவார்கள்.

கல்வியையும் உழைப்பையும் தமது ஜீவித ஊற்றாகக் கொண்டுள்ள மக்களிடம் 'பம்மாத்து' நீண்ட நாட்களுக்கு விலை போக முடியாது.

உழைப்பினால் மாத்திரமே — விடாது தொடர்ந்து பாடுபடுகின்ற இலட்சிய அர்ப்பணிப்பினால் மட்டுமே — நாம் மக்கள் மத்தியில் வேர் பாய்ச்சி வளர முடியும் என்ற அடிப்படை உண்மையை நான் என்னைச் சுற்றியுள்ள பாமர மக்களிடமிருந்து ஞானபோதமாகக் கற்றுக் கொண்டுள்ளேன். எனது வளர்ச்சிக்குப் பசளையாகப் பயன்படுவது இந்த அநுபவக் கூழங்கள்தான்.

எனவே எளிமையாகச் சிந்திக்கக் கற்றுக் கொண்டு ஆழமாக வேரூன்ற விரும்புகின்றேன். எளிமையாகச் சிந்திக்கப் பழகி, வாழ்ந்து, உழைக்கப் பழகிக் கொள்வது என்பது அப்படியொன்றும் இலேசுப்பட்ட காரியமல்ல; அதற்கு அசுரத்தனமான பொறுமை வேண்டும்; மனதைப் பல வழிகளிலும் பண்படுத்திப் பக்குவம் செய்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசித்தி பெற்ற சமையல்காரன் தான் அமைந்து சமைத்த சுவை நிரம்பிய உணவுப் பதார்த்தங்களை தானே ரசித்துச் சாப்பிடுவதில்லை என்பதற்கு ஒப்ப. மல்லிகை இதழ்களை நானும் அப்ப அப்ப வாசிப்பதில்லை. மாதங்கள் கடந்து விடும். தேவை கருதி. அல்லது தற்செயலாகத்தானும் அதில் வந்துள்ள விஷயங்களைப் படிப்பதுண்டு. உண்மையாகவே நான் பிரமித்துப் போயிருக்கின்றேன். இத்தனையும் எனது கரங்களால் உருவாக்கப்பட்டு வெளி வந்தவைகளா என ஆச்சரியப்பட்டுள்ளேன்.

இது சிலருக்குச் சாதாரணமாக இருக்கலாம் ஆனால் ஆழ்ந்து சிந்திக்கும்போது எத்தனை வியப்பைத் தருகிறது!

மல்லிகைக்கு எழுதும் அறிவுத்துறை உழைப்பாளிகளை எண்ணிப் பாருங்கள். எத்தனை வகையானவர்கள்! எத்தனை விதமானவர்கள்! தமிழ் இலக்கிய உலகில் தமக்கெனத் தனித்துவத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் அத்தனை பேர்களும் மல்லிகைக்குத் தொடர்ந்து எழுதுகின்றனர். வேறெந்தத் தமிழ்ச் சஞ்சிகைகளிலும் காண முடியாத சாதனை இது.

காரணத்தை உள்ளோட்டமாகச் சிந்தித்துப் பார்ப்பதுண்டு. நான். தார்மீக வலிமையுள்ள கருத்தாளனாக முகிழ்த்திருப்பதும் முன்னரே படைப்பாளிய க என்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளதும் இதற்கு ஏதுக்களாக அமைந்திருக்கலாம்.

கடலிலே மிதக்கும் படகு கடலின் ஆழத்தை அறிந்து விடுவதில்லை. அதைப் போலத்தான் நமது நாட்டிலுள்ள சிந்தனையாளர்களை. ஆற்றல் மிக்கவர்களை சாதனையாளர்களை படைப்பாளிகளை நமது மக்கள் சீக்கிரம் புரிந்து கொள்ளச் சிரமப்படுகின்றனர்.

இந்த அலட்சிய மனோநிலையை — வெளியிலிருந்து வருவதெல்லாம் சிறந்தது: உதுகளுக்கு என்ன தெரியும்? என்ற அசட்டைத் தனத்தை — ஒழித்து, இந்த மண் சிறக்கச் செயலாற்றும் இந்த மண்ணின் மைந்தர்களை உலகிற்கு உயர்த்திக் காட்டும் மிகப் பாரிய பணியைச் செய்து வருகின்றேன் என்ற ஆத்ம திருப்தி எனக்கு எப்போதுமே உண்டு.

இன்னும் சிலர் தமிழகத்திலிருந்து வரும் வண்ணச் சஞ்சிகைகளுடன் மல்லிகையை ஒப்பிடுகின்றனர். அப்படி ஒப்பிடுவதே தவறு. அவர்களது இலட்சியம் இலட்சங்கள். எனது நோக்கம் அப்படிப்பட்டதல்ல. கை விரல்களுக்குள் அடங்கக் கூடிய சில ஆயிரங்கள். பெண்களை உரிந்து பார்க்கும் - பார்க்க வைத்துப் பணம் பண்ணும் - கடதாசி விபசார நோக்கத்தில் துச்சாசனச் சஞ்சிகை ஆசிரியர்களுடன் போட்டி என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை.

நான் தாய்க்கு மைந்தன்; மனைவிக்குக் கணவன்; சகோதரிக்குச் சகோதரன். குழந்தைகளுக்கு அப்பன்!

இவ்வளவு பொறுப்புக்களையும் கடமைகளையும் சமூகம் என்மீது சுமத்தியுள்ளது. அப்படியிருக்கும் போது எப்படிப் பொறுப்பற்று என்னால் இயங்க முடியும்? - எழுத முடியும்? - சஞ்சிகையை நடத்த முடியும்?

எனவே. அழுத்தமான மனம் பதிவுகளை ஏற்படுத்திப் புதிய தலைமுறையினரைச் சிந்திக்க வைப்பதே எனது தலையாய நோக்கமாகும். பிரமிப்படையச் செய்வதல்ல: ஆழமான பாதிப்பினை ஏற்படுத்த உழைப்பதே ஈழத்து இலக்கிய உலகிற்கு என்னளவில் செய்யக் கூடிய கடமையாகும்.

உழைப்பு - உழைப்பு மாத்திரம்தான் - மல்லிகையின் மூலதனம் என்பதை நீங்கள் உணர்ந்துள்ளீர்கள். அந்த உழைப்பு - உடல் உழைப்பு உட்பட - எனது சகல சக்திகளையும், தினசரிச் சேவைகளையும் இதனது வளர்ச்சிக்கு உரமாக இட்டுப் பண்படுத்தி வந்திருக்கின்றேன்.

பதினைந்து வருடங்கள் என்பதைத் தொடர் சஞ்சிகை வரலாற்றில் எண்ணிப் பார்ப்பதே ஒரு மலைப்புத்தான்.

எத்தனை அனுபவச் செறிவுகள் எனது இலக்கிய நடைபாதைப் பிரயாணத்தில்?

சமரசப் போக்குடையவர்களின் பாசாங்குக் கூச்சல்களையும் வரட்டுப் புரட்சித் தத்துவவாதிகளினுடைய ஆத்திரக் கூப்பாடுகளையும் இந்த நடைபயணத்தில் கேட்டு வந்திருக்கின்றேன்.

எனக்குத் தெரியும் இவைகள் தற்காலிக இடைஞ்சல்கள் என்று. எனவே நான் மனக் கிலேசம் அடைந்துவிடவில்லை. அதே சமயம் உண்மைக்கு மிக நெருக்கமாகச் செயல்பட்டு வந்திருக்கின்றேன்.

இப்படியான சஞ்சிகைகள் வளர வளரத்தான் பிரச்சினைகளும் வளருகின்றன; நெருக்கடிகளும் தோன்றுகின்றன.

இத்தனைக்கும் மத்தியில்தான் எனது இலக்கியப் பயணம் தொடருகின்றது.

மல்லிகையை நம்பி இரண்டு குடும்பங்கள் வாழ வேண்டிய உண்மைக்கு இன்று முகம் கொடுக்க வேண்டிய நிலையில் நான் இருக்கின்றேன்.

என்னையும் என்னுடன் பணியாற்றும் அச்சுக் கோப்பாளரையும் சேர்த்துத்தான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

வாழ்க்கை என்பது வெறும் கணிதமோ, இலக்கணமோ அல்ல.

அதை வாழ்ந்துதான் பார்க்க வேண்டும்.

நான் இரட்டை வேஷக்காரனல்ல.

வாழ்க்கை வேறு, இலக்கியம் வேறு எனப் பிரித்து வாழ்வது ஆரோக்கியமான வாழ்க்கையுமல்ல!

எனது சொந்த. பொது வாழ்வு, எனது தினசரி நடவடிக்கைகள் திறந்து வைக்கப்பட்டுள்ள புத்தகமாகும் இதுவரை என்னுடன் முரண்படுகின்றவர்கள் கூட எனது ஆத்ம சுத்தத்தில் சந்தேகப்பட்டது கிடையாது.

எனவே மனிதனுக்குரிய சரியான வாழ்வை எனக்கு ஈட்டித் தந்தது எனது எழுத்துத் துறையாகும்.

இலக்கிய உலகில் பொது வாழ்க்கையில் -- இரட்டை வாழ்வு வாழ்பவர்களை மக்கள் என்றுமே தொடர்ந்து மதிப்பதில்லை.

இது எனக்குத் தெளிவாகத் தெரியும்;

ஆண்டுக்கு - ? இதழ்களுக்கு - சந்தா செலுத்துபவர்களுக்கு 15 - 6 இதழ்கள் கூட அனுப்பியிருப்பேன். சிலர் சந்தாவைப் புதுப்பித்திருக்க மாட்டார்கள், சிலருக்கு ஆண்டுக் கணக்காகக் கூட அனுப்புவதுண்டு. ஒரு சில இதழ்களுடன் மூடு விழாச் செய்து சந்தாதாரரை ஏமாற்றும் சஞ்சிகை உலகில் எனக்குத் தான் பல சந்தாதாரர்கள் கடனாளிகள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி வைப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என். எம்.

இலங்கையில் முதன் முதலாக அரசியல் கட்சியாகத் தொடங்கிய சமசமாஜக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர்; பாரம்பரிய இடதுசாரித் தலைவர்.

நமது தேசத்தையும் அதன் ஆத்மாவையும் சீரழித்துச் சுரண்டிக் கொழுத்த அந்நிய ஏகாதிபத்திய வாதிகளுக்குச் சிம்ம சொற்பனமாகக் காட்சியளித்த முது பெரும் அரசியல் இயக்கத் தலைவர்.

அந்நியரை — பிரிட்டிஸாரை வெகு வன்மையாக எதிர்த்ததால் அவர்களினால் சிறையிலடைக்கப்பட்டும், பின்னர் சிறையிலிருந்து தப்பியோடி இந்தியாவில் அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தி வந்தவர்.

பொருளாதாரத்தில் மூளை என வர்ணிக்கப்பட்டவர். தேசத்தில் நடந்த அத்தனை போராட்டங்களிலும் முன் நின்று உழைத்தவர்: சோஷலிசக் கருத்துக்களுக்காக உறுதியாக — இடைவிடாது போரிட்டவர்: தேசத்தின் வளர்ச்சியில் தனது பங்குப் பணியைச் செவ்வனே ஆற்றியவர் —

இத்தகைய சிறப்புக்குரிய இடதுசாரித் தலைவர் தோழர் என் எம் பெரேரா மறைந்து விட்டது இந்த நாட்டிலுள்ள சகலருக்கும் மிகப் பெரிய பேரிழப்பாகும்.

தேசிய இனப் பிரச்சினையில் சிறுபான்மை இன மக்களான தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்காக என்றுமே குரல் கொடுத்து வந்தவர்: சுய நிர்ணய உரிமை கொண்ட பிரதேச சுயாட்சி மூலம்தான் தமிழ் மக்களினது நியாயமான உரிமைகள் கிடைக்க முடியும் என நம்பியவர்: கடைசி காலத்தில் அதற்காக உக்கிரமாகக் குரல் கொடுத்த தமிழ் மக்களின் இனிய நேசர். என். எம். மறைந்தது தமிழ் மக்களுக்குப் மிகப் பெரிய நஷ்டமாகும்.

இந்தத் தேசத்தின் வரலாற்றுக் கட்ட வளர்ச்சியில் தனது முத்திரையைப் பதித்துச் சென்றவர்களில் என். எம். மிகச் சிறந்தவர்: தனிப் பெருமை கொண்டவர் முன்னணியில் திகழ்பவர்.

தோழர் என். எம். மின் இழப்பைக் கேட்டுத் துக்க அதிர்ச்சியால் இந்த நாட்டில் பல நல்லெண்ணம் படைத்த மக்கள் திகைப்புற்றனர். மத, இன, மொழி, பிரதேசம் கடந்து பாமர மக்களால் நேசிக்கப்பட்ட ஒரு பெரிய தேசியத் தலைவர் என். எம். இந்தத் தகுதிதான் என். எம். மின் பெருமை.

தான் நம்பிய இலட்சியத்திற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட தோழர் என். எம். மின் பிரிவுத் துயரில் மல்லிகையும் பங்கு கொள்ளுகின்றது.

மனிதர்கள் மறையலாம்; மாபெரும் இலட்சியங்கள் மறைந்து விடுவதில்லை.

— ஆசிரியர்



# சர்ப்பவியூகம்

'செம்பியன்செல்வன்'

அனல் பறக்கும் வயல் வெளியை உற்று நோக்கியவாறு அமர்ந்திருந்தான் திரவியம். வெறுமையின் தகிப்பில் வயல்வெளி பாலை என நீண்டு கிடந்தது. வெப்பத்தால் இலை கருகியும், புழுதிப் புயலில் அடிபட்ட பசுந்தளிர்கள் கூட மண் பூத்த செந்நிற மரங்கள் வரியமைத்து அடிவானின் விளிம்பாக காட்டெல்லை தெரிந்தது. வயலின் வரம்புகள் மனிதனின் காலடியே படாத கன்னி நிலமென, உடைந்தும், சிதறியும், கரணை கட்டிகளாயும் உருக்குலைந்து கிடக்க...... நெருஞ்சி, தொட்டாற்சிணுங்கி, கிடைச்சி, எனப் பரவி பூக்களாயச் சிரித்து முட்களாய்ச் சிலிர்த்திருந்தன திரவியம் மேலே பார்த்தான்.

வானில் வெண்மேகங்கள் குடும்பம் குடும்பமாக உல்லாச பவனி வந்துகொண்டிருந்தன. உச்சிச் சூரியனின் வெப்பக் கதிர் குளத்தில் நீச்சலடித்துத் திரியும் மீன் குஞ்சுகளாக......

அவனின் எக்கி, ஒட்டிய அடி வயிற்றிலிருந்து எழுந்ததென நீண்டபெருமூச்சு எழுந்து, வயிற்றில் சப்த ஜாலங்களை ஏற்படுத்திற்று:

அக்னி—

உள்ளும் புறமும்.

தூரத்தில் யாரோ கும்பலாகப் பாதை விலக்கி, முட்களுக்கு வழி பிரித்து வருவது தெரிந்தது.

'யாரது?'

— பசியால் பூத்த கண்களை இடுக்கிக் கொண்டு, நெற்றி மேட்டில் கை வைத்துக்கொண்டு பார்த்தான். அவர்கள் நெருங்கிக் கொண்டிருந்தனர்.

வெள்ளை வேட்டியும், 'நாஷனலு' மாக, இடையிடையே அவரது ஏதாவது விரலில் இருக்கும் மோதிரத்தில் ஒளி பட்டுத் தெறிக்க, வேலாயும் முன்னாக வேகமாக [illegible] து கொண்டிருந்தார். அவ[illegible] பின்னாகவோ, அருகாகவோ கிராம சேவகரும் அவரின் உதவியாள் குறி சுடும் கம்பியையும், முத்திரை இரும்பையும் கொண்டு வர, அவர்களின் பின்னால் சில அடி தூரத்தில் ரகுமானும், இஸ்மாயிலும் வந்துகொண்டிருந்தனர்.

'என்ன திரவியம்... எப்படி இருக்கு உங்க பாடெல்லாம்?' என்று கேட்டவாறு வந்தார் வேலாயுதம்.

அவன் இடுப்பால் நழுவும் சாரத்தைத் தூக்கி அவசரமாகச் செருகினாற் போல கட்டியவாறு எழுந்தான்.

'என்னத்தச் சொல்லிறது உங்களுக்குத் தெரியாதா? பாத்துக் கொண்டுதானே இருக்கிறியள்... ... வானம் பாத்த பூமி, குளம், அரசாங்கம் என்னத்த செய்தென்ன...... மழையெல்ல பெய்யோணும். மூண்டாம் வருஷமா வானம் முகடு துறக்கேல்ல. குளமெல்லாம் வத்திப் போச்சு. குடிநீருக்கே அருந்தலாக இருக்கு; குளம் சேறுகி கொதிச்சுக் கிடக்கு. சீலையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு பிழிஞ்சு தண்ணி எடுக்கிறம். மீன் எல்லாம் செத்து மிதக்குது. இந்த நிலையில எப்படி வேளாண்மை செய்யிறது. பயறு, உளுந்தெண்டாலும் போடலாமெண்டு பாத்தா...... அதுக்கும் கூட பன்னீர் தெளிச்ச மாதிரியெண்டாலும் மழை வேணுமே. இப்ப ஒண்டுக்கும் வழியில்லாமத் தவிக்கிறம். வெள்ளாமையை நம்பியிருக்கிறவர் பாடெல்லாம் நரகம்தான்'

வேலாயுதம் சிரித்தார்.

'உப்புடிச் சொல்லாத திரவியம். வெள்ளாமையை விட்டொரு தொழிலே......'

உப்புடிச் சொல்லிச் சொல்லித்தான் கமக்காரன் ஏமாந்து போய் வயித்துக்குக் கூட வழியில்லாமக் காய்கிறான். எல்லாருக்கும் உணவளிக்கிறவன் எண்டு பேர். இங்க அவன்ர வயிறு கருகிறதை ஆர் கண்டினம்? எல்லாத்துக்கும் மழைத்தண்ணி வேண்டும். கொதிக்கிற வயத்தில ஈரத்துணி போடக் கூட தண்ணிக்கு வழியில்ல......'

— இப்போது வேலாயுதத்துக்குச் சிரிப்பு வரவில்லை.

'சரி சரி உன்ரை நிண்டு கதைக்கிறதெண்டாக் கனக்கக் கதைக்கலாம், எனக்கு இப்ப நேரமில்ல. கொஞ்சம் வேலை கிடக்கு. விதானையாரையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறன். அப்ப வரட்டே' என்றவாறு, அவன் வளவுக்கு அடுத்திருந்த தனது மாட்டுப் பட்டிக்குள் நுழைந்தார்.

திரவியத்தின் கமத்திற்கு ஒதுக்குப் புறமாக, முட்பற்றைகளிடையே ஒற்றையடிப் பாதை அமைத்து தனது மாட்டுப்பட்டியை வேலாயுதத்தார் அமைத்திருந்தார். யாரும் பொதுப்படையாக நோக்கினால் முட்பற்றைதான் தென்படுமேயன்றி அவற்றிடையே ஒரு மாட்டுப்பட்டி அமைந்திருக்கும் எனக் கற்பனை கூடச் செய்து பார்க்க மாட்டார்கள்.

வேலாயுதத்தார் ஒரு பெரிய மாட்டு வியாபாரி. ஊருக்குள் உள்ள மாடுகளை, எருமைகளை விலைக்கு வாங்கியும் — விலைக்கு வாங்காமல் கள்ளமாடு, எருமைகள் பிடித்தும் — கொழும்பு போன்ற நகரங்களுக்கு டி. ஆர். ஓ. வின் அனுமதியுடன், அனுமதியில்லாமலும் அனுப்பி வருவார். அவர் வெளிப்படையாக மாடுகள் ஏற்றுமதி செய்து வருவதால் அவருக்குக் கொஞ்சக் காலம் தொடக்கமாக 'மாட்டுக்கார வேலன்' என்ற புதுப் பெயரை ஊரிலுள்ள வாலிபர்கள் சூட்டப்போக, அது சிறுவர் வயோதிபர் வரை வியாபித்து கிராமம் முழுவதும் அவருடைய பெயராகப் பரவிட்டது.

ஆரம்ப காலங்களில் அவர் ஊரவர்களுடைய மாடுகளைக் கள்ளமாகவே பிடித்து ஏற்றுமதி செய்து வந்ததைக் கண்டு. டி. ஆர். ஓவிற்கும் கவுண்மேந்து ஏஜெண்டிற்கும் அனுப்பப்பட்ட புகார்களும், பெட்டிசங்களும் அவர் பணம் பெருகப் பெருக வலிகுன்றி, மங்கி மடிந்து எலியரித்தும் இராமபாணம் துளைத்தும் போயின. ஆரம்பத்தில் அவரை எதிர்த்த ஊர் மக்களும் பணத்தின் சீற்றத்துக்கு அஞ்சி அஞ்சி ஒடுங்க வேலாயுதத்தாரின் கள்ள மாட்டு வேட்டைகளை அதிகரிக்கச் செய்திருந்தது. அவர் கள்ள மாடு ஏற்றுகிறார் என்று ஊர் மக்களுக்குத் தெரிந்தாலும், எப்படி, ஆர் மூலம் பிடித்து எப்படி அனுப்புகிறார் என்பதனை அவர்களால் கண்டுவிடிக்க முடியவில்லை.



இன்று அவர் ஊரில் பெரிய மனுஷர். அவருக்கு எந்த வீட்டில், எவனிடம் எத்தனை மாடுகள் நிக்குது? எங்க கட்டியிருக்கு? அவனுக்கு எப்ப பணமுடை ஏற்படும் என்பதெல்லாம் அவருக்குப் பஞ்சாங்க பாடம். 'ஓ...... ஓ...... செல்லன்ர பெஞ்சாதியப் பாத்தா இப்ப எட்டு மாசம் போலக்கிடக்கு...... ஆளுக்கு ஒரு பெரும் செலவு காத்திருக்கு... இப்ப வெள்ளாமையுமில்லை...... செல்லன் பிள்ளைப் பெறுவுக்கு என்ன என்ன செய்வான்? தன்ர நெற்றிச் சுட்டியனை வித்தாத்தான் புள்ளத்தாச்சிக்குச் சரக்கரைச்சுக் கொடுக்க முடியும். எப்படியும் ரெண்டு மூண்டுக்க அமத்திப் போடோணும். கிடைச்சா அந்த மாட்டிலயே எல்லாம் போக எனக்கும் ரெண்டு மூண்டு கிடைக்கும்' — இப்படித்தான் அவருக்கு எந்தவொரு மாட்டைப் பார்த்தாலும் சிந்தனை ஓடும்.

அவனவனிடம் அந்தந்தக் காலங்களில் நட்சத்திர நேர காலம் போல குரு மாறுகிற வீட்டைப் போல போய் நிற்பார். போகும்போது மாட்டு வியாபாரத்துக்குப் போவது போலவும் போகமாட்டார். 'வேறை அலுவலா அந்தப் பக்கம் வந்தது போலவும், அவனையும் வந்த கையோட பாத்திட்டுப் போவம்' என்று வந்ததாகவும் சுகம் விசாரித்து நிற்பார். இதுவரை காலமும் அவரைக் கண்ணால் கண்டாலே எரிச்சலுடனும் கோபத்துடனும் நோக்கிக் கொண்டிருந்த கமக்காரருக்கு — அவர் வந்த வேளையில் கண் கண்ட தெய்வமாகத் தோற்றமளித்தார். பிறகென்ன?

— தெய்வத்திடம் பக்தன் பேரமா பேசுவான்?

— தெய்வம் தீர்த்ததுதான் விலை.

— பணத்தேவை முடிந்ததும்தான் பக்தன், கற்பூரச் செலவைப் பற்றி எண்ணிப் பார்ப்பான். பதறிப்போவான். பதறி என்ன செய்வது. வேலாயுதத்தார் அவனால் வந்த வரவை எண்ணி கால்மேல் கால்போட்டு அமர்ந்திருப்பார்.

தொழிலின் நெளிவு சுழிவுகளை நன்குணர்ந்து தொழில் நடத்திச் செல்வதில், வேலாயுதத்தார் வெகு சாமர்த்தியசாலி. டி. ஆர். ஓ. கொடுக்கும் 'பெமிட்' டுக்கு பன்னிரண்டு மாடுகளை லொறிகளில் அனுப்புவார். அவருக்கு மாதம் ஒரு 'பெமிட்' டுத்தான். ஆனால், கொழும்பு மாநகர் தேவைக்கு இந்தப் பன்னிரண்டு மாடுகளோ, எருமைகளோ எந்த மூலைக்கு? இதை எண்ணியதும் இவருக்கு கொழும்பு மக்கள் மேல் ஏற்படும் பரிதாபவுணர்ச்சி கருணை வெள்ளத்தைக் கரைபுரண்டோடச் செய்துவிடும். உடனே எப்படியோ இன்னுமொரு ஐம்பது எருமைகளையோ, மாடுகளையோ தேடி அதிகாரிகளுக்குத் தெரியாமல் காடுகளிடையேயும் குளங்களிடையேயும் அவற்றை நடத்தியே கொழும்புக்குக் கொண்டு போய்ச் சேர்க்கச் செய்துவிடுவார். இரண்டு நாட்களில் அத்தனை மாடுகளும் கொழும்பில் நிற்கும் அல்லது இறைச்சிக் கடையில் தொங்கும். சில சமயங்களில் கொழும்புக்கு அனுப்பி வைக்கும் உருப்படிகளில் நாலைந்தோ, இரண்டு மூன்றோ கூடுவதுமுண்டு. இறைச்சிக்காக 'அடிபட' (ஓ! அறுபட) அனுப்பப்படும் மாடுகளிலோ, எருமைகளிலோ சிலதுகள் சினைப்பட்டவையாக இருக்கும், வழியில் புல்லும் தண்ணீரும் கண்ட இடத்தில் அவை ஈன்று விட்டால் அவற்றை விட்டுவிட்டா செல்வது? அனுப்பும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றையும் மனக்கணக்கிட்டுத் தான் அனுப்பி வைப்பார். அவற்றை மாடோட்டிகள் தூக்கி அணைத்துக் கொண்டு செல்வர். இதற்கெல்லாம் வேலாயுதத்தாரின் கருணையுள்ளம்தான் காரணம் என்பீர்கள். உண்மைதான். இல்லாவிட்டால் கொழும்புக்காரருக்கு இதமான, மென்மையான 'ஆட்டிறைச்சி' எப்படிக் கிடைக்கும்?

கால்நடைகளை நடத்திச் செல்லும் 'மாடோட்டி'கள் மீதும் இவரின் கருணை வெள்ளம் வற்றாத நதியாக கரை புரண்டு ஓடுவதும் நித்திய உண்மை.

கடத்திச் செல்லும் எருமை, மாடுகளை வழியில் கிராமசேவகரோ, டி. ஆர். ஓவோ மடக்கிவிட்டால் பணத்தால் சமாளிக்கப் பாப்பார். இல்லாவிட்டால்தான் என்ன?

மாடோட்டிகள் பதினானகு நாள் ரிமாண்ட் சிறையிருப்பர். மாடுகளும் டி. ஆர். ஓவின் மேற்பார்வையில் நாளொன்றுக்கு நான்கு ரூபா செலவில் பராமரிக்கப்படும். பதினான்காம்நாள் மாடுகளும், மாடோட்டிகளும் பிணையிலோ, குற்றம் கட்டிவிட்டோ வெளியே சுதந்திரப் பறவைகளாக வருவர். இவ்வளவுக்கும் வேலாயுதத்தாரின் பெயர் வெளியே தெரிய வராது. ரிமாண்டால் வெளியே வருபவர்கள் ஓய்வுகூட எடுக்க மாட்டார்கள். எதற்காக ஓய்வு? பதினான்கு நாட்கள் போதாதா? அன்றிரவே மாடுகள் விட்ட பயணத்தைத் தொடங்கிவிடும். அவர்களும் உற்சாகமாக ஓட்டிச் செல்வர். அவர்களுக்கு ஒரு உருப்படிகளைப் பத்திரமாகக் கொழும்புக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால் ஒன்றிற்குப் பத்து ரூபா என்ற வீதம் கிடைக்கும். வழிச்செலவு வேறு. கொழும்புச் செலவினை இறைச்சிக் கடைக்காரர் பார்த்துக் கொள்வார். மூன்றாம் நாள் லொறி மூலமோ, ரயில் மூலமோ கொழும்பால் திரும்பி வருவார்கள்.

தற்போது கமம், சேனை எல்லாம் வறண்டு கிடப்பதால் இந்த வேலைக்கு ஏக மதிப்பு. ஆனாலும் அவர் எல்லாரையும் இந்த வேலைக்குச் சேர்த்துவிட மாட்டார். நம்பிக்கை, நாணயம், தொழில் வல்லமை பார்ப்பார்.

திரவியத்தை அடிக்கடி நோட்டம் விட்டுப் பார்க்கிறார். அவன் அசைந்து கொடுப்பதாகவில்லை. மனைவி பிள்ளைகளை விட்டிட்டுப் போய்ச் சிறையில் இருக்க நேர்ந்தால்......

நினைக்கவே அவன் மேனி நடுங்கும்.

மாடுகளின் கதறல் கேட்டது.

'குறி சுடுகிறார்கள்... அதுதான் மாடுகள் கத்துது' திரவியம் காதைப் பொத்திக்கொண்டான்.

'போயும் போயும் என்ர அருமை மாடுகளான 'வெள்ளைப் பூச்சியனையும், நெற்றிச் சுட்டியனையும், கறுத்த வாலனையும் இவனுக்கு வித்தனே? நான் என்ன செய்பிறது. அனாவிலைக்கு வித்து என்ன சுகத்தை கண்டன். அதுகள் இரண்டும் இப்போது இல்ல. அதால வந்த பணமும் இல்ல. வானம் பொய்ச்சு, வீடு, வளவு எல்லாத்தையுமே துடைச்சுக் கொண்டிருக்கு' நினைவும் வெறுமை பூத்து நெருஞ்சியென சிரித்துக் குத்தியது.

'என்ர குழந்தையள் போலையல்லவா வளத்தன். அதுகளும் என்ர குரலைக் கேட்டாப்போதும். சொன்னபடி கேக்கும். அதுகளை நம்பித்தானே இந்த மூண்டேக்கர் நிலத்தை வைச்சிருந்தன். இனி மழை பெய்தாலும் எப்படி உழவு செய்யப் போறனோ?......' அவன் இரு கரங்களாலும் தலையைப் பிடித்துக் கொண்டான்.

உச்சி வெய்யிலில் உலகு இருண்டு வந்ததென அவன் கண்களுக்குப் பட்டது.

உச்சி வெய்யில் மண்டையைப் பிளக்க, வரம்பு வழியே விநாசித்தம்பி ஓடிவந்தான். அவன் முகம் வெய்யிலில் கறுத்து வியர்வையில் மெருகிட்டிருந்தது.

'இந்தவெய்யிலுக்கை இவன் எங்கையெல்லாம் போய் அலைஞ்சிட்டு வாறான். நாளைக்குக் காய்ச்சல் எண்டு கிடந்தா இவனை ஆர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு காவுறது. ஆசுப்பத்திரியிலும் மருந்தே கிடக்கு. காசு கொடுக்கிறவைக்குத்தான் அப்போதிக்க டொக்குத்தரும் ஊசி போடுறார்' அவனுக்கு எரிச்சல் மண்டியது.

'டேய்........ எங்கையெல்லாம் போய்ச் சுத்திட்டு வாறாய். இங்க வாடா!' திரவியம் சத்தம் போட்டான்.

விநாசி குடிசைக் கப்புப் பக்கமாக ஒதுங்கினான். திரவியத்துக்கு அவன் நின்ற கோலம் ஆத்திரத்தை மூட்டியது.

'என்னடா பதுங்கிறா...... வாய்க்கென்ன கொழுக்கட்டையா? நான் கேக்கிறன் எண்ட மரியாதை கூட இல்லாமல்... படவா... ராஸ்கல்......'

'அப்பா...... வந்தப்பா......' அவன் தயங்கினான்.

'என்னடா? சொல்லிறதைச் சொல்லித் தொலையன்'

'நானும் தம்பிராசாவின்ர மகன் காங்கேசனும் கீரைக் கொர்ட்டை தேடிக் காட்டுக்க போனம்.

'சனியனே... தனிய உந்தக் காடுவழிய போகாத எண்டு எத்தனை தரம் உனக்குச் சொன்னனான். எடி... இஞ்சாய்... உள்ள இருக்கிற துவரம் கம்பைக் கொண்டு வா........' தங்கம் வெளியே எட்டிப் பார்த்தாள்.

'என்ன செய்யப் போறியள் அவனை? வீட்டில அது அதுகளுக்குத் திருத்தியாப் போட்டா ஏன் அதுகள் காடு மேடெல்லாம் போய் அலையுதுகள்'

தண்டிக்கப் போன திரவியம், தானே தண்டிக்கப்பட்டவனாகத் தயங்கினான். என்றாலும் மகனின் முன் தன் தோல்வியைக் காட்டினால் நாளைக்கு அவன் மதிக்க மாட்டானே என்ற எண்ணம் மனதில் எழவும் 'காட்டுக்க போய் என்ன செய்தனியள்' என்றான்.

விநாசித்தம்பிக்கு முகம் மலர்ந்தது.

'அப்பா... அங்க காட்டுக்க ஒரு குளம். கனக்கத் தண்ணியோட இருக்கப்பா...... அங்க கனக்க அல்லிக்காய் எல்லாம் காய்ச்சு வெடிச்சு...... நாங்க ரெண்டு பேரும் நிறைய புடுங்கிக்கொண்டு வந்தமப்பா'—

— அப்போதுதான் மகனின் சறத்தைக் கவனித்தான் திரவியம். 'சண்டிக்கட்டு' கட்டியிருந்தான். அந்தச் சண்டிக் கட்டு நிறைய அல்லிக்காய் இருப்பது தெரிந்தது.

'இந்தக் காலத்தில் குளமாம், தண்ணியாம் என்ன ஏதும் கனவு கண்டியா?' என்று விசாரணை நடத்திக் கொண்டிருக்கையில், அடுத்த கமம் தம்பிராசா தன் மகன் காங்கேசனை இழுத்துக்கொண்டு வந்தான்,

'திரவியம் கேட்டியே சங்கதியை! பெடியள் எதையோ கண்டுபோட்டு உளறுகினமோ'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வா தம்பிராண்ணை, அதத் தான் நானும் விசாரிச்சுக் கொண்டிருக்கிறன், நீயும் வாறாய். அப்ப என்ன செய்வம்'

'வாவன்...... இதுகளோட போய் நாங்களும் அதப் பாத்திட்டு வருவம். இங்கயும் என்ன வேல வெட்டியே வீணாப் போகுது'

'சரி நடவுங்கடா நாங்களும் போய்ப் பாப்பம்'

— சிறுவர் இருவரும் உற்சாகமாக வழி காட்டிச் சென்றனர்.

வழக்கமாகச் செல்லும் பாதையிலிருந்து, ஒற்றயடிப் பாதை கூட இல்லாமல் ஏதோ விலங்குகள் பற்றைகள் புதர்களை விலக்கிச் சென்றதால் ஏற்பட்ட குகை போன்ற பாதை வழியே இருவரையும் அழைத்துச் சென்றார்கள். வழியில் யானை 'உலத்தி' கள் காணப்பட்டன. திரவியம் தயங்கினான். தம்பிராசா சென்று அதன்மேல் தன் உள்ளங்காலை மெதுவாக வைத்தான். சிரித்துக்கொண்டே அந்த இலத்தியை உழக்கிக் கொண்டு வந்தான். இலத்தி பொடிப்பொடியாக உதிர்ந்தது.

'மச்சான் அது எப்பவோ போட்ட இலத்தி. சூடாறிப் போய்.....' — விளக்கம் சொல்லிக் கொண்டு நடந்தான்.

விர்ரென்று தேனீ இலையான் ஒன்று திரவியத்தின் முகத்தின் முன்னால் வட்டமிட்டு ரீங்காரித்தது.

'அட, சை.....!' திரவியம் முகத்திற்கு முன்னால் கைகளை ஆட்டினான். தேனீ எழும்பிப் பறந்து சென்றது. தம்பிராசா திடீரெனப் பரபரப்புக் கொண்டான்.

'மச்சான், நீ விசரிவேலை பாத்துக் கொண்டாய். அது தேனீயடா. இப்ப பார் காட்டு மரமெல்லாம் பூத்துக் கிடக்கு. இப்பதான் தேன எடுக்கிற காலம். உந்தத் தேனீ போற இடத்தில நிச்சமம் தேன் இருக்கும். வா.. வா... பொடியங்கள் போற பாதையில தான் அதுவும் பறக்குது. வா... எது எந்த மரத்தைப் போய் அடையுது எண்டு பாப்பம்.

சிறுவர்களுடன், பெரியவர்களுக்கும் இந்த வன வேட்டை உற்சாகமான பொழுது போக்காக அமைந்தது.

தேனீ மெல்லிய நெட்டையான பாலை மரத்தின கவரில் இறங்கியது. தம்பிராசா அதனைக் கூர்ந்து கவனித்தான்.

'மச்சான்... இந்த மரத்தில நிச்சயம் ' தேனிருக்கும்' என்றான்.

'எப்படி?' என்பது போல் திரவியம் அவனைப் பார்த்தான்.

தம்பிராசா மரத்தினடியில் போய் சுற்று முற்றும் பார்த்தான். குனிந்து ஒரு 'ஆமான மால' கல்லை எடுத்தான். பாலை மரத்தின் அடியில் 'டொக் டொக்' எனச் சப்தமிடப் பெரிதாகத் தட்டினான். தட்டிய இடத்தில் காதைக் கொஞ்ச நேரம் வைத்து அமைதியாகக் கேட்டான். அவன் உதட்டில் புன்னகை மிளிர்ந்தது. சிறுவர்கள் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். அவன் கண்ணைசைவால் திரவியத்தைக் கூப்பிட்டு, தன்னைப்போல காதை வைத்துக் கேட்கும்படி கூறினான். திரவியம் காதை வைத்தான். முதலில் ஒன்றும் புரியவில்லை. சில விநாடிகளின் பின் மெல்லிதாக ஈக்கள் இரையும் சப்தம் கேட்டது அவன் மரத்தை விட்டு நீங்கியதும் சிறுவர்கள் ஓடிச் சென்று காதை வைத்து உற்றுக் கேட்கலாயினர்.



தம்பிராசா அந்த மரத்திற்கு அடியில் சில கற்களை குவித்து அடையாளமிட்டான். 'மச்சான் விரும்பி வரேக்க எந்த மரம் எண்டு அடையாளம் காணத்தான்' என்றான்.

'சரி சரி கேட்டது போதும். நீங்க போய்ப் பாத்த இடத்தைக் காட்டுங்க' என்று திரவியம் அதட்டினான். சிறுவர்கள் உற்சாகம் கொண்டவர்களாக பற்றைப் புதர்களை விலக்கிக் கொண்டு நடந்தவர்கள், திடீரென ஓரிடத்தில் நின்றார்கள். அந்த இடத்தைக் கண்ணுற்ற இருவரின் விழிகளும் ஆச்சரியத்தால் விரிந்து மலர்ந்தன.

இளம் காடுகளால் சூழப்பட்டு, கன்னி கழியாத குமரிப் பெண் போல மரநிழலின் குளுமையில் அந்தக் குளம் அமைதி கண்டிருந்தது. ஒரு காலத்தில் யாரோ தனிப்பட்டவர்களால் பராபரிக்கப்பட்டு வந்து கைவிடப்பட்ட குளம் எனத் தெரிந்தது. மண் கலிங்கு, மடை அனைத்தும ஆங்காங்கு சிதைந்து உடைவுற்ற மண்பாண்டம்போல விளங்கியது. அவர்கள் நின்ற இடத்தில் அகலமாகப் பரந்து காணப்பட்ட குளம் அவர்கள் பார்வையிலே முன்னாகச் சற்றுக் குறுகிச் சென்று, மீண்டும் கிழக்காகத் திரும்பிப் பரந்திருந்தது. அவர்கள் நின்றிருந்த பக்கமே குளத்தின் ஆழமான பகுதியாக இருக்க வேண்டும். வடக்கேயும், கிழக்கேயும் குளத்து நீர் வற்றி புல் நிலமாக பரந்திருந்தது.

சிறுவர்கள் கோரைக் கிழங்குகளுக்காக ஓடினர்.

தண்ணீரைக் கண்டதும் திரவியத்தால் சும்மா இருக்க முடியவில்லை. 'மச்சான் வடிவா ஒரு போகம் செய்யத் தண்ணி காணும்' என்றான்.

'எங்க செய்யிறது? எப்படிச் செய்யிறது?' என்றான் தம்பிராசா.

'மச்சான் குளத்தின் வடக்குப் பகுதியை உழுது பதப்படுத்தி இந்தத் தண்ணியை வாய்க்காலால பாய்ச்சினமெண்டால்'

'குளத்திலேயே பயிர் செய்யப் போறியா?'

'இதொண்டும் அதிசயமில்ல. உப்புடிக் கன இடந்தில செய்யிறதுதான். ஆனா இந்த விசயம் ஒருத்தருக்கும் தெரியக் கூடாது. தெரிஞ்சாப் போச்சு'

'அதுசரி...... உழுகிறதுக்கு என்ன செய்யிறது. கலப்மையை நீயும் நானுமா இழுக்கிறது. மாட்டைத்தான் வித்துச் சாப்பிட்டுட்டம்'

திரவியத்துக்கு அப்போது தான் மாடுகள் பற்றிய பிரச்சனை உறைத்தது. பரிதாபமாக தம்பிராசாவைப் பார்த்தான். தம்பிராசா தலையைத் தடவி விட்டுக் கொண்டான். திடீரென குளத்தின் வடபகுதியிலே ஹீங்கார முக்கார முழக்கம் கேட்டது. சிறுவர்கள் ஓடிவந்தார்கள். எல்லாரு மரத்தின் பின்னால் போய் ஒளிந்து கொண்டார்கள்.

நான்கைந்து காட்டெருமைகள், குளுமாடுகள் குளத்தை நோக்கி ஓடி வந்தன.

தம்பிராசாவின் முகம் மலர்ந்தது.

'மச்சான் நீ ஒண்டுக்கும் பயப்படாத, பொடியங்களோட இங்க வந்ததும் ஒரு நன்மைக்குத்தான். எங்கோ அடிக் காட்டுக்க கிடக்கிற குளுமாடுகள் தண்ணித் தாகத்தில இந்தக் குளத்துக்கு வந்து போகுதுகள். இதுகளில ஒண்டு ரெண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் பிடிச்சிட்டா...... என்றவாறு திரவியத்தைப் பார்த்தான்.

'அது முடியிற காரியமா... இந்தக் குளுமாடுகளைப் பிடிக்கிறதெண்டா, மாடுகளைப் பிடிக்கிறமோ அதுகள் எங்கட உயிரைக் குடிக்கிறதோ தெரியாது' என்று கவலையோடு பார்த்தான் திரவியம்.

'மச்சான் எனக்கும் உதில கொஞ்சம் பழக்கமுண்டு. ஊருக்குள்ள இருக்கிற எருமைகளில முக்கால்வாசி இப்புடிக் காட்டுக்க புடிச்சு வந்ததுதான். அதுக்கு ஒரு பழகின எருமையிருந்தாப் போதும். அதின்ர குரலையும் அதனையும் காட்டியே மற்றக் குளுமாடுகளை வளைச்சுப் பிடிச்சிடலாம். ஆனா, எங்களுக்கு அதுக்கும் வழியில்ல, நாங்களே எப்பிடியும் பிடிச்சுப் பாப்பம். வா வீட்ட போவம். எல்லா ஆயத்தேத்தாடும், கயிறு, கோடலி எல்லாத்தோடும் வருவம்'

— திரும்பும் போது அவர்கள் நடையில் வேகம் கண்டிருந்தது.

## 2

அடுத்த நாள் புலரிப்பொழுதிலேயே தங்கராசாவும், திரவியமும் காட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தனர். தங்கராசாவின் தோளிலே தேடாக்கயிற்று வளையங்கள் சுமையாக அழுந்த, கைக் கோடரியுடன் முன்னே நடக்க, திரவியம் இரண்டு சுரைக் குடுவையுடனும், ஒரு சாக்கு மூட்டையுடனும் பின் தொடர்ந்து கொண்டிருந்தான்.

முதனாள் அடையாளமிட்ட பாலை மரத்தை அண்மியதும் தங்கராசாவின் நடை தடைப்பட்டது: தேடாக்கயிறுகளை கீழிறக்கினான்.

'நெருப்புப் பெட்டியும், கொஞ்சம் கந்தல் துணியும் தா!' திரவியம் தனது மூட்டையை அவிழ்த்து எடுத்துக் கொடுத்தான். தங்கராசா இரண்டையும் எடுத்து மடியில் கட்டிக் கொண்டு, கோடரியை வலப் பக்க இடுப்பில் செருகிக் கொண்டு பாலையில் விறு விறுவென்று ஏறிக் கவரை அடைந்தான்.

தேன் பொந்திற்கு ஒரு சாண் கீழாக, கைக் கோடரியால் பதமாக வெட்டி ஓட்டை தயாரித்தான். கோறை பாய்ந்த மரமாதலால் அது சுலபமாக இருந்தது. அந்தக் கோறைக்குள் துணியைத் திணித்து நெருப்பு மூட்டினான். புகை எழும்பத் தொடங்க வேகமாகக் கீழிறங்கினான்;

பாலைக் கவரிலிருந்து தேனீக் கூட்டம் கரும்புகையென வெளிக்கிளம்பிப் பறந்தன. சிறிது விநாடியின் பின் தேனீக்கள் முற்றாகக் கலைந்து விட்டன என்றதன் பின் மீண்டும் தங்கராசா ஏறிப் பொந்திற்குள் கைவிட்டான்.

தேன்வதை கையோடு வந்தது: எந்தவித சேதாரமுமில்லாமல் அவன் தேன் எடுத்து வந்த லாவகம் திரவியத்தை மெய்சிலிர்க்க வைத்தது. இருவருமாக சுரைக் குடுவையில் தேனைச் சேகரித்துக் கொண்டு குளத்தை அண்மிய போது பொழுது உச்சிக்கு வந்திருந்தது.

'மச்சான் நல்ல நேரத்தில தான் வந்து சேந்திருக்கிறம். இனித்தான் குளுவான்கள் வெப்பம் தாங்காமல் தண்ணி குடிக்க இங்க வரும்'

அவர்கள் தங்களின் சுமைகளை குளக்கரையோரமாக, கூந்தல் வேர்ப் பரப்பியும், சயனித்தும், பரந்து கிடந்த மருதமரத்தடியில் இறக்கினார்கள். சுற்றுவெளி எங்கும் வெறுமை பூத்துக் கிடந்தது. நேரம் சென்று கொண்டிருந்தது. திடீரெனத் தூரத்தில் புயல் கிளம்புவதைப் போல் புழுதி எழ, குளுமாடுகள் கூட்டம் விரைந்து வந்து கொண்டிருந்தது.

தம்பிராசா பரபரத்தான்.

'மச்சான், அதுகள் கூட்டமாக வரேக்க பிடிக்கிறது கஷ்டம். இப்ப எங்களைக் கண்டாலும் எங்களுக்குத்தான் ஆபத்து. கவனமாக மரத்துக்குப் பின்னால மறைஞ்சு கொள்'

குளுமாடுகள் வந்தன. புல்லை அசைபோட்டன. தண்ணீரிலே அழுந்தி அழுந்தி எழுந்து சேற்றில் புரண்டு......

— அவர்கள் பொறுமையுடன் காத்திருந்தார்கள்.

— சூரியன் காட்டு மரங்களைத் தடவித் தடவிச் சென்று சரிந்து கொண்டிருந்தான். குளுமாடுகள் ஒவ்வொன்றாகக் குளத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தன. ஆனால் அந்த ஒற்றை எருமை மட்டும் எதனையும் கவனியாமல் குளத்தைச் சேறாக்கித் தனிமையில் இனிமை கண்டு கொண்டிருந்தது. அது குளத்தை விட்டு வெளியேறுகையில் எல்லா எருமைகளும் காட்டிடையே மறைந்து விட்டன. ஒன்றையொன்று நோக்கி, பிறையாக வளர்ந்த கொம்புகளுடன் அது சிலிர்த்து எழுந்து வெளியேறிய போது, அதன் தாடை, கால்களின் வலிவு தெரிந்தது. தங்கராசாவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

'மச்சான் உருப்படி ஆமானதுதான், கிடைச்சால்' என்று கிசு கிசுத்தபடி மரத்தை விட்டு வெளியே வந்தான். மாடு என்ன எதுவென்று அறியமுன் தேடாக்கயிறு வானத்தில் வட்டமிட்டு எழுந்து, அதன் கழுத்தில் போய் விழுந்தது. அதே வேளையில் அவன் புல்தரையில் உருண்டு கொண்டிருந்தான். அவன் கயிற்றை விடவில்லை. திரவியம் பின்னால் ஓடிச் சென்று கயிற்றைப் பற்றினான். இருவர் பிடியிலும் மாடு திணறியது. கயிற்றை அப்படியே கொண்டு சென்று ஒரு மரத்தில் சுற்றி விட்டு, அதன் முனையைத் திரவியம் பிடித்திருக்க, தம்பிராசா இன்னொரு தேடாவளையத்தை எடுத்துவந்து அதனை நோக்கி ஓடினான். மாடு ஹீங்காரத் தொனியுடன் மண்ணைக் காலாலும், கொம்மாலும் கிளறிக் கொண்டிருந்தது. அந்த அமானுஷ்யப் பிரதேசமே அந்த ருத்ர போராட்டத்தால் அதிர்ந்தது. தம்பிராசா மாட்டிற்குப் பாய்ச்சல் காட்டிக் கொண்டே, நான்கு கால்களையும் எப்படியோ கயிற்றால் பிணைத்து விட்டான்.

எப்படியோ ஒரு மரத்தினடியில் அதனைக் கட்டிப் போட்ட போது அவர்கள் உடலே இற்று விட்டது போலிருந்தது. ஆனால் உள்ளத்திலிருந்த மகிழ்ச்சி முகத்தில் மலர்ச்சி காட்டியது,

பசி வயிற்றைக் காந்தியது.

'சாப்பிடுவமா?' — இருவரும் குளக்கரையில் அமர்ந்து உணவுப் பொட்டலத் துணியைப் பிரித்தார்கள்.

வட்டமான, தோசைக்கல் அளவில், குண்டாளமான இரண்டு குரக்கன் ரொட்டிகள். அதுதான் கிராமத்தவர்கள் காட்டிற்கோ, வேட்டைக்கோ செல்லும் போது கொண்டு போகும் உணவு. குரக்கன் அடை என்பார்கள். அதனைத் தின்று தண்ணீரும் குடித்தால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும். காட்டுப் பகுதியின் வெம்மை இதனல் அடங்கும்.

'மச்சான்...... இண்டைக்கு நாங்கள் இதைப் பிடிச்சது பெரிய வேலையில்ல. ஏன் தெரியுமே, மாடுகள் வழக்கம்போல சுதந்திரமாக வரும் ஆபத்தை உணராமல் நடமாடியதால் பிடிச்சிட்டம். ஆனு...... போன குளுவான்கள் தங்கட ஆள் ஒண்டு குறையுது எண்டு நிச்சயம் திரும்பும். அப்ப இன்ெனண்டைப் பிடிப்பதிலதான் இருக்கு விசயம்'

'எப்ப வரும்?'

'இரவு வரலாம். விடிஞ்சாப் புறமும் வரலாம். அதோட கட்டிப் போட்டிருக்கிற குளுவான்ர சத்தமும் அதுகளைக் கூட்டிவிடும்'

'அப்ப என்ன செய்யிறது?'

'இரவு இங்க ஒரு 'சிரும்பி' கட்டி அதில தங்க வேண்டியது தான். கெதியனச் சாப்பிடு, வசதியா ஒரு சிரும்பி கட்டவேணும்'

— அவசரமாக உணவை முடித்துக் கொண்டு எழுந்தனர்.

வாகான இரண்டு மரங்களிடையே தங்களின் 'சிரும்பி' எனும் பரணை அமைத்து முடித்த போது இருட்டி விட்டது.

கட்டிப் போட்ட குளுமாட்டிற்குப் புற்களை அரிந்துகொண்டு வந்து போட்டார்கள். தங்கள் சிரும்பியின் நேர் கீழாக காட்டு மரங்களை அடுக்கி நெருப்பு மூட்டினர்கள்.

இருவரும் சிரும்பியில் ஏறிப் படுத்துக் கொண்டார்கள்.

இரவு முழுவதும் எருமையின் சிறுநீரின் 'சுர்ர்ர்' சப்தமும் அது நடமாடுவதால் எழும் ஓசையும் இடைவிடாது கேட்டுக் கொண்டிருக்க இருவரும் அறிதுயிலிலாழ்ந்து கொண்டிருந்தனர்.

நடு நிசியின் போது பலத்த சப்தம் — பற்றைகள் முறிவடைவதைப் போல் எழவும் விழித்தெழுந்தார்கள். திரவியம் பயத்தால் உறைந்து போனுன்.

'ச் எங்க?'

குளுமாட்டின் பக்கமாக பலத்த சச்சரவு கேட்டது.

டோச்சின் ஒளி வெள்ளத்தில் பன்றி கூட்டம் ஒன்று புற்றரையை கிளறிக் கொண்டிருக்க் அருகே கட்டியிருந்த குளுமாடு மிரண்டு ஹீங்காரம் செய்து திணறிக் கொண்டிருந்தது.

தம்பிராசா துணிப் பந்தொன்றை நெருப்பு மூட்டி பன்றிகளிடையே எறிந்தான். பன்றிக் கூட்டம் சிதறி ஓட, நெருப்பால் மிரண்ட குளுவானின் ஹீங்காரம் அந்த அந்தகாரத்தைத் துளைத்தது.

தூங்காத இரவாக விடிந்தது. திரவியத்திற்கு அனுபவம் புதிதாக இருந்ததால் புத்துணர்ச்சியாக இருந்தது. குளுமாடு அமைதியாக அசைபோட்டுக் கொண்டிருந்தது.

அவர்கள் எழுந்து காலைக் கடனை முடித்து, உணவையும் உண்டுவிட்டு கீழிறங்கி நடந்து திரிந்தார்கள். அவர்களே அறிந்திருந்த, பெயர் தெரியாத காட்டுப் பழங்களைப் பறித்துண்டார்கள்.

நேற்றைய தினம் போலவே குளுமாட்டுக் கூட்டம் ஓடி வந்தது. வழியில் கட்டிப் போட்டிருந்த குளுவான் அருகே நின்று சுற்றிச் சுற்றி வந்தது. தமது எச்சரிக்கையான விழிகளை நாற்புறமும் சுழற்றி ஹீங்கார முழக்கமிட்டது.





பாதுகை

இவர்கள் இருவரும் சிரும்பியில் ஏறி மரக்குழைகளிடையே பதுங்கிக் கொண்டனர். அவைகளின் பார்வையில் பன்றிகள் பறித்த குழிகளே பட்டன. சில அவற்றை முகர்ந்து கிளறி எறிந்தன. சில குளத்தை நோக்கி நகரவும், எல்லாம் ஓடிச் சென்று குளத்தைச் சேருக்க முனைந்தன.

திரவியத்துக்குப் பரபரப்பாக இருந்தது. தம்பிராசா அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்தான். நேரம் சென்று கொண்டிருந்தது.

குளுவான்கள் ஒவ்வொன்ருக குளத்தை விட்டு வெளியேறிக் கட்டப்பட்ட காளையைப் பார்த்துவிட்டு தயக்க நடையுடன் போய்க்கொண்டிருந்தன. ஆனுல் ஒன்று மட்டும் போகாமல் தனித்து அதனையே முகர்ந்தும், உராய்ந்தும், முகத்தோடு முகம் வைத்தும் என்ன பேசினவோ? ஆறுதல் சொன்னதோ?

திரவியத்துக்குத் தாங்க முடியவில்லை. உருக்கமாக இருந்தது.

'ஏன் மச்சான் போகம இருக்கு?'

'இதின்ர சோடி போல... அதுதான் நிற்குது. உது லேசில போகாது. உதைப் பிடிக்கிறது தான் வேலை. ஆனுல் கோபமாக இருக்கும். நேற்று நல்ல வேளை காளையைப் பிடிச்சிட்டம். இது அதின்ற பிணைதான். அதுதான் காளையோடு முகந்தது.

தம்பிராசா கீழிறங்கினுன். அவனது தேடாக்கயிறு அதன் மேல் விழுந்தது. கயிறு சோர்ந்தது. குளுமாடு அவனைப் பார்த்தது. அவனைத் துரத்தத் தொடங்கியது. தம்பிராசா நேராக ஓடாமல், வளைந்து வளைந்து ஓடி, அதன் பின்புறமாக ஓடத் தொடங்கினுன். குளுமாடால் உடனடியாகத் திரும்ப முடியாது. அது வட்டமடித்துத் திரும்ப முயலுகையில் தம்பிராசா நிலைமாற்றி அதன் பின்புறத்துக்குப் போய் விடுவான். அது திரும்ப முயற்சிப்தும், தம்பிராசா அதற்குப் பாய்ச்சல் காட்டுவதுமாக இருந்தான். அவன் நன்ருகக் களைத்துப் போனுன். ஒரு திருப்பத்தின்போது தம்பிராசா கத்தினுன்.

'மச்சான் கயிற்றைக் கழுத்தில எறி' திரவியம் பயத்தால் உதறிக் கொண்டே கயிற்று வளையத்தை அதன் கழுத்தை நோக்கி எறிந்தான். நல்ல சுருக்கு, இறுகியது. மாட்டின் மூர்க்கத்தனம் அதிகரித்து, பலமாக இழுத்தது. சிரும்பியிலிருந்து திரவியம் கயிற்றுப் பிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு விழுந்து, தரையில் அரையலானுன்;

குளுமாட்டின் கவனம் திரும்பியதும் தம்பிராசா தனது கயிற்றை அதன் கால்களிடையே வீசினுன். பின்னங்காலில் அந்தச் சுருக்குப் போய் இறுகியது. இதற்குள் எழுந்துவிட்ட திரவியம் மாட்டின் கயிற்றை முன்னுவிழுக்க, தம்பிராசா கால் கயிற்றைப் பின்னுல் இழுக்க மாடு நிலைத்து ஹுங்காரமிட, கட்டியிருந்த மாடும் ஹுங்காரமிடத் தொடங்கியது. இரு குளுவான்களையும் ஒன்றுடன் ஒன்று பிணைத்துக் கட்டினர்.

திரவியம் சிறும்பியிலிருந்து விழுந்தாலும், சருகுப் புதர்களில் விழுந்ததால் விலாவில் சிறிதளவே நோ கண்டிருந்தது. புறங்கைகள் உராய்வு ஏற்பட்டு இரத்தம் வழிந்தது. தம்பிராசாவின் தோள் மூட்டுக்ளெல்லாம் கழன்று விட்டதென வலி கண்டிருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இருவருக்கும் மகிழ்ச்சியால் சிரிப்பு வெடித்துக் கொண்டு வந்தது.

இரண்டு குளுமாடுகளையும் ஓட்டிவந்து, திரவியத்தின் மாட்டுக் கொட்டகையில் கட்டிவிட்டுப் படுக்கும்போது இரவாகி நீண்ட நேரமாகிவிட்டது. அப்போதும் வேலாயுதத்தாரின் மாட்டுப் பட்டியில் விளக்கு வெளிச்சம், ஆட்கள் நடமாட்டம் காணப்பட்டது.

## 3

முதலுல் தூக்கமின்மையும், மாடுகள் போராட்டத்தால் ஏற்பட்ட உடல் அசதி சோர்வு என்பனவற்ருல் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவனை மனைவியின் கூச்சல் தூக்கி எறியப்பட்டதென எழுப்பியது.

'இங்க வாங்கோவன் ... இராத்திரிக் கொண்டுவந்த மாடொன்றயும் காணேல்ல......

எந்தப் படுபாவியோ இராவோடு இராவாகக் கொண்டு போட்டான்.

திரவியம் ஓடிப்போய்ப் பார்த்தான்.

புழுதியில் மாடுகளின் தடயமும், மனிதரின் காலடிச் சுவடுகளும் தெரிந்தன. வேலாயுதத்தாரின் பட்டியை எட்டிப் பார்த்தான். ஒன்றுமேயில்லை.

இரவு கள்ளமாக மாடுகள் கடத்தப்பட்டிருந்தன.

வெளியே ஓடிவந்து பாதையைப் பார்த்தான். மாடுகளின் குழப்படிகள். குழம்பிப் போய் பாதை நீண்டதென தொலைவு வரும்வரை வெறிச்சிட்டிருந்தது.

அவனுக்கு ஏதோ புரிந்தது. அவனது ஆக்ரோஷ வெள்ளம் ரத்த நாளங்களைத் துடிக்கச் செய்தன.

உள்ளே ஓடிச் சென்று கைக்கோடரியை எடுத்துக் கொண்டு ஓடினுன். மாடுகளின் குளம்படிகள் வழிகாட்டிச் சென்றன.

'மச்சான் நில்லு... நேற்று நடத்தியது போராட்டமில்ல... இண்டைக்கு நடத்தப் போறது தான் போராட்டம்' என்ற குரல் கேட்டுத் திரும்பினுன். தம்பிராசா தன் கைக்கோடரியுடன் ஓடிவந்து கொண்டிருந்தான்.

அவன் பின்னே புழுதியே மேகங்களாகத் திரண்டதென மக்கள் கூட்டம் வந்து கொண்டிருந்தது.



ORIENTAL SALOON

தலைநகரில் சிகையலங்காரத்திற்கு
சிறந்த இடம்

ஒரியன்டல் சலூன்

182, 1-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

# நினைத்துப் பார்க்கிறேன்!

அந்தனிஜீவா

*நினைத்துப் பார்க்கிறேன்!*

நெஞ்சின் ஞாபகக் குறிப்புகளை புரட்டிப் பார்க்கிறேன். மீண்டும், மீண்டும் அந்த நினைவுகளை அசைபோட்டு அத்மதிருப்தி அடைகிறேன். அந்தப் பசுமையான நினைவுகள் பத்து மாதங்களுக்கு மேல் ஓடிவிட்ட போதும்கூட இன்றும் நெஞ்சில் இனித்துக்கொண்டே இருக்கின்றன.

ஆகஸ்ட் மல்லிகை மலரின் நினைவுடன் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் தமிழகத்தில் திருப்பூரில் கலை, இலக்கிய பெருமன்ற மாநாட்டில் கலந்துகொண்ட இனிய எண்ணங்களை அசைபோட்டு, நெஞ்சின் ஞாபகக் குறிப்புகளைப் புரட்டுகிறேன்.

கடந்த ஆகஸ்ட் 2-ம், !3-ம் திகதிகளில் திருப்பூரில் நடைபெற்ற கலை, இலக்கிய மாநாட்டில் இலட்சங்கள்தான் எங்கள் இலட்சியம் என மார்தட்டும் மணியன்களையோ, இருட்டு இலக்கியம் படைக்கும் புஷ்பா தங்கத்துரைகளையோ, சிவப்பு பகுதிகளைத் தேடித்திரியும் எழுத்துலக பிரமாக்களையோ அந்த மாநாட்டில் காணாதது எனக்கு ஒரு திருப்தியையே தந்தது.

கம்பனிலும், பாரதியிலும் தோய்ந்த அமரர் ஜீவா, கலை இலக்கிய பெருமன்றத்தை நிறுவும் பொழுது அதற்குரிய வரலாற்றுக் கடமையை, ஒரு சமூகப் பொறுப்பை, யதார்த்த பூர்வமான கலைத்துவ பாரம்பரியத்தை அதனுடன் இணைத்துவிட்டதால் இன்று அது மிகப் பெரிய சக்தியாக விளங்குகின்றது. தேசிய விடுதலையியக்கப் பாரம்பரியமுள்ள திருப்பூரில் கலை, இலக்கியப் பெருமன்றம் கூடிய மாநாடும், அதன் நிகழ்ச்சிகளும், அதனை நேரிடையாகக் காணும் வாய்ப்புக் கிடைத்ததில் எனக்கு ஒரு புதிய அநுபவமே ஏற்பட்டது.

புதியதோர் உலகு செய்யப் பேனா பிடித்த புத்தெழுச்சியும், புதிய நம்பிக்கையும் கொண்ட படைப்பாளிகள் தமிழகம் முழுதுமிருந்து வந்திருந்தனர். தமிழகத்தின் இலக்கிய வேள்வியான 'மணிக்கொடி' அதற்குப் பின்னால் 'சரஸ்வதி' சகாப்தத்தில் மலர்ந்த ஜெயகாந்தன் முதல், இன்றைய இலக்கிய உலகின் புதிய வார்ப்பாக மூகிழ்ந்துள்ள நம்பிக்கைக்குரிய ஜெயந்தன் வரை மாநாட்டில் கலந்து கொண்டது ஒரு புதிய நம்பிக்கையைத் தந்தது.

கலை, இலக்கியத்துறையில் நச்சுப் போக்குகள் தலைவிரித்தாடுவதை இனங்காட்டி எதிர்த்துப் போராட பல படைப்பாளிகள் அறைகூவல் விடுத்தனர். பெருமன்றத் தலைவர் பேராசிரியர் நா. வானமாமலை, செயலாளர் தா. பாண்டியன் அறிக்கை முன்வைத்தனர். அறிக்கைகள் குறித்தும் பெருமன்றத்தின் நடப்புகள் குறித்தும் பலரும் கலந்து கொண்ட விவாதம் நடந்தது. விவாதம் காரசாரமாக நடந்தது. பொறுப்பான விமரிசனங்கள், தயவு தாட்சண்யமில்லாத கடுமையான விவாதங்கள், சுதந்திரமாகவே படைப்பாளிகள் ஒவ்வொரு பொறுப்புடன் தங்கள் கருத்தை வெளியிட்டனர்.

முதல் நாள் மாநாட்டில் பொது நிகழ்ச்சிகளில் முதலாவதாக இடம் பெற்ற கவியரங்கம் என்னைப் பெரிதும் கவர்ந்தது. சமூக மாற்றப் போரில் கவிஞர்களை அணிதிரளக் கோரி கவித்துவமிக்க வசன நடையில் கவியரங்கின் தலைவரான கவிஞர் மீரா கம்பீரமாக அறைகூவி அழைத்தார்.

கவிஞர்கள் பரிணாமன், தமிழ் நாடன், சக்தி, வானம்பாடி சங்கர், சுந்தர பாரதி, சங்கர். வே. நடராசன், ஜீவபாரதி, எஸ். எம். மருதாசலம், சக்திகனல், சிதம்பரநாதன், சிற்பி ஆகிய கவிதா வானின் வானம்பாடிகளான கவிஞர்கள் 'இன்னும், இனியும்' என்ற தலைப்பில் மரபுக்கவிதையாய், புதுக்கவிதையாய் இசையாய்ப் பாடி இதயங்களில் சிறகடித்தனர். கவியரங்கிற்கு சிகரம் வைத்தாற்போல கவிஞர் கே. சி. எஸ். அருணாசலம் பாடினார்.

இதனையடுத்து முற்போக்குக் கூடாரத்தில் வாழ்ந்து, வளர்ந்து நெடுமரமாக, இன்று இலக்கிய உலகின் ஜம்பவானாகத் திகழும் ஜெயகாந்தன் முழங்கினார்.

'......நம்மையெல்லாம் இணைக்கின்ற ஒன்று...... நாம் எல்லாம் இந்த நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்காக .... சோஷலிஸத்துக்காக பாடுபடுபவர்கள் என்பதேயாகும்...... இந்தக் கடமையில் தனித்தனியே இயங்கிக் கொண்டிருப்பதுக்கும் நாம் ஒன்றுபட்டுப் பாடுபட வேண்டும்' என்ற ஜெயகாந்தனின் பிரகடனத்தை உணர்ச்சிமிக்க கரவொலிகள் மூலம் மக்கள் அங்கீகரித்தனர்.

மாநாட்டில் சிறுகதைபற்றிய கருத்தரங்கிற்கு சிதம்பர ரகுநாதனும், நாவல் பற்றிய அரங்கிற்கு எஸ். தோத்தாத்திரியும் தலைமை தாங்கினர். இந்தக் கருத்தரங்குகளில் டாக்டர் தி. சு. நடராசன், தா. முத்துசாமி, பொன்மணி, கோ. மா. கோதண்டம், பொன்னீலன், ஆ. சிவசுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினர். 'நாடகம், திரைப்படம்' குறித்த கருத்தரங்கில் பேராசிரியர் ராமானுஜம் தலைமையில், அறந்தை நாராயணன், திருச்சி தியாகராஜன் நான் உட்பட பல கருத்துக்களைத் தெரிவித்தோம்.

இரண்டாவது நாள் மாநாட்டில் தமிழக கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கன் சிறப்புரையாற்றினார்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளார் நடுவராக வீற்றிருக்க 'தற்காலத் தமிழ் இலக்கியம்' பற்றிய பட்டிமன்றம் நடைபெற்றது.

கலை, இலக்கியப் பெருமன்ற மாநாட்டில் தமிழகம் முழுவதுமிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கேரளத்திலிருந்து உன்னிராஜாவும், கர்னாடகத்திலிருந்து ராஜகோபாலும், இலங்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலிருந்து நானும் கலந்து கொண்டது எழுத்தாள நண்பர்களுக்கு உற்சாகமாகவிருந்தது.

தமிழ் நாட்டில் முற்போக்கு அணியின் கீழ்தான் தரமான நம்பிக்கைக்குரிய எழுத்தாளர்கள் கூட்டாகச் செயல்பட்டு வருகிறார்கள் என்ற நம்பிக்கையை உண்மையை அநுபவ பூர்வமாக இந்த மாநாடு எனக்கு உணர்த்தியது. இயக்கத்தை விட்டு ஒதுங்கிப் போய்விட்டார் என விமர்சிக்கப்பட்ட எழுத்தாளர் ஜெயகாந்தன் மீண்டும் கலை, இலக்கிய பெருமன்றத்தின் மூலம் செயல்பட வந்துவிட்டது மீண்டும் புதிய நம்பிக்கை வளர்க்கிறது.

புதுக்கவிதைத் துறையில் ஒரு மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்திய வானம்பாடிக் கவிஞர் மீராவைச் சுற்றி நின்று உரையாடிக் கொண்டிருப்பதும், ஜெயந்தன், பொன்நீலன், பொன்மணி, புவியரசு போன்றவர்கள் விவாதித்துக் கொண்டிருப்பதும், 'ஜெயகாந்தன் ஒரு விமர்சனம்' நூல் எழுதிய தோத்தாதிரி, நா. வானமாமலை, இளைய தலைமுறை எழுத்தாளர் பலர் தங்கள் ஐயங்களைக் கேட்டதும், பல எழுத்தாளர் ஈழத்து இலக்கியங்களைப் பற்றியும் எழுத்தாளர்கள் பற்றியும் அக்கறையுடன் பல தகவல் கேட்டு அறிந்து கொண்டதை எல்லாம் நினைக்கும் பொழுது மீண்டும் தமிழகத்திற்கு ஓர் இலக்கியப் பயணம் சென்று வந்தால் என்ன என்ற எண்ணத்தை ஊட்டுகின்றது. நெஞ்சின் ஞாபகக் குறிப்புகள் எத்தனை சுவையானவை.


## எமது கிளைகளில்

நீங்கள் விரும்பும் பொருட்களைக் குறைந்த விலையில்
பெற்று மகிழ்ந்திடுவீர் இன்று!

**உங்களுக்குத் தேவையான மோட்டார் உதிரிப்பாகங்களுக்கு**

**புஸ்பா அன் கோ.**

**279, ஸ்ரான்லி ரேட்,**
**யாழ்ப்பாணம்.**

சீற் குஷன்ஸ், தோல் குளோத் வகைகள் மற்றும்
பாத அணி உற்பத்திப் பொருட்களுக்கு

**நியூ புஸ்பா ஹாட்வயர்**

**23, ஜும்மா மொஸ்க் லேன்,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**




# பழைய வார்ப்புகள்

**காவலூர் எஸ். ஜெகநாதன்**

'என்னை ஆரெண்டு இவங்களுக்குத் தெரியயில்லை. ஆறுமுகமெண்டால் கொஞ்ச நஞ்சமில்லை. பேலியாகொட நாடு பூராவும் நடுங்க வைச்சனான். அங்கை மட்டுந்தானோ... அந்தக் காலத்தில் இந்த ஊரில் நான் செய்யாத கூத்துக்களா? ஆறுமுகமெண்டால் குடல் நடுங்காதவன்கள் ஆர் இருந்தாங்கள்... அந்தக்காலத்தில......'

ஆறுமுகத்தின் குரல் முற்றத்தில் நின்று ஒலித்து ஓய்ந்தது. ஆறுமுகம் முற்றத்தில் நிற்பதற்கு அந்தக் குரலும் வாயிலும் கையிலும் மாறி மாறி கனன்று கொண்டிருக்கும் சுருட்டும்தான் சாட்சி.

அமாவாசை இருட்டு.

ஆறுமுகம் பேச்சோடு நிறுத்திக் கொள்ளாது இடைக்கிடையே இடிபோன்ற சிரிப்பையும் வெடித்தார்.

அந்தக் காலத்தில் ஊரிலே அவரது திருக்கூத்துக்களைச் சகிக்க முடியாமல் மக்கள் அவரை விரட்டியதும் நாடோடியாகி பேலியாகொடையில் நாட்டாமை வேலை செய்ததும் சகடயோகத்தால், அந்த ஊரை வறுகி முதலாளியாகி, பணந்தந்த பவிசில் ஊர்ப் பெரியாராகி கோவில் திருவிழாக்களுக்கு மட்டும் உபயகாரராகப் பிறந்த ஊருக்கு வந்து போய்க்கொண்டிருந்தவர் ஆறுமுகம். பின்னர் ஊரில் வந்து விழுந்தவர்தான். அப்புறம் பேலியாகொடை திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

ஆறுமுகம் பீச்சல் பயத்தோடு ஊருக்கு வந்து முடங்கிக் கொண்டாலும் வெண்ட கதையைமட்டும் விடவில்லை.

'நாளுக்கொரு கடிதம் கும்பிட்டுக் கும்பிட்டு எழுதுறாங்கள். வாருங்க, வந்து கடையை நடத்துங்க எண்டு. எனக்குத்தான் மனசாரத்தான் விருப்பமில்லை. இவ்வளவு காலமும் வெளியிலை இருந்திட்டம் இனிக் கடைசி காலத்திலை ஊர் வேலையளில் மினக்கெடலாமெண்டு......

அந்த மினக்கேடுதான்...... இப்போது முற்றத்தில்......

ஆறுமுகம் நிறைவெறியில் நிற்கிறார். அவருடன் நாலைந்து பேர் நிற்பது கசமுசக்கிறது.

'எங்களை ஆரெண்டு தெரியாமல் கொழுவலுக்கு வந்திருக்கினை, அவங்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்கவேணும்' குரலுக்கும் வெறியின் தடுமாற்றம். 'அப்பனே முருகா......'. பிரமாண்டமான தன் சதைப் பிண்டத்தைச் சரித்து நிமிர்த்தி உள்ளே நுழைந்த ஆறுமுகம் திண்ணையில் அமர்கிறார்.

வலதுபுறத் திண்ணையில் படுத்துக்கிடந்த நான் ஒரு மரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதைக்காக எழுந்து இருக்கிறேன். திண்ணைத் தூணோடு ஒதுங்கியிருக்கிறாள் அம்மா. ஊரில் உள்ள பெரிய பிரச்சினையை எனக்கு முன்கூட்டியே கூறாமல் விட்டதன் தவறை எண்ணியோ என்னவோ அம்மா ஒருவிதப் பயப்பிராந்தியுடன் இருக்கிறாள்.

பெரிய பிரச்சனைக்காகத்தான் அவர்கள் வந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் உடனே வெளிப்படுத்துவதாக இல்லை. சம்பாஷணை திரும்பியது.

'தம்பியின்ர படிப்புகள் எப்படி...' யூனிவர்சிற்றியிலை... கண்ட விளையாட்டிலும் ஓடித்திரியாம கவனமாப் படிக்க வேணும். அம்மாவும் உன்னை நம்பித்தா......'

'இந்த ஊரிலை முதல் யூனிவர்சிற்றிக்குப் போனவர் நீங்கதான் தம்பி. நாங்க பெருமைப்படுகிறம்'

'தம்பி எப்ப வருமெண்டுதான் காத்துக் கொண்டிருந்தனாங்கள்'

'நான் முந்தி வியாபாரத்துக்கு அங்காலைப்பக்கம் போறனான். சரியான குளிர். தம்பி எப்படிச் சமாளிக்கிறியள்'

'என்ன இருந்தாலும் எங்கட தாழ்வாரத்துக்குள்ளேயே யூனிவர்சிற்றி வந்தாப்பிறகும் அங்கைதான் போகவேணுமெண்டிருங்கள். ஏதும் குசியள் இருக்கும் என்ன தம்பி......'

வார்த்தைக்கு வார்த்தை தம்பியும் விமர்சனமுமாக மழை ஓய்ந்தது. நான் எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

'கதையை விட்டுப்போட்டு வந்த அலுவலைப் பாருங்க' காரியத்தில் கண்ணான ஒருவர்.

என்ன அலுவலோ? எனக்கென்றால் ஒன்று புரியவில்லை. சிதம்பர சக்கரத்தை எதுவோ பார்த்ததாமே அதைப்போல் இருந்தது.

'தம்பி... இந்தக் கள் இறக்கிறதுக்குப் பனைமரம் குடுக்கிற விஷயமாகத்தான். உனக்கும் சொல்ல வேணுமெண்டுதான் இருந்தனான்' அம்மா கூறிமுடிக்கவில்லை. ஆறுமுகம் குறுக்கே பாய்ந்தார்.

'பனை குடுக்கிற விசயமெண்டு சும்மா கதைச்சால் முடிஞ்சுதா? இது சிம்பிள் விசயமில்லை. மானப்பிரச்சனை. எங்கட சாதியின்ர மானப்பிரச்சனை'... இப்ப பாரும் அந்த நாளையில பத்துச் சதம் கள்ளு விக்கேக்குள்ளயும் பனைக்கு வருஷம் பத்து ரூவா தான் தந்தவங்கள். இப்ப ஒரு ரூவா பத்துச்சதம் விக்கேக்குள்ளயும் பத்து ருவாதான் தாராங்கள். எளிய வடுவாக்கள் எங்கட தலையில குடுமி கட்டப்பாக்கிறான்கள்' துள்ளிக் குதித்தார் ஒருவர்.

சட்டென்று எனக்கு ஒரு எழுத்தாள நண்பர் விரக்தியுடன் கூறுவது ஞாபகத்தில் மிதந்தது.

'அந்தக்காலத்திலை ஐந்து சதம் பேப்பர் விக்கேக்குள்ளயும் கதை எழுதிறவைக்கு இருபது ரூவாதான் குடுத்தவங்கள். இப்ப ஒரு ரூவா விக்கேக்குள்ளயும் இருபது ரூவாதான் குடுக்கிறாங்கள். இந்தப் பெரிய எழுத்தாளர்மார் பொறுக்கயில்லையா?' என்று கேட்டேன். ஒரு பொயின்ற்றிலேயே அவர்களை மடக்கிவிட்டதாக என் யூனிவர்சிற்றிப் படிப்பைப் பற்றி அவர்கள் இப்போது புரிந்திருப்பார்கள் என்ற பெருமிதத்துடன் தான் நிமிர்ந்தேன்.

ஏமாற்றம்.



'பெரியவன்களோ... மானரோசமத்த பிச்சைக்காரப் பயல்கள் பொறுப்பாங்கள். நாங்க பொறுப்பமோ. நல்ல கதை' கொலுபிடித்தவரானார் ஆறுமுகம். எனக்குக் நெஞ்சம் நெருடியது. எம் நாட்டு எழுத்தாளர்களைப் பற்றி இவர்கள்தான் எவ்வளவு கீழாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். முன்னால் இருந்தவர்களைப் பார்க்கவே என் மனம் அருவருத்தது.

'ஒரு பனைக்கு ஐம்பது ரூபா தராட்டில் கள்ளிறக்கிறதுக்கு மரம் குடுக்கிறதில்லையெண்டு நாங்க தீர்மானிச்சிருக்கிறம். மரம் முழுக்க எங்களட்டை இருக்குது. அவங்களாலை என்ன செய்ய ஏலும்? நாங்க சொல்லிறபடி ஆடத்தான் வேணும்'

'இப்பிடித்தான் நினைச்சு நாங்களெல்லாம் உசாராகிப் போட்டம். ஆனா உங்கட அம்மா மட்டும்......'

அம்மாவின்றை சீதனக் காணியில் நூற்றைம்பது பனை மரங்கள் நிற்கின்றன. சரி அரைவாசி கள்ளுப்பனை: எழுநூற்றைம்பது ரூபாவுக்குக் குறையாமல் வருடத் தொடக்கத்தில் அம்மாவுக்குக் கிடைக்கும். அப்படி இப்படி என்று இதுபோன்ற வருமானங்களும் இல்லையென்றால் அம்மாவால் எப்படி எங்களை வளர்த்திருக்க முடியும்? எனக்கு இரண்டு வயது நடக்கும் போதுதான் அப்பாவை விதி கொண்டு போய்விட்டது. அம்மா தன்னைக் கசக்கி எங்களுக்கு உரமாகி இதோ திண்ணைத் தூணோடு ஒதுங்கியிருக்கிறாள்.

'தம்பி... நாங்களெல்லாம் பனை குடுக்கிறதில்லையென்று நிப்பாட்டிப் போட்டம். உங்கட அம்மாமட்டும் காசை வாங்கிக் கொண்டு கள்ளிறக்கச் சொல்லிப்போட்டா'

'படிக்கிறனீங்க... புத்தியுள்ளனீங்க சொல்லுங்க பாப்பம் சரியா எண்டு'

'தூ...... இந்தப் பிச்சைக் காசுக்காக எங்கட பெருமை குலைய விடுகிறதா?' துள்ளி எழுந்தார் ஆறுமுகம்.

பிச்சைக்காசாம். பிச்சைக் காசு. உண்மைதான், எங்கோ இருக்கும் ஊரிலேயே போய் விழுந்து ஏமாற்றி வறுகிச் சேர்த்தவருக்கு அது பிச்சைக் காசுதான். ஆனால் எங்களுக்கு...

என் மனம் சென்ற வருடத்து நினைவுச் சுழியில் மூழ்கிவிட்டது.

சென்ற வருடம். உயர்தர வகுப்புப் பரீட்சை முடிவு, எனது உயர்தர சித்தியை அறிவித்தது. அதற்காக மகிழ நாம் குடுத்துவைத்தவர்களா? இல்லையே. இத்தனை தடைச் சுவர்களைத்தாண்டி எனக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைக்குமா என்ற ஏக்கம், கவலை.

தலைவிதியைச் சொல்லித்தானா தெரியவேண்டும். எனது மிக உயர்ந்த சித்தி தடைகளைத் தாண்டியது. தடுக்கி விழுந்த நண்பர்கள் எத்தனைபேர்... ம்...!

அம்மா என்னைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பப் பணந்தேடியலைந்து உலைந்து களைத்துவிட்டாள். கண்ட பலன் கைவிரிப்புத்தான். இதே ஆறுமுகத்திடமும் ஓடினாள். சுற்றிவளைத்தும் பார்த்ததில் மாமா முறையாம். கடை என்னவோ கரியாகி விட்டாலும் பாங்கில் இருப்பதே பல இலட்சங்கள் தேறும் என்று திமிரோடு வந்திறங்கியவர் அவர். அம்மா கெஞ்சிக் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஊரிலே இருக்கிறவைக்கு காசு தேவையெண்டால் என்ர மடியிலேதான் சுண்' என்று மறு பேச்சுப்பேச மறுத்துவிட்டார். அப்போதுதான் அம்மாவின் நினைவிலே பனைமரங்கள் சுழன்றன. கள்ளிறக்கும் கந்தன் சுழன்ருன். அம்மாவுக்குத் தயக்கம், இன்னும் பத்து நாட்கள் இருக்கின்றன வருடம் பிறக்க. முதலாந் தேதி வருடக் காசும் கையுவாக நிற்பான் கந்தன். இப்போது எப்படிக் கேட்பது......

'கந்தன் உன்னட்ட ஒரு அலுவல்'

'என்னங்க.. ...'

'என்ர மகன் யூனிவசிற்றிக்கு எடுபட்டது உனக்கும் தெரியும். இந்தக் காலத்தில் அதுவும் எடுபடுகிற காரியம் தலையாலை தண்ணி குடிச்சமாதிரி. இப்படியிருக்க கிடைச்ச இடத்தையும் போகாம விடப்படாது'

கந்தனுக்குப் புரியவில்லை. நிமிர்ந்து பார்த்தான். நான் திண்ணையிலே இருந்தனன் இருந்தபடியே இருக்கிறேன்.

'அவனை அனுப்ப அடுக்குப் பண்ணவேணும். ஒரு ஆயிரம் ரூபாயெண்டாலும் இருந்தால் தான்........ வருசம் பிறக்கப் போகுது......'

'இதுக்கா இவ்வளவு தூரம் யோசிச்சனீங்கள்! ஒரு சொல்லுச் சொன்னால் காணுதா?' என்றுவிட்டுப் போனவன் மறுநாளே பணத்துடன் வந்தான். ஆயிரம் ரூபா......

'எழுநூற்றைம்பது தானே' அம்மாவுக்குத் தயக்கம்.

'அதுக்கென்னம்மா, அடுத்த வருசத்துக் காசிலை கழிக்கலாந் தானே'

அவனுடைய உயர்ந்த உள்ளம் அம்மாவின் கண்களைக் கசிய வைத்தது. கந்தனுக்குத் தான் எத்தனை பெரிய மனது.

இந்த வருடம் முன்னைய இருநூற்றைம்பதையும் கழித்து மீதிக் காசைப் பெற்றுக்கொண்டு கள்ளிறக்குவதற்கு கந்தனை அனுமதித்து விட்டிருக்கிருள் அம்மா. அதன் விளைவுதான் ஊர் கூடியது. துள்ளிக் குதித்தது, நட்ட நடுநிசியில் தள்ளாடும் வெறியில் இத்தனை பேர் கூடி வீட்டுக்கு வந்திருக்கிருர்கள்.

'ஒரு கிழமையா நாங்க போராடிக் கொண்டிருக்கிறம். உங்கட அம்மாதான் கருங்காலி மாதிரி......'

போராட்டமா? இது என்ன போராட்டம். உற்பத்திச் சாதனங்களைத் தம்வசம் வைத்திருக்கும் முதலாளிகள் — தொழிலாளரை அடிமைகளாக்கப் பார்ப்பதற்குப் பெயரும் பேயராட்டம் தானு?

'அவங்கள் ஒற்றுமையா நிண்டு கள் ஏருமல் விட்டால்' நான் எனது நம்பிக்கையை வார்த்தையாக்குகிறேன்.

'அதுதானே சொல்லிறம். அவங்கள் முந்தின ஆக்களில்லை. இப்ப இப்ப அவங்களுக்கும் வெளிச்சம் பட்டிட்டுது. அவங்கள் ஒத்து நிக்கிறபோது நமக்குள்ள பிளவு இருக்கப்படாதெண்டுதான்' என்ருர் ஒருவர்.

'அவாவின்றை கதையை விடுவம். இப்ப அவங்கள் கள் ஏருமல் விட்டால் ஆருக்கு நட்டம்? நீங்கதான் குடிக்கக் கள் இல்லாமல் தவிப்பியள்' என்றேன் நான்.

தேவைகளை உணர்த்துவதாலும் அவர்களது வேகத்தைப் பின் தள்ள முடியும். இடி இடியென்ற சிரிப்பு குறுக்கிடுகிறது. ஆறுமுகந்தான் சிரிக்கிருர். 'தம்பிக்கு தண்ணி வென்னி பளைப் பற்றித் தெரியாது........ நாங்க கறுப்புப் பாவிப்பம்' வாயிலிருந்து சாராயத்தின் துர்நாற்றம் குப்பென்று அடிக்கிறது. குலப்பெருமை காக்கவாம் கூடியிருக்கிருர்கள்.

'அவங்களுக்கு மட்டும்தான் பனை ஏறத் தெரியுமோ? நான் ஏறி எல்லாருக்கும் இறக்கித் தாறன்' வெறியின் எல்லையில் ஒருவர்.

'இவன் அலம்பல் குமாரன்ர கதையை விடுவம். அவங்கள் எத்தினை நாளைக்குத் தாக்குப் பிடிக்கிறவங்கள். வயிறுவத்தினு எல்லாம் சரியாப்போகும்'.

'எனக்கொரு யோசனை வருகுது. அவங்களிலை நாலுபேரை கூலிக்கு வைச்சு நாமளே தொழிலைச் செய்தால் எப்பிடி. உழைப்போட உழைப்பாகவும் போகுது' ஆறுமுகத்துக்கு வியர்பாரி மூளை.

'அண்ணை அந்தக் கதையை விடுங்கோ. ஒருத்தன் வரமாட்டான். அதெல்லாம் அந்தக் காலம். இப்ப' என்ருர் ஒருவர்.

ஆறுமுகத்திற்கு அதைக் கேட்டு கொலு பிடித்துவிட்டது. 'காலமோ... நானும் பாக்கிறன் அது மாறுகிறதை! வெட்டுங்கடா பாளையை! பாளையை மட்டுமல்ல மரத்தையுமே எரியுங்கடா'.

'சரி இரண்டிலை ஒண்டு. பனைமரம் குடுக்கிறதை நிப்பாட்டிறியளோ இல்லையோ?'

'ஊரோடு ஒத்து நிக்காட்டில் செத்தவீடு கலியாணவீட்டுக்கும் ஒருத்தரும் இல்லை'

மழை பொழிந்து ஓய்ந்தது போன்ற இறுகிப்போன மௌனம். சிறிது நேரத்தில் ஊடுருவிக் கொண்டு புறப்படும் அம்மாவின் உறுதியான குரல் 'என்ர பனையைக் குடுப்பன் — குடுக்காமல் விடுவன் அதிலை மற்றவைக்குக் கதையில்லை'

'அவவின்ர கதையை விடுவம், படிக்கிற தம்பி என்ன முடிவு சொல்லுறீர்' முடிவா? அம்மாவின் முடிவைவிட வேறு ஒரு தனியான முடிவா?' நான் மௌனமாகிறேன்.

'நாங்களும் பாக்கிறம்'

'பாளையை மட்டுமில்லை கழுத்தையே வெட்டவேணும்' வெறிக் குரல்கள் நகர்கின்றன.

உறங்கச் செல்ல நள்ளிரவு கழிந்துவிட்டதால் விடிந்து எழும்பியபோது வானத்தில் ஆதவன் பிரசவமாகிவிட்டான். முற்றத்துக்கு வந்தேன். அம்மா பனைவளவுப் பக்கமே ஏக்கத்துடன் பார்த்தபடி நிற்கிருள். நானும் பார்க்கிறேன். வளவின் மத்தியில் பனம் பாளைகள் குவிந்து கிடக்கின்றன. யாரிடம் கேட்பது? யாரோடு மோதி என்ன பலன்? பாளைகள் மீண்டும் ஒட்டவா முடியும்?

படலையைத் திறந்துகொண்டு வெளியே வந்தபோது தூரத்தில் கந்தன் உற்சாகத்துடன் சைக்கிளில் வருவது தெரிகிறது. உழைக்க வரும் உற்சாகம் இந்தக் காட்சியைக் கண்டால் அவன் உள்ளம் வெடித்துத்தான் போய்விடும்.

'அண்ணை'

கால்பிரேக் போட்டு கந்தன் இறங்குகிருன். நான் பாளைகள் அறுபட்டுக் கிடப்பதைத் காட்டுகிறேன். முகத்தில் சோகம் படர்வதை அவரது சிரிப்பு மறைக்கிறது.

'தம்பி... இவங்கள் இதை மட்டுமில்லை, சாதித் திமிரிலை இதுக்கு மேலையும் செய்வாங்கள். நான் இதை எதிர்பார்த்தனுன்தான்'.

'ஒண்டுக்கையொண்டு நம்மட சனம் அடிபட்டுக்கொண்டிருக்கிறதாலைதான் நாங்கள் கீழ கீழ போறம்' என்றேன் நான்.

'உண்மைதான் தம்பி...... அதுக்காக நாங்களும் மனிசர்தானே. அவங்களுக்கிருக்கிற பிடிவாதம் எங்களுக்கில்லையா? பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குத் திரும்பப் பாக்கினம். வயிறு காய்ஞ்சா அடிமைப்பட்டு வருவமெண்டு அவங்கட நினைவு. அந்தக் காலம் மலையேறிப்போச்சு. வீட்டுக்கொருத்தன் உத்தியோகத்திலை இருக்கிறான், இல்லாதவன் விசுவமடுவிலை மண்ணிலை உழைக்கிறான். நாங்களேன் இவங்களை நம்பியிருக்கிறம்'

எனக்குப் பெருமிதமாக இருந்தது. உள்ளூரக் கவலை. இந்தப் பிரச்சினை இப்படியே தீராமல் பிரச்சனையாகவே இருந்து பூசலை வளர்த்துவிடுமோ?

'அண்ணை, பேசித் தீர்த்துக்கொண்டால்...... நான் வார்த்தைகளை முடிக்கு முன் கந்தன் குறுக்கிட்டான்.

'நாங்க தயார்தான். ஆனால் அவங்கள் பனைச் சொந்தக்காரர்கள். நாங்க தொழிலாளிகள் எண்ட வகையிலதான் பேச்சு வார்த்தை இருக்க வேணும். குறைஞ்சசாதி கூடின சாதியெண்ட முறையிலை எடுத்த வாய்க்கெல்லாம் எங்களைப் பரிசு கெடுக்கிறமாதிரி வரப்படாது. அப்பிடி வந்தா நாங்க ஓம்படமாட்டம்' உறுதியோடு நியாயத்தோடு கூறிவிட்டுக் கம்பீரமாகச் சைக்கிளில் ஏறினான் கந்தன்.


மென்மை, சுவை, தரமானவைகளுக்கு

பேக்கிங் பவுடர்

ஜெலி கிறிஸ்டல்

கஸ்ரர்ட் பவுடர்

போன்றவற்றையே தெரிந்து வாங்குங்கள்

தயாரிப்பாளர்:

பேர்ட் இன்டஸ்ரீஸ்

294, ஜோர்ஜ் ஆர். டி. சில்வா மாவத்தை,

கொழும்பு-13






# நாகமுத்து இடைக்காடர்

க. கைலாசபதி

பிரபல ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர் எஃப். ஆர். லீவிஸ், நாவல் இலக்கியத்தை வரலாற்று அடிப்படையில் நோக்கி விமர்சிக்கும் பொழுது, காலத்தால் முற்பட்ட நாவல்கள் பெரும்பாலானவை அறவியல் கோட்பாட்டைத் தழுவிய் மரபை உடையன என்று குறிப்பிட்டு, அதனைப் 'பெருமரபு' என்று விவரித்தார்.

ஆங்கில நாவல்கள் மட்டுமன்றி உலகிலே பல்வேறு மொழிகளில் முற்பட எழுந்த நாவல்களும் அறவியற் சார்புடையனவாகவே காணப்படுகின்றன. சுமார் ஒரு நூற்றாண்டு வரலாற்றைக் கண்டுள்ள தமிழ் நாவலும் இப்பொது விதிக்கு விலக்கன்று. முதல் நாவல் என்று கருதப்படும் 'பிரதாப முதலியார் சரித்திரம்' தொடக்கம் அண்மைக்காலத்து மு. வ. நாவல்கள் வரையில் அறவியல் நோக்கில் எழுதப்பட்டவை அனேகம். ஆயினும் இவ்வறவியற் பண்பு முற்பட்ட நாவல்கள் அனைத்திலும் முழுமையாகவோ வெளிப்படையாகவோ காணப்படுகிறது என்பதற்கில்லை; சிற்சில நாவலாசிரியரிடத்து அறவியற் பண்பு தலை தூக்கி நிற்கக் காணலாம். அத்தகையோரில் ஒருவரே இடைக்காடர் என்னும் புனைபெயரில் நவீனங்களும் வேறு சில நூல்களும் எழுதிய உபாத்தியாயர் த. நாகமுத்து 1868 — 1932) அவர்கள்.

இலங்கைத் தமிழிலக்கிய கர்த்தாக்கள் வரிசையில் சிறப்பான ஓர் இடம் பெற்றுள்ள ஆசிரியர், இடைக்காடு என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தமையாலும், அவருடைய முன்னோர் ஒருவர் அப்பெயரைக் கொண்டிருந்தமையாலும் நூல்கள் வெளியிட முற்பட்ட வேளையில், இடைக்காடர் 'நீலகண்டன்', 'சித்தகுமாரன்', 'வினோதக்கதைகள்' ஆகிய புனைகதைகளையும், அம்பலவாண பிள்ளை என்பவருடன் இணையாசிரியராக 'இலகுசாதகம்' என்னும் சோதிட சாஸ்திர நூலையும் வெளியிட்டார். இந்நூல்களை வெளியிட்டமையால் பெற்ற கீர்த்தியிலும் பார்க்க யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தை நிறுவியமையால் அவர் ஈட்டிய புகழ் அதிகமாகும். நாவலர் காலத்தையடுத்து அவர் காட்டிய வழியில் கல்விக் கூடங்களை நிறுவி இறவாப் புகழ் எய்தி

யோர் பலர். நாகமுத்து அவர்களின் மனைவி விசாலாட்சி அம்மாள் தில்லைநாத உபாத்தியாயரின் பேர்த்தி. தில்லைநாதர் ஆறுமுக நாவலரின் அன்புக்குப் பாத்திரமான மாணவர்; அவர் தாபித்த வித்தியாசாலையில் படிப்பித்தவர். இவற்றால் கல்விப்பணி ஆசிரியர் நாகமுத்துவிற்குக் குடும்பத்தோடு கலந்த ஒன்றாக இருந்தது எனலாம். அக்காலத்திலே பள்ளிக்கூடங்களை நிறுவுதல் 'புனித கைங்கரியமாய்க் கருதப்பட்டது. அவ்வாறு கல்வித்துறையில் வழிகோலிகளாக இருந்தோரிற் பலர் ஆற்றல் மிக்க எழுத்தாளராயும் திகழ்ந்தனர். அந்த மகத்தான மரபில் வந்தவர்தான் மகாஜனக் கல்லூரித் தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை. ஒரு விதத்தில் இது எதிர்பார்க்கக் கூடியதுமாகும். ஏனெனில் இடர்களுக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் இலட்சியப் பற்றுடன் நாட்டின் பல பகுதிகளில் ஞானவிளக்கேற்றிய ஆசிரியர்கள், அறிஞராக மாத்திரமன்றி ஆழ்ந்த தேசப்பற்றுடையோராகவும் சிந்தனையாளராக மாத்திரமன்றிச் சீர்திருத்தவாதிகளாயும் விளங்கினர். அதாவது அவர்களுடைய இலக்கிய ஆக்கங்களின் அடிப்படை பொழுது போக்கு நோக்கத்தை அன்றி பொதுமக்களின் ஏற்றத்தை இலக்காகக் கொண்டியங்கியது. அதன் விளைவாகவே அவர்களது ஆக்கங்களில் அறவியற் பண்பு முனைப்பான அம்சமாய் அமைந்தது. அறத்தின் வழி அழகு பிறந்தது.

ஆசிரியர் நாகமுத்துவும் அக்காலத்துச் சிறந்த கல்வியாளரில் ஒருவராக மட்டுமன்றிச் சிறந்த சமூக சீர்திருத்த வாதியாகவும் சேவையாளராயும் விளங்கினார். இவையனைத்தும் அவர் எழுத்துக்களிற் பிரதிபலித்தல் இயல்பேயாகும். முதலில் 'நீலகண்டன்' என்னும் நாவலை நோக்குவோம்: 19 5-ஆம் வருடம் யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பெற்று வெளிவந்த இந்நாவலின் உபதலைப்பு 'ஓர் சாதி வேளாளன்' என்பதாகும். நூலின் முகவுரையிலே ஆசிரியர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

> 'இது சாதியபிமானமின்னதென விளங்காது தம்மிற்றாழ்ந்தவர்களையிம்சை செய்பவர்களுக்குப் புத்தி புகட்டும் நோக்கமாகவும், ஏனையோருக்கு நம்மவாகளின் சாதிநிலையின்னதென உணர்த்தும் நோக்கமாகவும், எழுதப்பட்ட ஓர் கற்பனு கதை. அனைவருக்கு முபயோகமாயிருக்குமென வெண்ணிச் சன்மார்க்கம், சற்போதனை, முதலியவற்றைப் பற்றி யான்றேர் கூறியிருக்கும் உண்மைகள் ஆங்காங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன...... இக்கதை சாதிபேதம் பாராட்டுவதில் ஆரம்பமாகி, அதை விடுவதில் முடிவாகின்றது.'

ஆசிரியரின் உணர்வு பூர்வமான கூற்று நாவலின் நோக்கையும் போக்கையும் ஓரளவில் தெளிவாக்குகிறது எனலாம். ஆங்கிலேயர் ஆட்சி இலங்கையிலே தொடங்கிய காலப்பகுதியிலே கதை நிகழ்ந்தேறுவதாக ஆசிரியர் காலத்தையும் களத்தையும் சமைத்துள்ளார். ஒருவகையில் அண்மைக்கால வரலாற்றைக் கருவாகக்கொண்ட சமூக நாவல் என்றும் இதனைக் கூறுதல் பொருந்தும்.

நாவலின் தொடக்கத்தில் கதாநாயகனை நீலகண்டன் என்னும் இளைஞனை மர்மமான சூழ்நிலையிற் சந்திக்கின்றோம். மனப்புலி என்ற பிரபுவின் கையாட்கள் அவனைக் கொல்வதற்குத் திட்டங்கள் தீட்டி வருகின்றனர். ஒன்றன் பின் ஒன்றாகப் பல சூழ்ச்சிகளிலிருந்து நீலகண்டன் தப்பிக் கொள்ளுகின்றான். அவனது பட்டறிவும் கற்றறிவும் துணை செய்கின்றன. இறுதியில் அவனது உண்மைநிலை தெளிவாகிறது: புகழ்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்த அவன், நிரம்பிய சொத்துக்கும் உரிமையுடையவனாகின்றான். தன் மனதிற்கிசைந்த மங்கையாம் கோமளாவதியை மணம்முடித்து இன்பமாக வாழ்க்கை நடத்துகின்றான். தீமை செய்ய எத்தனித்தோர் ஈற்றில் தகுந்த தண்டனையைப் பெறுகின்றனர். தருமம் வெல்லும் என்ற சம்பிரதாயமான நம்பிக்கையோடு, பிரித்தானியர் புகுத்திய புதிய சட்டங்களின் படியும் தீயோர் தண்டனை பெறுவர் என்ற கருத்து நாவலில் இழையோடுகிறது. கதைச் சுருக்கம் இது தான். ஆனால் எளிமையான இக் கதைக்கருவை வைத்துக் கொண்டு சுவையும் விறுவிறுப்பும் கலைநயமும் அமைந்த நாவல் ஒன்றை ஆசிரியர் அளித்திருக்கிறார்.

ஆக்க இலக்கியங்கள் சிலவற்றைப் படிக்கும் பொழுது அவற்றின் ஆசிரியர்களைப் பற்றிய ஒரு கணிப்பும் நம்முடைய மனத்தில் தோன்றுவதுண்டு. இடைக்காடரின் புனைகதைகளைப் படிக்கும்போது ஆசிரியர் ஓர் ஆய்வறிவாளர் என்னும் எண்ணம் அடிக்கடி தோன்றிக் கொண்டேயிருக்கும். அதாவது நாவலில் வரும் பாத்திரங்களையும் சம்பவங்களையும் உணர்ச்சியின் அடிப்படையிலன்றி, சிந்தனையின் துணைக்கொண்டே — கருத்துக்களின் அடிப்படையிலேயே — அவர் நடத்திச் செல்கின்றார். சிந்தனையாளர் ஒருவர் நாவல் எனும் இலக்கிய வடிவத்தைத் தமது கருத்து விசாரத்திற்கும் வெளிப்பாட்டிற்கும் வாகனமாகக் கொள்வதை நாம் காணலாம்.

நாவலாசிரியர் தமது வாழ்க்கையின் பெரும்பகுதியைப் பள்ளிக்கூடத் தாபிதத்திலும். பாடம் சொல்லிக் கொடுப்பதிலும் செலவிட்டார். வீட்டில் இலவசமாகவே கல்வி புகட்டினர். 'நாகமுத்து வாத்தியார்' என்றே நன்கறியப்பட்டிருந்தார்; 'நீலகண்டன்', 'சித்தகுமாரன்' இரு நாவல்களிலும் ஆசிரியர் பாத்திரம் மதிப்புக்குரியதொன்றாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, ஆசிரியத் தொழிலைப் பற்றிப் பல நல்லுரைகளும் நாவல்களில் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக 'நீலகண்டன்' நாவலிலே 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்னும் அத்தியாயத்தில் ஆசிரியத் தொழிலின் மகத்துவமே விவரிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் யாழ்ப்பாணச் சமூகத்தில் நிலவிய முக்கியமான அம்சம் ஒன்றை நாவலாசிரியர் உள்ளிருந்து அநுபவித்து நுணுக்கமாக எழுதினர் எனலாம்.

'நீலகண்டன்' நாவலில் அமைந்த சிறப்பம்சம் ஒன்று இங்குக் குறிப்பிடத்தக்கது. எதிரிகள் தன்னைக் கொன்றொழிப்பதற்குச் சூழ்ச்சி செய்வதை அறிந்த நீலகண்டன் யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள பல்வேறு கிராமங்களுக்குச் சென்று அங்கெல்லாம் தலைமறைவாக முற்படுகின்றான். எதிரிகளும் விடாப்பிடியாகத் தொடர்ந்து தேடிக் கண்டு பிடித்து விடுகின்றனர். அதனால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் யாழ்ப்பாணத்தை விட்டு நீங்கி அனுராதபுரத்துக்கும் அங்கிருந்து கண்டிக்கும் செல்கிறான். அவ்வாறு அலைந்து திரியும் அவன், கல்வி கேள்விகளில் வல்லவனாகையால் செல்லுமிடங்களிலெல்லாம் பயனுள்ள பல விஷயங்களைக் கற்றுக் கிரகித்துக் கொள்வதுடன் தனது அறிவையும் பிறருக்கு வழங்குகின்றான். இது குறித்து நாவலாசிரியர் கூற்றாகப் பின்வருமாறு அமைந்துள்ளது:

> தேசசஞ்சாரம் செய்ததினால் அவருக்கு அறிவு விருத்தியானது. அன்றியும் முன்னொருபோதும் அவரறியாத அனேக காரியங்களைக் கற்றுக் கொண்டார். அவைகள் அவருடைய பிற்சீவியத்துக்கு மிகவும் உபயோகமாயிருந்தன.

நாவலின் கதாநாயகன் தனது ஞானகுருவான சுப்பிரமணிய தேசிகருக்கு எழுதிய கடிதம் ஒன்றிலும் தேச சஞ்சாரத்தின் நல்லம்சங்கள் மிகச் சிறப்பாக வருணிக்கப்பட்டுள்ளன. இன்றும் பொருத்தமான அவ்வருணனைகள் ஆசிரியரது ஆழ்ந்தகன்ற கல்வியையும், அனுபவ ஞானத்தையும், சிந்தனைத் தெளிவையும் உணர்த்துகின்றன.

தமது நாவலைக் 'கற்பனை கதை' என்று ஆசிரியர் குறிப்பிட்டிருப்பினும், அவரது வாழ்க்கை அனுபவங்கள் பெருமளவில் அதில் இடம் பெற்றுள்ளன என்பது ஆய்வாளருக்குப் புலப்படாமற் போகாது. பொதுவில் எழுத்தாளருக்கு அனுபவங்கள் கருப்பொருளாக அமைவது இயல்பே. நவீன இலக்கிய கர்த்தாக்கள் முற்கால எழுத்தாளரினின்றும் வேறுபடும் பண்புகளில் ஒன்று, அனுபவங்களை இலக்கிய ஆக்கத்திற் பயன்படுத்துவதிலேயாகும். பயன்படுத்தும் விதமும் முறையும் படைப்பாளியின் திறமையைப் பொறுத்து வேறுபடலாம்.

நாவலாசிரியர் இடைக்காடர் சிங்கப்பூருக்குப் போய் வந்தவர்; கல்கத்தா பல்கலைக் கழக முதற் பரீட்சைக்கு எழுதியவர். தமது பிரயாணங்களின் போது, வேற்று நாட்டு மக்களின் வாழ்க்கை நடையுடை பாவனை, வாழ்க்கைத் தத்துவம் முதலியவற்றை நன்கு அவதானித்திருக்கிறார். இவ்வனுபவம் நாவல்களில் ஆங்காங்கு உருமாறி வருகின்றன: ஓர் உதாரணம் பார்ப்போம். 'நீலகண்டன்' நாவலில், அனுராதபுரம் சென்ற கதாநாயகன் ஒருநாள் ஷிங்ஷொங் என்னும் சீன யாத்திரிகரைச் சந்திக்கும் நிகழ்ச்சி வருகிறது. இருவருக்கும் நடை நீண்ட உரையாடலின் மூலம் சில சீர்திருத்தக் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆசிரியர், அதே வேளையில் அன்றைய சீன சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிடத்தக்க வகையில் விளக்கமாகவும் எழுதியுள்ளமை வியப்புக்குரியதாகும். அனுபவத்திற்கு மெருகேற்றி அழகூட்டும் இலக்கிய ரஸவாதத்தின் சாயலை இவ்விடத்திற் காணலாம்.

ஆரம்பகால நாவலாசிரியர்கள் பலர், வெவ்வேறு அளவில் மேல்நாட்டுப் புனைகதைகளைத் தழுவியும் (சில சமயங்களிலே திருடியும்) தமது நவீனங்களை எழுதியுள்ளமை அண்மைக் காலத்து ஆய்வுகளால் புலப்பட்டுள்ளது. (சற்றுப் பிற்பட்ட கல்கி கூட இதற்கு விலக்கல்லர்). இவர்களது நாவல்களில் வரும் பாத்திரங்களிலேயே ஒருவகையான செயற்கைத் தன்மை இருப்பதைச் சிற்சில திறனாய்வாளர்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். ஆனால், யாழ்ப்பாணத்துக் கிராமங்கள் பலவற்றையும், தென்னிலங்கையிலுள்ள பட்டணங்களையும் கதை நிகழ் களங்களாகச் சித்திரித்துள்ள இடைக்காடரின் 'கற்பனைகதை' முழுமையான இலங்கைக் கதையாகவே மிளிர்கிறது. சற்று மிகைப்படுத்திக் கூறுவதானால் 'தேசிய' உணர்வின் ஆரம்ப நிலையை அதிற் காணலாம். கதையில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் எவ்விதமான ஐயத்துக்குமிடமின்றி, இலங்கைத் தமிழ்ப் பண்புகளைப் பெற்றிருப்பதை அவதானிக்கலாம். இச்சாதனை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதொன்றாகும்.

சமூக சீர்திருத்தக் கருத்துக்களை வலியுறுத்திய ஆசிரியர், அதேவேளையில் சைவசித்தாந்தத்திலும் பயிற்சியும் பற்றும் உடையவராகக் காணப்படுகின்றார். சுப்பிரமணிய தேசிகர் என்ற பாத்திரம் வாயிலாகச் சித்தாந்தக் கருத்துக்கள் உணர்த்தப்படுகின்றன. சித்தாந்தக் கருத்துக்களைச் சிறப்பாக எடுத்து விளக்குவதற்கென்றே ஆசிரியர் எழுதிய நாவல்தான் 'சித்தகுமாரன்' அது இரு பாகங்களாய் வெளிவந்தது. சைவசமயத்திலே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்கள் கூறப்படுவதைப் பலரும் அறிவர். நாவலின் முதலாம் பாகத்தில் முதல் மூன்று பாதங்களும், இரண்டாம் பாகத்தில் ஞானமார்க்கம் மூலம் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இது ஓர் உருவக நாவல். முகவுரையில் ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்:

> இதிற் காணப்படும் பெயர்கள், உடம்பின் இந்திரியம் கரணம், தத்துவம் முதலியவற்றின் உருவகம் ஆகையால் அவைகளின் குணங்கள் அப்பெயர்களையுடைய ஆட்களுக்கும் ஊர்களுக்கும் அமையும். சமயவாதிகள் சமய வாதஞ்செய்வதை ஒழித்து தத்தம் சமய நூல்களிற் காணப்படும் உண்மைகளை அறிவது அவர்கள் மேற் பொறுத்த கடனாகும் என்பதை உணர்த்தும் நோக்கமாக எழுதப்பட்டது.

சைவசித்தாந்தத்தைத் தத்துவ அடிப்படையாகக் கொண்டு நாவல் புனையப்பட்டிருப்பினும், நாவலிலே சமயப் பிரிவுணர்ச்சியோ, குறுகிய மனப்பான்மையுடன் கூடிய பற்றோ தலைதூக்கவில்லை. மாறாக, ஞான நிறைவால் ஏற்படக் கூடிய சமரச உணர்வே அழுத்திக் கூறப்படுகின்றது. (இது இராமகிருஷ்ண பரமஹம்ஸர் வழிவரும் நவீன சமரசத்தி செல்வாக்கு ஆசிரியரிடத்துக் காணப்படுவதற்குச் சான்றாயமையலாம்.) நாவலில் 'சிவஞான போதம்' முதலிய சாத்திர நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இதனைக் கவனிக்கும் போது தமிழகத்து நாவலாசிரியர் திரிசிரபுரம் ம, பொன்னுச்சாமிப்பிள்ளையின் நினைவு எமக்கு ஏற்படாமற் போகாது. இந்நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் பல நாவல்களை மளமளவென்று எழுதிய பொன்னுச்சாமிப்பிள்ளை தமது நாவல்களில் சித்தாந்த சாந்திரங்களிலிருந்து மேற்கோள்களைப் பெய்து எழுதினார். 'விஜயசுந்தரம்' என்னும் நாவலிலே 'பரமுக்தியடையும் உபாயம் சொல்லியிருக்கிறது' என்கிறார். 1930—19 5 காலப் பகுதியிலே பொன்னுச்சாமிப்பிள்ளையின் நாவல்கள் வெளிவந்தன. நாவல்கள் சிலவற்றின் பெயர்கள் வகைமாதிரிக்கு எடுத்துக் காட்டாய் அமைந்துள்ளன:

'ஞானசம்பந்தம்', 'ஞானம்பிகை', 'சிவஞானம்', 'ஞானப்பிரகாசம்' என்பவை ஞானமார்க்கம் தொடர்பானவை என்பது வெளிப்படை. இந் நாவல்கள் நமது ஆசிரியரைப் பாதித்திருத்தல் கூடும். சுவாமி விவேகாநந்தரால் ஈர்க்கப் பெற்ற பி. ஆர். ராஜமையர் தான் எழுதிய 'கமலாம்பாள் சரித்திரம்' என்ற நாவலில் ஆத்மார்த்த விஷயங்களை அமைத்துக் கொண்டதும், பெ. சுந்தரம்பிள்ளை 'மனோன்மணீயம்' நாடகத்தை உருவகமாகக் கொள்ளத்தக்க விதத்திற் படைத்ததும், சுப்பிரமணிய பாரதியார் ஞானரதம்' நாவலை உருவகமாகச் சமைத்ததும், ஈழத்தில் சோமசுந்தரப் புலவர் 'உயிரிளங்குமரன்' நாடகத்தை சித்தாந்தக் கருத்துக்களின் வாகனமாக இயற்றியதும் இவ்விடத்தில் நினைந்து கொள்ள வேண்டிய ப.. டப்புக்களே.

நாம் இங்குக் கவனிக்க வேண்டியது என்னவெனில், இடைக்காடர் சமரச சன்மார்க்கத்தால் கவரப்பட்டிருந்தமையே யாகும் அவர் நாவல்கள் எழுதிய காலத்திலே தமிழ்நாட்டில் தமது சொற்பொழிவுகளினாலும் கட்டுரைகள் மூலமாகவும் பிரசித்தி பெற்றிருந்தவர்களில் ஒருவரான திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும் சமரச சன்மார்க்கத்திற்கும் சமுதாய — சமய சீர்திருத்தத்திற்கும் உழைத்து வந்தார். இலங்கைக்கும் வந்திருந்தார். அவரது செல்வாக்கும் நமது நாவலாசிரிகரிடத்துக் காணப்படுகின்றது என்று எண்ணுகின்றேன். அது எவ்வாறுயினும், 'சித்தகுமாரன்' வெளிவந்தபோது ஆசிரியர், நூற்பிரதியை கலியாணசுந்தரனுருக்கு அனுப்பியிருந்தார். அவ்வேளையில் திரு. வி. க. ஆசிரியராக இருந்த 'நவசக்தி' பத்திரிகையில் 1925-ஆம் வருடம் மே மாதம் 29-ம் திகதி இதழில் நாவல் பற்றிய குறிப்பு ஒன்று வெளிவந்துள்ளது. இலங்கை ஏடுகளான 'தேசாபிமானி', 'இந்துசாதனம்' முதலியவற்றிலும் நாவல் பற்றிய குறிப்புரைகள் வெளிவந்திருக்கக் காண்கிறோம்.

சமரச ஞானத்தினுல் ஆசிரியர் கவரப்பட்டிருந்தமைக்கு வேறு சான்றுகளும் உண்டு. ஏனெனில் 1913-ம் வருடம் மே மாதம் அவரால் தாபிக்கப்பட்ட வைத்தீஸ்வர வித்தியாலயம், 1917-ம் வருடம் டிசம்பரில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் முகாமைக்குக் கையளிக்கப்பெற்றது. அக்காலத்தில் சுவாமி சர்வானந்தா இலங்கைக்கு விஜயஞ் செய்திருந்தார். ஆசிரியர் நாகமுத்து சர்வானந்தாவைப் பெரிதும் மதித்துப் போற்றினுர், சர்வானந்தர் விவேகானந்தருடைய மிக நெருங்கிய சீடர். இராமகிருஷ்ண மடம் இலங்கையில் பொறுப்பேற்று நடத்திய முதல் நிறுவனம் — வித்தியாலயம் — இதுவேயாகும். இதனை முன்மாதிரியாகக் கொண்டே பின்னர் கிழக்கிலங்கையில் சிவானந்த வித்தியாலயம் நிறுவப்பட்டது.

நாவலாசிரியராயும் கல்விமானுயும் இலட்சியப் பற்றுடன் வாழ்ந்த பள்ளிக்கூட உபாத்தியாயராகவும், சமூக சேவையாளராயும் தேசபக்தராயும் திகழ்ந்த நாகமுத்து — இடைக்காடர் தமது அறுபத்து நான்காவது வயதிலே தேகவியோகமானுர். முற்றுப் பெருத சுயசரிதை ஒன்றும், சிந்தனைக் கட்டுரைகள் சிலவும், உதிரிக் குறிப்புக்களும் கையெழுத்துப் பிரதியாக விட்டுச் சென்றுர். கருத்துக்களுக்கு முதன்மையளித்த ஆசிரியர் சுவையாகக் கதை பின்னுவதிலும் கவனம் செலுத்தினுர். இந் நூற்றுண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்துச் சமூக வாழ்க்கை எவ்வாறிருந்தது என்பதை அறிந்து கொள்ள விரும்புபவர்களுக்கு 'நீலகண்டன்' அருமையான ஒரு தகவற் களஞ்சியமாகவும் விளங்குகிறது. இயல்பான நடையிலும் முறையிலும் வருணனைகள் அமைந்துள்ளன. இலங்கைத் தமிழிலக்கியம் ஆழமாக ஆராயப்பட்டு வரும் இந்நாட்களில் இடைக்காடரின் நூல்களை நுணித்து நோக்கி ஆய்வது இன்றியமையாத முயற்சியாகும்.



மூன்று புத்தகங்களும் கொழும்பில் சி. எல். எஸ். புத்தக நிறுவனத்திலும் ஆல் சிலோன் டிஸ்டிபுயூட்டர்ஸிலும், லீலாசனுனிலும் பெற்றுக் கொள்ளலாம். யாழ்ப்பாணத்தில் பெறும் இடம் பூபாலசிங்கம் புத்தகசாலை.

## மல்லிகை

மல்லிகை மாசிகை சும்மா படித்து விட்டுப் போகும் சஞ்சிகை அல்ல. அது எதிர்கால இலக்கியத் தேவைக்காக இன்று வழி சமைக்கும் இதழ். எனவே ஓர் இதழைக் கூடத் தவற விட்டு விடாதீர்கள். உங்களது கவனக்குறைவு தரமான ஓர் இதழைத் தவற விட்டு விடக் கூடும். பின்னர் அதைச் சேர்த்து முழுத் தொகுப்பிலும் இணைக்கலாம் என அசட்டையாக இருந்தீர்களானுல் அது நடைபெருமலே போகவும் கூடும். எனவே ஒவ்வொரு இதழையும் மிகப் பொறுப்புணர்ச்சியுடன் சேமித்து வைக்கப் பாருங்கள்.

தமது அலட்சியத் தனத்தால் தவற விட்ட இதழ்களைக் கேட்டுப் பலர் எம்முடன் தொடர்பு கொள்ளுகின்றனர். சிலருக்கு உதவ முடிகிறது. பலருடைய அபிலாஷை நிறைவேறுவதில்லை.

இது எச்சரிக்கையல்ல; அன்பு வேண்டுகோள்!

குறிப்பாக உயர் கல்வி மாணவர்களும் தரமான இலக்கியச் சுவைஞர்களும் பிரதிகளைப் பத்திரப்படுத்த வேண்டும், எக் காரணத்தைக் கொண்டும் இரவல் கொடுக்கக் கூடாது.

மல்லிகை இதழ்களின் பெருமை உடன் நிகழ் காலத்தில் உடனடியாகத் தெரியவராது போகலாம். காலம் செல்லச் செல்லத்தான் இதனது உள்ளடக்கப் பெருமை கொஞ்சம் கொஞ்சமாகப் புரியும். அதைப் பூரணமாகப் புரிந்து கொள்ளக் கூடிய காலத்திற்காகவாவது இதழ்களைப் பத்திரப்படுத்துங்கள் பின்னர்தான் இந்த அறிவிப்பின் முழுக் கருத்தும் உங்களுக்கு விளங்கும்.

— ஆசிரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிப்பு

முருகையன்

'தள்ளுண்டும் மோதுண்டும் தள்ளியும் மோதியும்
கொள்ளல் குரங்கின் குணம்' என்ற காரணத்தால்
அல்லவே,
நண்பர்
அடுக்கு நெருக்கிடையே மல்லுக்கு நின்று
மடங்கிச் சுருண்டிடித்து
மிண்டி முறுக்கி விழுத்தி
விழுந்தெழும்பி
வண்டிக்குள் ஏறுவது!
மற்று, கிளாக்கரையா
செங்கோடு போடுமுன்னர்
செப்பமாய் ஓஃபீசில்
கையொப்பம் வைக்கவே,
கால் நெரிய ஏறும் இந்தப் போட்டியில்
இன்னார் புகுந்தார்.

புகைவண்டிப் பெட்டியிலே ஏறிவிட்டார் ஆயின்
பிறகவரை ஆரால் பிடிக்க இயலும்?
அடி தரையிற் பாவாது
சீமான் பல மீற்றர் ஓடுவார்.
சுற்றவுள்ள மக்கள் என்னும் சூழல் நெருக்கம் ஒன்றே
எற்றி அவரை இயக்கும்—
புறந்தள்ளும்.
முன் இழுக்கும்.
பின்னால் முடுக்கிச் சரித்துவிடும்
கன்னம் உரசும்
களிசான் கசங்கிவிடும்
தோளை இடிக்கும்
தொடையை வருடிவிடும்
ஆளைத் தழுவும்
அடித்து நொருக்கிவிடும்

மாசனத்தின் ஆற்றல் வழிநடத்த—
தாம் அசைவார்.
மாசனத்தின் போக்கை மறுத்து
எதிரே வேறு திசை போக முயன்றால்,
'புடுங்குப்பட' நேரும்.



2

ஆனால், அவருக்கோ
ஆன்ம சுதந்திரமாம் வேட்கை
மிகுதி.
விருப்புடனே, அந்தியிலே.. ......
கந்தோர் முடிந்த பிறகு,
கடற்கரையில்
உல்லாசமாக உலாவ என்று போய்விடுவார்;

இப்போதவர்க்கு நிறையச் சுதந்திரம் பார்!
முன் போல்,
புகைவண்டிப் பெட்டியிலே மாட்டுண்டே
அள்ளுப் படும் அந்த அல்லல் இல்லை அல்லவோ?
இச்சைப்படியே நடத்தல் இயலும் அன்றோ?

இச்சைப்படியே நடக்கலாம் என்றாலும்
நீர் மேல் நடக்க நினைத்தால் முடியுமா?
ஆனபடியாலே
ஆழிக்கரையோரம்
மற்றவர்கள் போலத்தான் '(உ)வாக்கிங்' புரிகின்றார்
மேலே கிளம்பிப் பறவைபோற் போவதற்கும்
கீழே தரையைத் துளைத்தபடி ஊர்வதற்கும்
இச்சை உண்டேயானாலும்
ஏலுமோ?
இல்லையே!

3

'அப்படியானால்,
அடர்ந்த பெருங்காட்டுள்ளே
போவோமா?
போனால்........
புகைவண்டி, பேருந்து
மற்றும் கடற்கரையிற் போல அங்கு
மக்கள் இரார்.
மிக்க வெறுமையிலே 'வீடு பெற' நிற்கலாம்.
ஏன் என்று கேட்க எவரும் இருக்கார்கள்
நான்
எனது நாட்டம்,
நடை விருப்பம்,
உள் இச்சை
சொல்லும் திசையிற் சுவதந்திரனாக
எங்கேனும் போவேன், வருவேன்.
அதற்குகந்த நல்ல இடம் காடுதான்;
ஆனாலும்........
அங்கோ அபாயம் மிக உண்டே
சிங்கம், புலி, கரடி, தீய நச்சுப் பாம்புண்டே,
அஞ்சும் படியான ஆபத்து நூறுண்டே!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிற் சனங்கள் இல்லை
ஆகையினால்,
அங்கிவரின் போக்கு மாறாய்ச்
சனங்கள் தலையிடார்.
என்றாலும்.........
வேறுள்ள ஆபத்தை எண்ணுகிறார்.

மேலாம் சுதந்திரத்தின் மேலாக
நண்பருடன் சுற்றத்தார் தேவை என்று தோன்றுவதால்,
காடேகும் திட்டத்தைக் கைவிட்டுச்
சித்தம் திரும்புகிறார்.

'முற்றுச் சுதந்திரம் ஏன்?
மூச்சு விட
வெளிப்புக்
கொஞ்சம் இருந்தால்
அது போதும்,
அம்மாடீ!'
என்று தெளிந்தே இதமாய்ச் சிரிக்கின்றார்.

கூறும்ற் சந்யாசம் கொள்ளும் நினைவொழித்தே
ஆறுகிறார் தேறி அவர்.

EMDEES

நறுமணத்திற்கு
நுரை வளத்திற்கு
பளிச்சிடும் வெண்மைக்கு
எம்டீஸ் சோப்

எம்டீ ஏஜன்சி, தொழிற்பேட்டை, அச்சுவேலி



## [illegible]ச்சி

மு. சடாட்சரன்

கட்டடம் சூழ்ந்து கண்ணைப் பறிக்கும்,
கன்னியர் வந்து உள்ளம் மயக்கும்,
பட்டினத்திலே ஹொட்டல் ஒன்றில்
மாடியின் மேலே தனியறை எடுத்து,
தன்னந் தனியாய்க் குடியிருக்கின்றேன்!

எனது ஜன்னலின் எதிரே இருக்கும்
இலைகள் செறிந்த ஜேம்மரக் கிளையில்
காக்கைதன் கூட்டின் அருகே வந்து
கனிவோ டிருந்து கத்தும் பறக்கும்!
கூட்டுக் குள்ளே குஞ்சுகள் பேசும்!
கொத்தி வந்தே இரையைக் கொடுக்கும்!
துணைவன் ஓடி உணவை ஊட்ட
பெடைதன் ஆணின் தலையைக் கோதி
கத்தும் திரும்பும் கொப்பில் தாவும்!
இலையின் மறைவில் இணைந்து சிரிக்கும்!

நானோ இங்கே தன்னந் தனியே!
எனது துணையோ எங்கோ தொலைவில்!
எனது மழலைகள் என்செய் வாரோ?
பகலில் இரவில் பசித்திருப் பாரோ?
அவர்களை எண்ணி அயர்வெதும் இன்றி
பட்டினத்தில் படிப்பில் மூழ்கினேன்
பரீட்சை ஒன்றில் சித்தி எய்த
படாத பாடு நான்படு கின்றேன்!
மூன்று வாரம் முடிந்து விட்டது.
இன்னும் இரண்டு கிழமைகள் சென்றால்
எனது பரீட்சையும் இனிதாய் முடியும்!

இந்தத் தேர்விலும் சித்தி பெற்றால்,
அந்தப் பதவி உடனே கிடைக்கும்!
அதுவும் சிலநாள் அலுப்புத் தட்டும்!
அதிலும் உயர்ந்த பதவியை நாடி
அரசியல் வாதியின் பின்னால் ஓடி,
அவதிப் பட்டு வெற்றியும் பெற்றால்
ஆறுதல் வருமோ யாரறிவார்கள்?

எனது பிள்ளைகள் எதிர்காலத்தை,
எண்ணி எண்ணி இங்கே முயல்கிறேன்!
அவர்களுக்காக அல்லும் பகலும்
ஹொட்டல் ஒன்றில் கூலிகொடுத்துக்
குடியிருந்துநான் பாடம் படிக்கிறேன்!
பரீட்சையில் வெற்றி கிடைத்துவிட்டால்
பிரச்சினை யாவும் தீர்ந்து
உயர்ச்சி எல்லாம் தானாய் வருமோ?......

# எங்கள் பயணம்

## இனி ஓயப் போவதில்லை!

அ. பு. முகைதீன்

எங்கள் பயணம் இனிஓயப் போவதில்லை!
எங்கள் பயணத்தை இனியார் தடுத்தாலும்
எங்கள் நடைகள் இனித் தளரப் போவதில்லை!
எங்கள் பயணம் இனி ஓயப் போவதில்லை!

என்ன இடர்கள் இனிவந்து சூழ்ந்தாலும்
இந்தப் பயணம் இடைநடுவே நில்லாது.
எங்கள் பயணம் இனித்தொடரும் இனித்தொடரும்
இந்தப் பயணம் இடைநடுவே நில்லாது.

எந்தச் சுயநலமும் இல்லாமற் பயணத்தை
சொந்தச் செலவில் சுகம்மறந்து தொடர்கின்றோம்.
இந்தக் கடும்வெயில் எமைவாட்டி வதைக்கையிலும்
அஞ்சாது நாங்கள் அடியெடுத்து வைத்துள்ளோம்.

புத்தம் புதுவழியால் போகத் துணிந்தெமக்கு
எத்தனையோ இன்னல் இனிவந்து சூழ்ந்தாலும்
நித்தம் அவைதாண்டி நீண்ட இப் பயணத்தில்
வெற்றியைக் காண விரைவாய் நடக்கின்றோம்.

எங்களுக்கு முன்னோர் இப்படியாய் பலபயணம்
சென்றார்கள் என்றால் சிறிதளவும் மக்களுக்கு
ஒன்றுமே நன்மை ஒழுங்காய் கிடைத்ததில்லை!
என்பதனால் நாங்கள் இப்பயணம் தொடர்கின்றோம்;

இந்தப் பயணத்தில் எங்களையே இழந்தாலும்
எங்களுக்குப் பின்னால் எழுந்துவரும் புதுப்படைகள்
எங்கள் சுவடுகளை இனங்கண்டு நடப்பதற்காய்
இந்தப் புதுவழியால் இப்பயணம் தொடர்கின்றோம்.

எங்களுக்கு முன்னே இருக்கின்ற மேடுபள்ளம்
நன்றாய் சமனாகி நலியோர்கள் தலைதூக்கி
என்றும் நிலத்தில் இன்புற்று இருப்பதற்காய்
இந்தப் பயணத்தை இன்று தொடர்கின்றோம்.



# புதுக்கவிதையின் கூர்ப்பு

சபா. ஜெயராசா

புதுக் கவிதைகள் பற்றிய வாதப் பிரதி வாதங்கள் ஓய்ந்து வருதல், அதன் நிலைப்பாட்டை ஓரளவு உறுதிப்படுத்தும் கூர்ப்பு நிலையின் முகையவிழ்ப்பாகக் கொள்ளத்தக்கது. இத்தகைய வாதங்கள் தமிழாய்வின், பழைமைப் பிடிப்பினைக் காட்டுகின்றன என்று ஒருபுறம் கூறக்கூடியதாக இருப்பினும், புதுமை என்பது கலையின் அடிப்படைக் கூறான கற்பனை தழுவியும் மரபு தழுவியுமே நிகழ்கின்றது என்ற உண்மையை அறியாமையும் மறுபுறம் மயக்கமிடுகின்றது.

புதுக்கவிதைகள் கற்பனையுடன் இணைந்தவை. கற்பனையின் வாயில்கள் வழியே உணர்ச்சிகளைப் பாய்ச்சுவதன் வாயிலாக, கவிஞன் புறவுலகத்தின் மீது தாக்கங்களை உருவாக்குகின்றான். சொல்லும், உருக்காட்சியும்,. குறியீடுகளும், அமைப்பும், நடையும், கற்பனையிலே தோன்றிய கலை மூலகங்களாகும்.

கற்பனை உயிர்ப்புக் கொண்டது; வாழும் வலுக் கொண்டது. மனிதனது அகக் காட்சியின் மூலாதாரமான கற்பனை, கலைக்கும் புதுக்கவிதைக்கும் வாழ்வு வழங்குகின்றது. உணர்ச்சியை வெளிப்படுத்துதலும், உணர்ச்சிக்குத் துலங்குதலும் இலக்கியத்தின் தோற்றுவாயாக அமைகின்றன.

நகர வீதிகளும், ஊர் வீதிகளும் அழகுணர்ச்சியைத் தருவனவாயினும், அவை கலைகளாக அவற்றை உணர்ச்சிகளுடன் கலந்து பிசைந்து கலையுருவத்தை வழங்கும் வணங்களைப் புதுக்கவிதைகள், ஓரளவேனும் செய்ய எத்தனிக்கின்றன. கவிஞருக்குரிய உணர்ச்சிகள் சமூகத்தின் அடித்தளமான உற்பத்தி உறவு முறைகளுடன் தொடர்பு கொண்டுள்ளமையை என்றும் நிராகரிக்க முடியாது.

இன்றைய உற்பத்தி உறவு முறைகளின் நெருக்கடிகளும், முரண்பாடுகளும் நகரங்களிலே கூடியளவு கூர்மையுடன் பிரகாசிப்பதால், நகரவளர்ச்சியுடனும், மனிதன் தனிமைப்படுத்தப்படும் அவலங்களுடனும், பல புதுக்கவிதைகள் இணைந்து நிற்கின்றன.

'அரிசி உலை கொதிக்கும்
உன்
அம்மா மனம் கொதிக்கும்
அம்மா மனம் கொதித்தால்
அகிலமெல்லாந் தீப்பிடிக்கும்'

என்ற சக்திக்கனலின் கவிதை தூங்காத தாலாட்டாக — நகர வீதியின் கண்ணீர்க் கவிதையாக வெளிவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிப் பொருட்கள் மட்டுமன்றிக் கருத்துப் பொருட்களும் உணர்ச்சிகளுடன் கலக்கப்பட்டுத் தெவிட்டாத புதுக் கவிதைகளாக்கப்படுகின்றன. அடிமைத்தனம் அநீதி, ஆக்கிரமிப்பு, போன்ற கருத்துக்கள் புதுக்கவிதைகளிலே மின்னல் வெட்டுப் போன்ற தாக்கத்துடன் வெளிவருகின்றன.

அகவடிவாக ஒருவரது மனத்திலே நீச்சலடிக்கும் கற்பனை, புறவடிவில் — பிறரும் அதனை அனுபவிக்கத்தக்க வகையில் — உருவாக மற்றப்படும் பொழுது, புதுக்கவிதையுருவங்கள் உடனுக்குடன் பாய்ந்து வருகின்றன. புதுக்கவிதைகள் சிற்றுருவங்களாக இருக்கின்றமையாற், குறைந்த சக்தியுடன் புறவடிவமாக்கப் படுவதற்கும் இலகுவாக இருக்கின்றன.

புலன் நுகர்ச்சியின் அனுபவங்களினால் உருவாக்கப்படும் அறிவு பூர்வமான ஒழுங்கமைப்பே உருவகமாகும். செவிப்புலனுக்கு மட்டுமன்றிச் கட்புலனுக்கும் அழுத்தங் கொடுக்கும் ஆற்றல் புதுக் கவிதை உருவங்களிலே மளமளவென்று வளருகின்றன;

அறிவு பூர்வமான ஒழுங்கமைப்பைக் கொண்டவை உருவங்கள் என்று கூறும்பொழுது, ஒருபுறம் எளிமையும், மறுபுறம் சிக்கலும் தலை காட்டுகின்றன. புதுக்கவிதைகளும் சிலவேளைகளிலே பள்ளி கொண்டு விடுகின்றன.

எளிமையான உருவங்களைக் கொண்ட புதுக்கவிதைகள் கூட, இரு கூறுகளாக மேலும் பிளவு படுகின்றன. 'உழைக்கும் சமுதாயத்துக்கு எந்தக் கலையினால் உதவி இருக்கின்றதோ அதற்குத்தான் மதிப்பு ஜாஸ்தி' என்று ஓர் எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார். எளிமையான புதுக்கவிதைகளில் சமூகத்துக்குப் பயன் படுபவையுமிருக்கின்றன; பயன்படாத வெற்றுப் பொதிகளும் இருக்கின்றன; உழைப்பவரின் இலக்குகளைத் திசைதிருப்பும் மாயைகளும் இருக்கின்றன. ஆகவே எளிமை மட்டும் புதுக்கவிதையின் அந்தஸ்தை உயர்த்தி விடமாட்டாது.

மனிதனது இயக்கப்பாடுகள் சூனியமான வெற்றிடத்திலிருந்து மலர்ச்சி கொள்ள முடியாது என்ற கருத்து, புதுக் கவிதைகளுக்கும் பொருந்தும். புதுக்கவிதைகளுக்கு மூலகமாக விளங்குவது மொழியாகையினால், புதுக்கவிதைகளும் மரபிலே மூழ்கி நிற்கின்றன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உருக் கொடுத்து வளர்க்கப்பட்ட மரபுக் களஞ்சியங்கள் மொழியிலே பொதிந்துள்ளன. மரபு என்பது வேண்டாத பழைமையன்று. அது உயிர்ப்புள்ள வலுவும் இயக்கமும் கொண்டது, இலக்கிய உருவங்களிலே உண்டாகும் புரட்சிகள் கூட மரபைத் தழுவிய வண்ணமே நிற்கின்றன. மரபு சுவறி நிற்கும் மொழியை இலாவகமாகக் கையாண்டு புதிய உருக் காட்சிகளைத் தோற்றுவிப்பதே புதுக் கவிதைகளின் சாதனைகளாகும். 'பொதுவாக புதுக்கவிதைகள் நகரக் காட்சிகளையும், களமற்ற காட்சிகளையுமே சித்திரித்திருந்தன. 'ஊர் வீதி' தொகுதியில், யாழ்ப்பாணக் கிராமத்துக்குச் செல்லும் உணர்வுகளும் தனிக் கம்பீரத்துடன் துடிக்கின்றன' என்று பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் அண்மையிற் குறிப்பிட்டமை, புதுக்கவிதைகளின் அண்மைக்காலக் கூர்ப்பு நிலையினைக் காட்டுகின்றது.



ஆரம்பக்காலத்திற் புதுக் கவிதைகளுடன் ஒட்டிப் பழக முடியாமற் போனமைக்குக் காரணம், அவற்றிலே காணப்பட்ட பலவீனங்களாரும். களமற்ற காட்சிச் சித்திரிப்பும், நிஜவாழ்க்கையுடன்ஒட்டியுறவாடாத சொல்வீச்சுக்களும் காணப்பட்டமை அடிப்படையான பலவீனங்களாகவுள்ளன. அவற்றினால் பொருளும் வடிவமும் பொருந்தி இசைய முடியாத நிலையும், திச்குமுக்குப்படும் நிலையும் காணப்பட்டன.

அவற்றைச் சற்று ஆழமாக நோக்குவதற்கு, சஞ்சிகைகளும், பத்திரிகைகளும், வளர்த்து வரும் கைவினையியல்புகள் பற்றி நோக்குதல் வேண்டும். படைப்பாற்றல் மிக்க ஒரு கலைஞன் கருத்தும், உணர்ச்சியுங், கற்பனையுங் கலந்த உயிர்ப்புடைய இலக்கிய வடிவத்தை உண்டாக்குகின்றான். ஆனால் அந்த வடிவங்களையொத்த நகல்களைத் தயாரிக்கும் பண்புகளைப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் வளர்க்க முனைகின்றன. இத்தகைய பண்பு, கலைக்குப் பதிலாகக் கைவினையியல்புகளையே வளர்க்கின்றன. 'ஸ்டார்' எழுத்தாளர்கள் முன்மாதிரி உருவங்களாக வைக்கப்பட்டு, அவர்களின் ஆக்கங்களையொத்த படைப்புக்களைத் தயாரிக்கும் வினைத்திறன்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. அவர்கள் கையாண்ட சொற்கள், சொற்றொடர்கள் போன்றவையும் மூன் பின் யோசனையின்றிப் பின்பற்றப்படும் பொழுது, நிஜவாழ்க்கையுடன் ஒட்டியுறவாடாத பண்பு வளர்கின்றது. இத்தகைய தாக்குதல்கள் புதுக் கவிதைகளுக்கு மட்டுமன்றி ஏனைய கலையுருவங்களுக்கும் ஏற்படுகின்றன. சந்தை நிலைமைகளை நோக்கிய சஞ்சிகைகளின் தேவைகளுக்காக காமநெடியும் பூசப்படுகின்றன.

புதுக் கவிதையை நிராகரிப்போர் முன்வைக்கும் காரணங்களுள் அதன் உருக்காட்சிப் பண்பும் ஒன்றாகும். உருவக அணி தமிழ் இலக்கியங்களுக்கு மிகப்பழையதாக இருந்தலைப் பலர் நுணுகி நோக்குவதில்லை; உருவக அணியின் கூர்ப்பு நிலையாகவும், வளர்ச்சி நிலையாகவும் உருக்க இப் பண்புகள் தோன்றி வருகின்றன.

உருக்காட்சி, கருத்துக்களுக்குக் கலையுருவங் கொடுக்கின்றது. புதுக்கவிதைகளிலே தோற்றுவிக்கப்படும் எதிர்பாராத நிபந்தனைப்பகடுகள் புதுமைக் குதூகலிப்பைக் கொடுக்கின்றன. கருத்துக்களுக்கு உருவங் கொடுக்கும் உருக் காட்சிகள் கருத்துக்களைவிட மேலோங்கி நின்றாலோ, அல்லது ஏமாற்றி நின்றாலோ, அவை நிலையில் இழிந்த பண்பைக் கொள்ளுகின்றன. விளங்காத உருக் காட்சிகள் அறிவைத் தனிச் சொத்தாக்கும் தனியுரிமைப் பாங்கு கொண்டவை; பொருள் வேறுபடுத்தி இலாபம் சம்பா

---

சபா. ஜெயராசாவின்

புதுக் கவிதைத் தொகுப்பு

## ஊர் வீதி

விலை ரூபா 4

இக் கவிதைத் தொகுதி உங்களுக்கு நேரடியாகக் கிடைக்க வேண்டுமாக இருந்தால் நாலு ரூபாய்க்குக் காசுக் கட்டளை அனுப்பி மல்லிகையில் பெற்றுக் கொள்ளலாம்.

---

திக்க முயல்பவை. உருவக் காட்சியென்பது உள்ளடக்கத்தின் எறிவாக இருத்தலினால், கலங்கிய உள்ளடக்கம், சீரணிக்க முடியாத உருக்காட்சிகளை ஏற்படுத்தலையுங் காண்கின்றோம்.

சொற்களைக் குத்தாக அடுக்குதலும், கற்பனை நவிர்ச்சியுருவங்களுக்குக் கட்டுப்படுவதும், நொடிகள் விடுவதும், உயிர்ப்பு மிக்க, மக்கள் மொழியிலிருந்து வெகுதூரம் விலகி நிற்பதும், சொற்களை மயக்க வில்லைகளாகப் பயன்படுத்த எண்ணுதலும் புதுக்கவிதைகளாக மாட்டா.

சொற்களைச் சிக்கனமாகக் கையாண்டு, வானளாவிய கருத்தை வருவித்தால், கவிதையின் பேரியல்புகளுள் ஒன்றாக விளங்குகின்றது என்று கூறும் பொழுது, அதற்குரிய எடுத்துக் காட்டுகள் புதுக் கவிதைகளிலேயே இன்று நிரம்பிக் காணப்படுகின்றன. இவை புதுக்கவிதையின் சாதனையை எடுத்துக் காட்டுகின்றன.

புதுக்கவிதைகள் உருக்காட்சிகளின் வாயிலாக மனத்திரையிலே பலவிதமான நாடகங்களை உருவாக்குகின்றன. ஓசை அலகுகள் முக்கியம் பெறுமற் போகலாம். ஆனால் ஓசையை முற்றாக நிராகரிக்காது, தேவை நோக்கி மீள வலியுறுத்தியாகத் தழுவிக் கொள்ளலாம். ஏற்கனவே வரையறை செய்யப்பட்ட யாப்பின் கூறுகளை இழுத்தும், நெளித்தும், மடக்கியும், விரித்தும் விடக்கூடிய ஆற்றல் புதுக்கவிதைகளுக்கேயுண்டு.

நவகவிதைகள் சிந்தனைக்கும் கற்பனைக்கும் புதிய நிபந்தனைப் பாடுகளைத் தருகின்றன. 'கண்டறியாதன கண்டேன்' என்று பாடுவது நமது மரபு தானே.

❋

அச்சுக்கலை ஒரு அருமையான கலை
அதை அற்புதமாகச் செய்வதே எமது வேலை

கொழும்பில் அற்புதமான அச்சக வேலைகளுக்கு
எம்மை ஒரு தடவை அணுகுங்கள்.

தொலைபேசி:
35422

நியூ கணேசன் பிரிண்டர்ஸ்
22, அப்துல் ஜப்பார் மாவத்தை,
கொழும்பு - 12



# இந்திய சினிமா பற்றி ஒரு புத்தகம்

ஜி. ரெபின்ஸ்காயா

ஆழ்ந்த தேசிய உருவமும் உள்ளடக்கமும் கொண்ட கலையாக இந்திய சினிமா வளர்ந்துள்ளது. 1950 ஆம் ஆண்டுகளில் சோவியத் ரசிகர்கள் இந்திய சினிமாவைக் கண்டபோது அது ஒரு விசேடக் கலை என்று அவர்களுக்குத் தோன்றியது. இந்திய சினிமாவின் தனித் தன்மையான அம்சங்களை அவர்கள் உடனே புரிந்து ஏற்றுக் கொண்டனர். நர்கிஸ், ராஜ்கபூர், பால்ராஜ் சாஹ்னி, பிமல் ராய் மற்றும் பிற இந்திய சினிமாக் கலைஞர்களை அவர்கள் பாராட்டினர்.

'இந்திய சினிமாவின்பால் சோவியத் ரசிகர்களின் உணர்ச்சிகளை ஒரு வெறி என்றே சொல்ல வேண்டும். ரசிகர்களின் அங்கீகாரத்தையும் மதிப்புமிக்க பாராட்டையும் இந்திய சினிமா முதன் முதலாகப் பெற்ற நாடு சோவியத் யூனியன் என்ற கூறுவதில் சிறிதும் தவறில்லை' என்ற சோபலேவ் எழுதுகிறார்.

இந்திய சினிமாத் துறை, நாட்டின் தற்கால கலாசார அம்சத்தின் ஒரு முக்கிய அம்சம் என்ற சோபலேவ் கருதுகிறார். இந்திய சினிமாவின் சகல போக்குகள் பற்றியும், அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் அவர் ஆராய்கிறார். சத்யஜித்ரேயின் படைப்பாற்றல் பற்றியும், 'கல்கத்தா சினிமாத் துறை'யின் சாதனைகள் பற்றியும், கேரள படத் தயாரிப்பாளர்களின் படைப்புக்கள் பற்றியும், சென்னை மற்றும் பம்பாய் சினிமா ஸ்ருடியோக்கள் பற்றியும், அவர் விரிவாக எழுதியுள்ளார்.

'இந்திய சினிமாவில் ஆடல் பாடல்கள் நிரம்ப உள்ளன. தமது கவலைகளைச் சிறிது நேரம் மறக்க விரும்புவோர் மட்டுமின்றி, படிப்பாளிகளும், அறிவுத் துறையினரும் அவற்றை ரசிக்கின்றனர்' என்று சோபலேவ் எழுதுகிறார்.

இந்திய சினிமாவின் வளர்ச்சி பற்றிய அனுபவங்களும், அவற்றின் முக்கியத்துவமும், உலகம் முழுமைக்கும் பொதுவானவை என்று இந்நூலாசிரியர் கூறுகிறார். காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற இளம் நாடுகளது தேசிய கலாசாரங்களின் மறுமலர்ச்சியும் பரிபூரண வளர்ச்சியும், அந்த நாடுகளுக்கு மிக முக்கியமானவை. எனினும் ஏகாதிபத்தியமானது அந்த நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதாரச் சுதந்திரத்தில் ஈடுபாடு காட்டாதது போலவே, அவற்றின் கலாசார சுதந்திரத்திலும் ஈடுபாடு காட்டவில்லை. எனவேதான் நியூயார்க், லண்டன், பாரிஸ், டோக்கியோ சினிமா டெலிவிஷன் ஸ்ருடியோக்களால் வழங்கப்படும் 'சித்தாந்தச் செல்வ'த்தை வளர்முக நாடுகளும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற மேலை நாடுகளில் இடையறுத முழக்கம் எழுகிறது.

தகவல் போக்குவரத்துச் சாதனங்கள் உலகளாவிய முறையில் வளர்ந்து வருகின்ற இவ்வேளையில், சினிமாக் கலைப் படைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்கள் தமது தேசியத் தன்மையை இழந்து வருகின்றன என்று மேலைய சமூக இயலாளர்களும் விமர்சகர்களும் கூறுகின்றனர். இக்கூற்றுக்களைத் தனது சாதனைகள் மூலம் இந்தியா நிராகரித்து வருகிறது; எனவே இந்தியாவின் அனுபவம் முக்கியமானது.

'இந்திய சினிமாத் துறையானது ரசிகர்களை மட்டுமின்றி, ஆராய்ச்சியாளர்களையும் மிகவும் கவர்ந்து வருகிறது' என்ற இந்நூலின் ஆசிரியர் சோபலேவ் கூறுகிறார். ❈

## கூட்டுச் சேரா நாடுகளின் 6—வது மகாநாடு

ஹவானா 'ஷலோ!'

கூட்டுச் சேரா நாடுகளின் 6-வது உச்சகட்ட மாநாடு கியூபாவின் தலைநகரான ஹவானாவில் கூடும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அதே சமயத்தில், கூட்டுச் சேரா இயக்கத்தைப் பிளக்கவும், அதன் ஏகாதிபத்திய — எதிர்ப்பு மற்றும் காலனியாதிக்க — எதிர்ப்பு முனையை மழுங்கடிக்கவும், கூட்டுச் சேரா நாடுகள் மற்றும் சோஷலிச கூட்டுச் சமுதாய நாடுகளிடையே மோதலை ஏற்படுத்தவும், சர்வதேச பிற்போக்குச் சக்திகள் தீவிரமாக முயலுகின்றன.

கூட்டுச் சேரா இயக்கத்தின் மீதான பிரதான தாக்குதல், எப்போதும் மேலை நாடுகளிடமிருந்தே வருகிறது. புதிதாக விடுதலை பெற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடவோ அல்லது ஒரு பூசலைத் தூண்டவோ சர்வதேச பிற்போக்குச் சக்திகள் முயலும் பொழுது, கூட்டுச் சேரா இயக்கத்தின் உறுப்பினர்கள் இச்செயல்களை உலக அரங்கில் மிக வன்மையாகக் கண்டிக்கின்றனர் என்பதை வரலாற்று அனுபவம் காட்டுகின்றது. எனவேதான், கூட்டுச் சேரா இயக்கத்தின்பால் ஏகாதிபத்திய வட்டாரங்கள் தாக்குதல் தொடுக்கின்றன; இன்றைய சர்வதேச உறவுகளின் அமைப்பில் மிக முக்கிய அம்சமாக விளங்கும் கூட்டுச் சேரா இயக்கத்தைப் பலவீனப்படுத்தவும், அதற்கு சோவியத் — எதிர்ப்பு மற்றும் சோஷலிச — எதிர்ப்புத் தன்மையை அளிக்கவும் மேலை நாடுகள் எல்லா வகையிலும் முயலுகின்றன.

இத்தகைய செயல்களைப் பீகிங்கும் ஆதரிக்கிறது. கூட்டுச் சேரா இயக்கத்தைத் தனது அரசியல் விருப்பங்களுக்குக் கீழ்ப்படியச் செய்யும் நோக்குடன், இந்த இயக்கத்தில் ஊடுருவவும், வேரூன்றி நிற்கவும், கடந்த சில மாதங்களாகப் பீகிங் பெரு முயற்சி செய்து வருகிறது.

சமாதானம், மக்களின் பந்தோபஸ்து, காலனியாதிக்கம், இனவெறி, இன ஒதுக்கல் ஆகியவற்றின் சகல தளங்களையும் இறுதியாக ஒழித்தல், சர்வதேச ஒத்துழைப்பைப் பரந்த அளவில் வளர்த்தல், சமத்துவமான மற்றும் நியாயமான அடிப்படையில் சர்வதேசப் பொருளாதார உறவுகளைப் புனரமைத்தல் என்னும் அயல்துறைக் கோட்பாடுகளின் அடிப்படையில்



கூட்டுச் சேரா நாடுகளுக்கும் சோஷலிச நாடுகளுக்கும் இடையே உறவுகள் வளர்ந்து வருகின்றன.

விடுதலை பெற்ற இளம் நாடுகளின் அரசுரிமை அல்லது பந்தோபஸ்தைச் சர்வதேச பிற்போக்குச் சக்திகள் அச்சுறுத்தும் பொழுதெல்லாம், அந்த இளம் நாடுகளுக்குச் சோஷலிச கூட்டுச் சமுதாயம் உதவியுள்ளது. ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவிலுள்ள 5 நாடுகளுக்கு, பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சில் (சி. எம். இ. ஏ.) நாடுகள், பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப உதவி அளித்து வருகின்றன. சி. எம். இ. ஏயின் ஒத்துழைப்புடன், தொழில் மற்றும் விவசாயத் துறைகளில் 4,00 திட்ட நிலையங்களை வளர்முக நாடுகள் கட்டியுள்ளன. அல்லது கட்டி வருகின்றன. வளர்முக நாடுகளைச் சேர்ந்த சுமார் 10 லட்சம் ஊழியர்களுக்குப் பல்வேறு துறைகளில் சி. எம். இ. ஏ. நாடுகள் பயிற்சி அளித்துள்ளன.

கூட்டுச் சேரா இயக்கத்தைத் தனது 'கைப்பிடியில்' வைத்திருக்கச் சோவியத் யூனியன் விரும்புகிறது என்ற பிரசாரம் ஆதாரமற்றது மற்றும் அபாயகரமானது என்பதை, இவை அனைத்தும் நிரூபிக்கின்றன. வளர்முக நாடுகளுக்கும் சோஷலிச நாடுகளுக்கும் இடையே பிளவு உண்டுபண்ண வேண்டும் என்பதே இந்தப் பிரசாரத்தின் நோக்கம்.

முழுச் சமத்துவம், பரஸ்பர மரியாதை, பயனுள்ள ஒத்துழைப்பு, பரஸ்பரம் உள் விவகாரங்களில் தலையிடாமை என்ற அடிப்படையில்தான் ஒவ்வொரு கூட்டுச் சேரா நாட்டுடனும், கூட்டுச் சேரா இயக்கத்துடனும், சோவியத் நாட்டின் உறவுகள் அமைந்துள்ளன. ❈

❈ ரசாயனப் பொருட்கள்
❈ வர்ணப் பூச்சுக்கள்
❈ உபகரணப் பொருட்கள்

எம்மிடம் நிதானமான விலையில் கிடைக்கும்

**யாழ்ப்பாணக் கமக்காரர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்**

புதிய இறக்குமதித் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யவேண்டிய எல்லாவித சாமான்களையும் இறக்குமதி செய்து தருவோம்

★ **வியாபாரிகள் தொடர்பு கொள்ளவும்** ★

உள்நாட்டு விளைபொருள் மொத்த கமிஷன் வியாபாரிகள்

**ஹுசைன் பிறதர்ஸ்**

137, மலிபன் வீதி,
**கொழும்பு - 11**
தொலைபேசி: 20712



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் முஸ்லிம்களின் வளமான வாழ்வு

இதோர் திரயனேவ்ஸ்கி

புகழ் வெற்ற உஸ்பெக் நகரமாக புஹாராவில், தனிச் சிறப்பு வாய்ந்த கட்டடக் கலைச் சின்னங்கள், ஏராளமாக உள்ளன. இவை மிகுந்த கவனத்துடன் பேணிப் பாதுகாகச் பெறுகின்றன. இவற்றுள் பல. இஸ்லாமிய வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை.

எடுத்துக்காட்டாக, கல்யான் (மினரா) என்பது, எட்டு நூற்றூண்டுகளுக்கு மேல் புஹாராவில் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது: முன்னொரு காலத்தில் ஜும்மாவுக்கு (வெள்ளிக்கிழமைத் தொழுகைக்கு) பாங்கு ஒலித்து முஸ்லிம்களை அழைக்கும் இடமாக இருந்ததோடு, காவல் கோபுரமாகவும் இது விளங்கியது. 1530 — 1536 - ல் கட்டப்பெற்ற மீர் — அரப் — மதரஸா, ஜாமா முஸ்ஜித்தில் உள்ளது. இந்த முஸ்ஜித்தில் மேல் பகுதியையும், மினராவையும் ஒரு தாழ்வாரம் இணைக்கிறது.

மதரஸாவின் இயக்குநரான அப்துல்லாயேவ் பேசுகையில், மாணவர்கள் அங்கு ஏழாண்டுகள் பயில்வதாகக் கூறினார். ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதத்தில் நுழைவுத் தேர்வுகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாணவரும் 'இண்டர்வியூ' வுக்குப் பிறகு, நுழைவுத் தேர்வு எழுதுகிறார்; திருக்குர் — ஆனை ஓப்புவித்தல், சோவியத் யூனியனின் வரலாறு மற்றும் பூகோளம் ஆகியவற்றின் தேர்வுகள் நடைபெறுகின்றன.

இந்த மதரஸாவின் பாடத் திட்டத்தில், இருபது பொருள்கள் உள்ளன. திருக்குர் ஆன், (ஹகீஸ் நபிகள் நாயகத்தின் போதனைகள்) முஸ்லீம் சட்டம், அரபு. உஸ்பெக், பாரசீக மொழிகள், சோவியத் யூனியனின் வரலாறு, சோவியத் அரசியல் சட்டம் முதலியவற்றை மாணவர்கள் பயிலுகின்றனர்.

மதரஸாவில் அனுபவமிக்க ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். மீர் — அரப் மதரஸாவில் பட்டம் பெற்றவர்களில் பெரும்பாலோர், தாஷ்கந்திலுள்ள முஸ்லீம் அகாடமியில் தமது அறிவை மேலும் அபிவிருத்தி செய்து கொண்டுள்ளனர். சிலர் அயல் நாட்டு உயர் கல்வி நிலையங்களில் பயின்றவர்கள். எடுத்துக்காட்டாக, இஸ்மாயின் ரெய்ஹானேவ், மொராக்கோவில் பயின்றவர்; முஹ்தார் அப்துல்லாயேவ், தமக்கஸில் ஷரியத் துறையில் பட்டம் பெற்றவர்.

இந்த மதரஸாவுக்கு அருகில் மற்றொரு பிரபல மசூதி உள்ளது. தலைமைப் பொறுப்பாளராக அப்துஸ் ஸமத் ரஹிமோவ், 'எமது மத நம்பிக்கைகளில், எனக்கோ, என் குழந்தைகளுக்கோ, பேரக் குழந்தைகளுக்கோ, அல்லது இதர முஸ்லீம்களுக்கோ எவ்விதக் கட்டுப்பாடுகளும் விதிக்கப் பெறவில்லை' என்றார். அவரது மகன், கூட்டுறவுப் பள்ளி ஆசிரியர்; அவரது பேரன், ஒரு பிரபல ஓவியர்.



# தழும்புகள்

திக்குவல்லை - கமால்

ஹாமிக் ஆலிம் அவர்களின் உணர்ச்சிவசமான 'ஹதீஸ்' பிரசங்கம் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. பக்தகோடிகள் அனைவரும் அதில் ஒன்றிப்போய் லயித்திருந்தார்கள். வானொலி, முஸ்லிம் நிகழ்ச்சி மூலமாக மாத்திரமே இதுகாலவரையில் அவரின் பிரசங்கத்தைக் கேட்டு வந்த பலருக்கு அன்றுதான் அவரையும் அவர் பிரசங்கத்தையும் நேருக்குநேர் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருந்தது.

பள்ளிவாசலின் முற்றவெளி பிரத்தியேகமான தகர அடைப்பால் அமைவு பெற்றிருந்தது. அதற்குள் அனைவரும் அமைதியாக அமர்ந்திருந்து. அவதானித்திருந்த காட்சி அலாதியாகவிருந்தது. பிராந்திய ரீதியான 'தப்லீஃ இஜ்திமா' வென்றால், அப்பகுதியில் உள்ளடங்கும் ஊர்களிலிருந்து மாத்திரமல்ல நாட்டின் நாலா பக்கங்களிலுமிருந்தும் 'இஹ்வான்' கள் வருகை தராமலிருப்பார்களா என்ன? ஒவ்வொரு கிராமத்தவர்களுக்கும் ஒவ்வொரு பகுதி ஒதுக்கப்பட்டு, ஊரின் பெயரும் அட்டையொன்றில் எழுதித் தொங்க விடப்பட்டிருந்தது. அவர்களுக்காக தற்காலிகமாக தண்ணீர், மலசலகூட, சாப்பாட்டு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பிரசங்கிகளுக்கான மேடையில் அமர்ந்தபடி ஹாமித் ஆலிம் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். இடைக்கிடை அடர்ந்த தனது தாடியை விரல்களால் கோதிவிட்டுக் கொண்டார். ரியூப் லைட்களின் பால் வெளிச்சம் அவர் முகத்தில் படர்ந்து, இன்னும் ஒளி வீச்சை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

ஈமானின் பலவீனம், நபி (ஸல்) அவர்களின் எளிமை, இன்றைய முஸ்லிம்களின் நிலை... இப்படியெல்லாம் மூலாதார எடுகோள்களோடு அவர் பேசிக் கொண்டிருந்ததை, அமைதித் தவத்தோடு கேட்டுக் கொண்டிருந்த சிலரின் கண்கள் அவர்களையறியாமலேயே கசிந்தன. தாங்கள் எவ்வளவு தூரம் இஸ்லாமியத்தை விட்டுத் தூர விலகிவிட்டோமே என்பதை நினைக்க அவர்களாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுக்க இயலவில்லைப் போலும்!

இஷாத் தொழுகையைத் தொடர்ந்து சுமார் ஒரு மணி நேரமாக நிகழ்ந்த ஹாமித் ஆலிமின் பிரசங்கம் முற்றுப் பெற்ற போதுதான் டலரின் கவனம் வேறுபக்கம் திரும்பியது.

❖

நூற்றுக் கணக்காக வருகை தந்திருந்தவர்களின் வசதியை முன்னிட்டு, இரண்டு ரூபாய்க்கு சாப்பாடு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதற்காக பள்ளிவாசலிலிருந்து சற்றுத் தள்ளி அமைந்திருந்த பள்ளிக்கூடம் கைகொடுத்திருந்தது.

பின்னப்பட்ட தென்னோலைகள் அமர்வாகத் தரையில் விரிக்கப்பட்டிருந்தன. அதிலே டிக்கட்டுகளைக் கொடுத்து ஆறு பேர் அமர்ந்ததும் ஒரு 'சவன்' சோறு அவர்களுக்குச் சொந்தமாகிவிடும். இறைச்சிக் கறியும் கூட்டுக் கறியொன்றும் அதிலேயே வைக்கப்பட்டிருந்தன.

'ஹாமிக் ஆலிமின் பேச்சு எவ்வளவு அருமையாகவிருந்தது' ஒருவர் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

அவரோடு அமர்ந்திருந்த சவன் உரித்தாளிகள் தங்களது ஆமோதிப்பை வெளிப்படுத்தினர். அதைத் தொடர்ந்து அவர்களுக்குள்ளேயே அறிமுகப் படலம் தொடர்ந்தது.

ஒருவர் ஹம்பாந்தோட்டை இன்னொருவர் யக்கல்முல்லை, இருவர் மீயல்லை, ஏனைய இருவரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாலமுனையும் ஒலுவிலையும் சேர்ந்தவர்கள். தொழில் வாய்ப்பு ரீதியாக அவர்களைப் பார்க்கும்போது இரு ஆசிரியர்கள், இரு கடைச் சிப்பந்திகள், மற்ற இருவரும் அரச நிறுவனச் சிற்றூழியர்கள்.

அந்த அறுவரையும் மாத்திரமென்றி அங்குள்ள அனைவரையுமே இப்படியிப்படி வகைப்படுத்தி விடலாமே. ஆயினும் அல்லாஹ்வின் பாதையில் எண்ணம் வைத்துப் புறப்பட்டு இங்கு வந்து இப்படியாக ஒன்றிரண்டிருநதனர்.

'இஜ்திமா' முடிவடைவதைத் தொடர்ந்து நாட்டின் நாலாபுறங்களுக்கும் குழுக்குழுவாக அவர்கள் 'தப்லீஃ வேலை செய்யப் புறப்பட்டு விடுவார்களே!

'பிஸ்மில்லாஹ்'

அனைவரும் சாப்பிட ஆரம்பித்துவிட்டனர். தனித்தனியே தங்களுக்கு விருப்பமானபடி உண்டு பழகிய அவர்கள், ஒன்று கலந்து ஒரேவகையான உணவைப் பலதரப்பட்டவர்களும் உண்பதிலும் ஒரு சகோதரத்துவம் இழையோடுகின்றதல்லவா?

அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோர் கவனத்தைக் கவருமாப்போல் அந்த ஒலி எழுந்தது. அது மூத்த ஹாஜியாரின் பென்ஸ்காரின் ஒலிதானென்பது ஊரவர்களுக்கு மாத்திரந்தானே தெரியும்! பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த ஹாமித் ஆலிமையும் சுமந்து கொண்டு அக்கார் மூத்தஹாஜியாரின் பங்களா நோக்கி விரைந்தது. அங்குதான் அவருக்குச் சாப்பாட்டு ஏற்பாடு. ஹாஜியார் வீட்டுச் சாப்பாடென்றால் சும்மாவா.....?

❖



# மல்லிகை

## சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா [மலர் உட்பட] | 15 — 00 |
| தனிப்பிரதி | 1 — 0? |
| இந்தியா, மலேசியா | 20 — 00 |

(தபாற் செலவு உட்பட)

இரவு பத்து மணிக்கெல்லாம் கூடாரத்திலும் பள்ளிச் சாலைகளிலுமாக அனைவரும் படுப்பதற்கு தயாராகிவிட்டார்கள். அடுத்தநாள் 'சுபஹம'த் தொழுகையோடு மூன்றாவது நாளாக 'இஜ்திமா' தொடர்கிறல்லவா?

அவரவர்கள் கொண்டுவந்த கைப்பைகள்தான் பெரும்பாலும் அவர்களுக்குத் தலையணையாக மாறின. சிலருக்குக் கைகளே தலையணை. சிலருக்கு போர்த்திக்கொள்ளப் போர்வைகள் கூடக் கிடையாது. அல்லாஹ்வின் வழியில் காலத்தைத் தியாகம் செய்ய வெளிக்கிட்டவர்களுக்கு இதெல்லாம் ஒரு பொருட்டா?

நுளம்புகளுக்கு இரண்டொரு நாட்களாகப் பெரும் வேட்டை. அதன் கடிக்கு அடிகொடுக்காதவாறு விழிக்க அந்த மனிதனுக்கு, தான் எங்கே? என்பது ஞாபகத்துக்கு வந்தது. அவசரத்தில் புறப்பட்ட அவருக்கு போர்த்திக் கொள்ளப் போர்வையொன்றுகூடக் கொண்டு வர முடியவில்லை. இரண்டு வாரங்களில் ஒன்று குளித்து விட்டுப் போட்டது கொடியில் தொங்கிக் கொண்டிருந்தது. வயது மூப்பு அவருக்கு இன்னும் சிரமத்தைக் கொடுத்தது. 'யா அல்லாஹ்' என்றவாறு மறுபக்கம் திரும்பிப் படுத்தார். முதுகுத்தோல் உரிக்கப்பட்டது போல் வலித்தது. என்ன செய்ய, அவருக்கு வாய்த்திருந்த இடமும் அப்படிப்பட்டதுதான். முதுகுக்கு நேரே இரண்டு பாய்களின் இணைப்பிடம். விரலகளால் மெதுவாக முதுகைத் தடவிப் பார்த்தார். தழும்புப் பள்ளம் ஆழமாகப் பதிந்திருந்தது. அந்த வேதனையினூடே...

'நபிகள் நாயகம் அவர்கள் எப்படிப்பட்ட படுக்கையைப் பாவித்தார்களென்றால்; வெறும் ஈத்தம் ஓலைப் பாய்களாகும். அவர் விழித்தெழும்போது அதன் தழும்புகள் அப்படியே முதுகில் பதிந்திருக்குமாம்! இவ்வளவு எளிமை அவர் வாழ்வில் இருந்தது' இவ்வாறு ஹாமித் ஆலிம் 'இஷா'த் தொழுகையைத் தொடர்ந்து நிகழ்த்திய பிரசங்கப்பகுதி அவர் நினைவைத் தொட்டது. அந்த வேளையிம் அந்த நினைவு அவருக்குப் பெரிதும் ஆறுதல் அளித்தது.

அதே நேரத்தில்......

ஹாமித் ஆலிமவர்கள். மூத்த ஹாஜியார் வீட்டு மேல் மாடியில்...... மின் விசிறியின் மென்காற்றில்........ குஷன் மெத்தையில் சுகமாக உறங்கிக் கொண்டிருந்தார்.

❖

## 1970 — க்குப் பின்

# ஈழத்தில் நவீன கவிதை வளர்ச்சி.....
## சில குறிப்புக்கள்

அன்பு - ஜவஹர்ஷா

இக் குறிப்புக்கள் விமர்சனங்கள் அல்ல. சில தகவல்களையும், கருத்துக்களையும் கூறத் தயாரிக்கப்பட்டவையே. இங்கு நவீன கவிதை என்று குறிப்பிடமுற்படுகின்றவைகளில் புதுக் கவிதைகள் வசனகவிதைகள், மரபை மீறிய கவிதைகள் எல்லாமே அடங்கும். தமிழன்பனின் 'தோணி வருகிறது' புதுக் கவிதைத் தொகுதியின் முன்னுரையில் கலாநிதி க. கைலாசபதி அவர்கள் கீழ்வருமாறு ''உண்மையில் 'வானம்பாடி' குழுவினரும் வேறு சிலரும், ஈழத்திலே முருகையன், சண்முகம் சிவலிங்கம், நுஃமான் முதலியோருமே தேவைக்கேற்ப வேறுபடும் ஓர் ஓசை நயத்தை பேச்சோசையின் அடிப்படையில் உருவாக்கிக் கொள்ள முயன்று வந்திருக்கின்றனர்'' என்று குறிப்பிட்டுள்ள கருத்தும் கவனத்தில் கொள்ளத்தக்கது. 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம்' என்ற நூல் குறிப்பிட்டுள்ளது போல 1970-க்குப் பின்னர் எழுத்துக் கவிதை பெரும்பாலும் புதுக் கவிதையாகவே மாறிவிட்டது.

இக்கால கட்டத்தில் உண்டான அரசியல் இலக்கிய மாறுதல்கள், புத்திஜீவிகளின் சிந்தனைச் செயல்பாடு அனைத்தும் கூடி படைப்பிலக்கியத்தில் மேலோட்டமாக இலகுவானது என்று எண்ணப்பட்ட நவீன கவிதைப் படைப்பில் இவர்களைக் கவனம் எடுக்க வைத்தது. இக் குறிப்பிட்ட ஒன்பது வருட கால எல்லைக்குள் வளர்ச்சி என்று கணிக்கும்போது நூற்றுக்கணக்கானவர்கள் இத்துறையில் ஈடுபட்டு வந்துள்ளனர். வளர்ச்சிப் போக்குப் பற்றி கசப்பாக இருந்தாலும் பின்வரும் விடயம் சொல்ல வேண்டியதொன்றே. கடந்த அரசாங்கக் காலத்தில் முற்போக்குச் சிந்தனைகளைத் தூவிய இத்தகைய பெரும்பாலான கவிஞர்கள் இன்று மௌனமாயும், தனிமனித உணர்வு விளம்பிகளாயும் ஆகியுள்ளனர். இக் கால கட்டத்தில் ஈழத்தில் வெளியிடப்பட்ட நவீன கவிதைத் தொகுதிகள், சஞ்சிகைகளைக் கவனிப்போம்;

திக்குவல்லை — கமாலின் 'எலிக்கூடு', மு. கனகராசனின் 'முட்கள்', சபா. ஜெயராசாவின் 'ஊர்வீதி', எம். ஏ. நுஃமானின் 'தாத்தாமார்களும் பேரர்களும்', அன்பு. ஜவஹர்ஷாவின் 'காவிகளும் ஒட்டுண்ணிகளும்', நா. லோகேந்திரலிங்கத்தின் 'போலிகள்', பூநகரி மரியதாஸின் 'அறுவடை' மாகுலனின் 'திறவுகோல்', செந்தீரனின் 'விடிவு', தில்லையடிச் செல்வனின் 'சமுதாய வீதியிலே', மேமன் கவியின் 'யுகராகங்கள்', பேனா. மனோகரனின் 'சுமைகள்', மூதூர் முகைதீனின் 'முத்து', ஈழத்து நூனின் 'நூன் கவிதைகள்', சௌமினி — கோப்பாய் சிவம் ஆகியோரின் 'கனவுப் பூக்கள்' ஜி. எஸ். விஸ்வநாதனின் 'குயில் வீணை', நல்லை - அமிழ்தனின் 'செம்பருத்திகள்' இத்தொகுதிகள் அனைத்தும் எழுதியவர்களின் கவிதைகளைக் கொண்ட தனித் தொகுதிகளாகும். இவற்றைவிட பலரின் கவிதைகளைக் கொண்டு தொகுக்கப்பட்ட பின்வரும் தொகுதிகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

அன்பு - ஜவஹர்ஷா தொகுத்த 'பொறிகள்', சரவணையூர் - சுகந்தன் தொகுத்த சுவடுகள்', முல்லையூர் அஸ்வர், தொகுத்த 'காலத்தின் குரல்கள்', கல்முனை முபாயக் தொகுத்த 'வானவீதியிலே'; அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் 'கனல்', இரத்தினபுரி கலைமுகில் கலாமன்றத்தின் 'விடிவின் வீணை' ஆகிய தொகுப்புக்களைக் குறிப்பிடும் போது நவீன கவிதைக்காக அல்லது மிக அதிகமான நவீன கவிதைகளைத் தாங்கி வெளிவந்த, வெளிவந்து கொண்டிருக்கும் இதழ்களைக் கவனித்தே ஆக வேண்டியுள்ளது. ஈழவாணனின் 'அக்னி', ஏ. எம். ஏ. நஸீரின் 'நவயுகம்', மேமன் கவியின் 'ஸப்ஞ' தில்லையடிச்செல்வனின் 'பொன்மடல்', இறைனேசனின் 'மின்னொளி', நீள்கரைநம்பி — செந்தீரன் ஆகியோரின் 'க - வி - தை', க. லை. யோகராசாவின் 'வானொசை', கவின் கமல — கலைக்கமல் சகோதரர்களின் 'கமலம்', புத்தளம் விடிவெள்ளிகளின் 'விடிவெள்ளி' தமிழக 'ஏன்' கவிதை ஏட்டின் இலங்கை மலர் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய வெளியீடுகள் எல்லாம் தரமானவை என்பதற்காக இங்கு குறிப்பிடப்படுகின்றவை அல்ல. ஒட்டு மொத்தமாக இக்காலக் கட்டத்தில்வெளியானவைஎன்ற ஒரே காரணத்திற்காகவே இவை பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். எனது பார்வைக்குக் கிடைக்காமல் இருந்தால் மட்டுமே வெளியான வேறு சில இருந்தால் அவை குறிப்பிடப் படாமல் இருக்கலாம்.

மேற்படி தொகுப்புக்கள் அனைத்தையும் ஒட்டு மொத்தமாக வாசித்தபோது பின்வரும் கருத்துக்கள் நினைவுக்கு வருகின்றன. எஸ். வைதீஸ்வரன் 'கவிதையனுபவம் நல்ல கனவு காண்பது போல. நல்ல கனவுகளை 'தனை மறந்த துயிலில்' எதிர்பார்க்கலாமே தவிர நினைத்த போது தோன்றி நிற்கும்படி கட்டளையிட முடியாது' என்று கூறியதும், கவிஞர் நா. காமராசன் 'தாஜ்மகாலும் ரொட்டித் துண்டும்' என்ற தொகுதியில் கூறியுள்ள பின்வரும் குறிப்பும் நினைவில் உள்ளன. 'நாடோடிப் பாடல்களும், பைபிளும், ஆண்டாளின் காதல் கனவுக் கவிதைகளும், கவிதைகளின் அருவியாக ஓடும் நாலாயிர திவ்யப் பிரபந்தங்களின் வார்த்தை சுகமும் எனது மனோராஜ்யத்தின் கனவுப் பறவைகள்'

'கவிப்புள் விண்ணிலே வலம் வரலாம். கால்கள் மண்ணிலே மேலும் உறுதியாக நிற்கவேண்டும்' என்ற தமிழவனின் கருத்தும், திக்குவல்லை எழுத்தாளர் சங்கம் எனது 'காவிகளும் ஒட்டுண்ணிகளும்' தொகுதிக்கு ஆய்வுரை நடத்தி எனக்களித்த பின்வரும் அறிவுரையும் இக் கால எழுத்துப் புதுக்கவிதை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளருக்கும் நிறையப் பொருந்தும். 'அ. நல்ல புதுக்கவிதைகளை நிறையப் படிக்க வேண்டும் ஆ. எழுதிய கவிதைகளைப் பலமுறை மீள்பார்வை செய்ய வேண்டும். இ. மரபுக் கவிதைகள் எழுதி கவித்துவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்' ஆகிய இத்தகைய கருத்துக்களுடன் உள்ள உடன்பாடுகள் பற்றி ஆராயாது தன்மைகளை மட்டும் ஆராய்ந்தால் போதுமானது.

இக்காலகட்டத்தில் நவீன கவிதைகளின் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர்களை குறிப்பிடாதுவிட்டால் இக்குறிப்புகள் அத்திவாரத்தை மறந்த காகித வீடாகிவிடும். முருகையன், நுஃமான், சண்முகம் சிவலிங்கம், ஏ. ஐ. ச. ஜெயபாலன், அ. யேகராசா, திக்குவல்லை—கமால், சபா. ஜெசுராசா, மு. கனகராசன், செந்தீரன், மருதூர்க்கனி, மருதூர்க் கொத்தன், எம். எச். எம். சம்ஸ், அன்பு முகைதீன், பண்ணமத்துக் கவிராயர், எம். எச். எம். அஷ்ரப் இத்தகையவர்களை அவதானிக்கும் தன்மை இலங்கையில் வெளியான, முஸ்லிம் வெளியீடுகளையும் வாசிப்பதால்தான் ஏற்படக்கூடும் காரணம் என்னவெனில் சில நல்ல கவிஞர்கள் தமது சமுதாய சூழலில் அல்லது சமய சூழலில் மட்டுமே படைப்பிலக்கியத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறை நோக்காத நிறைவாகும். புதிய முயற்சிகளில் ஈடுபடும் ஈழவாணனின் 'அக்கினிப் பூக்களும்', சிறந்த கவிஞர்கள் பெயரில் அவர் நாமம் இடம்பெறுமைக்கு அவர் தொடர்ந்தும் மரபுக் கவிஞராக இருக்கின்றமை காரணமாகும்.

'படிமம் என்பது உத்தியல்ல காட்சியனுவம்' என்பது வெங்கட் சாமிநாதனின் கருத்து. எழுத்தில் படிமக் கவிஞர் மேமன் கவியின் படைப்புக்கள் குறிப்பிடத்தக்கவை. இவைகளை அவதானிக்கும்போது 'சொற்சிலம்பம்' தெரிகிறது' ஏ. ஆர். எம். ஹஸீச, திக்குவல்லை — கமால் ஆகியோர், மீராவின் 'கனவுகள் கற்பனைகள் காகிதங்கள்', மேத்தாவின் 'கனவுப் பூக்கள்' போன்ற தாக்கங்களில், மன அவசங்களை வெளியிடத் தொடங்கிவிட்டனர். பின்னையவரின் ஆக்கங்கள் தரமானதாக இருந்தாலும் சாயல் தெரிகின்றது. முன்னையவர் சொற்களில் மயங்குகிறார்.

ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி பற்றி விமர்சித்தும் குறிப்பிட்டும் உள்ள விமர்சகர்களாகக் கலாநிதிகள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி திரு. மு. ஸ்ரீபதி, திரு. செ. யோகராசா, திரு. கே. எஸ். சிவகுமாரன், ஜனாப். எம். ஏ. நுஃமான் ஆகியோரைக் குறிப்பிடலாம். இத்தகைய பரிசோதனை முயற்சிக்கு களம் அமைப்பதில் முன்னணியில் நின்று இன்றையபிரபலதினசரிகள்கால நிர்ப்பந்தத்தால் 'மணிக் கவிதை' என்றொரு நவீன கவிதைகளைப் பிரசுரிக்க வழிவகுத்த 'மல்லிகை'யை மறக்க முடியுமா? 'மலர்', 'அஞ்சலி', 'பூரணி', 'அலை' இந்த இலக்கிய சஞ்சிகைகளும் இத்துறையில் கணிசமான அளவு பங்காற்றி உள்ளன.




மல்லிகை

மணம் பரப்பும் பதினைந்தாம் ஆண்டின் நிறைவுக்கு

மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

நிர்மல் பிரிண்டர்ஸ்

த. பெ. இல. 1404

தொலைபேசி: 86423

98, ஜம்பெற்று வீதி,

கொழும்பு - 13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சகத்தார்களுக்கும்
மற்றும்
ஏனையோர்களுக்கும்

தங்களுக்குத் தேவையான எல்லாவகை

**கடதாசி, கடதாசி அட்டைகள்**

முதலியவைகளை

மிக நியாயமான விலையில்

எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்

**கலா பேப்பர் டிரேட்ஸ்**

306, அவிசாவளை வீதி,

வெல்லம்பிட்டி.



# திரைப்பித்தனின் குறிப்பேட்டிலிருந்து

ஏ. ஜே. கனகரட்ன

வானத்தைப் பார்த்து நிற்கும் பயிரைப் போன்று, புதிய ஆங்கிலப் படங்களுக்காக ஏங்கி நின்ற எமது ரசிகர்கள் மீது இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் கடைக்கண் பார்வை பட்டதாலோ என்னவோ அண்மையில் சில படங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் கணிசமானவை 'பேய்ப்' படங்கள் (பல அர்த்தங்களில்). பல விருதுகளைப் பெற்ற 'குயிலின் கூட்டிற்கு மேலாகப் பறந்த ஒன்று' இன்னும் திரையிடப்படவில்லை. தணிக்கையாளரின் கத்தரிக்கோல் அதை இன்னும் பதம் பார்க்கவில்லையென்று கேள்வி. கென்கேசி என்ற அமெரிக்க எழுத்தாளனின் நாவல் தான் இத் திரைப்படமாகியது. நாவலின் களம் மன நோயாளர் விடுதி ஒன்று, அமெரிக்காவிலிருந்து அண்மையில் வெளிவந்த நாவல்களில் குறிப்பிடத்தக்க இப் படைப்பு அம் மனநோயாளர் விடுதியை வெளியேயுள்ள முதலாளித்துவ உலகின் குறியீடாக மாற்றுகின்றது. முற்றிலும் தன் கூற்றாக அமைந்த அந்நாவல் எவ்வாறு திரைப்படமாக்கப்பட்டிருக்கின்றது எனக் காண ஆவலுற்றிருக்கும் எமது ஆசை எப்போது நிறைவேறும்.

அண்மை இறக்குமதிகளில் ஒன்றுதான் யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் திரையிடப்பட்ட 'தொட்டப்பு'. தொட்டப்பு இங்கு வருகை தரமுன்னரே, அவரின் புகழ் பரவி விட்டது. மார்லன் பிராண்டோ நடிக்கும், விருதுகள் பல தட்டிக்கொண்ட படம் என்ற முன்கூட்டிய விளம்பரம் இதற்கோர் காரணம். இதுவும் நாவலிலிருந்து உருவாகிய படம்தான். இந்நாவலை நான் வாசித்த போதிலும் நாவலாசிரியர் மாரியோ பியுசாவே திரை நாடகத்தை எழுதினர் என்பதிலிருந்து இப்படம் நாவலை ஒட்டியிருக்கின்றது என ஊகிக்க இடமுண்டு.

சிசிலியிலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள் உருவாக்கிய 'மாப்பியா' என்ற தாபனம் அங்கு வகிக்கும் பங்கு பகிரங்க இரகசியம். இரண்டாவது அர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாங்கம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அது கோலோச்சுகின்றது. பெரும் முதலாளித்துவ வணிக முறைப் பாணியிலே, கொலை, சூதாட்டம், போதைப் பொருள் விற்பனை ஆகியவற்றை தொழிலாய் அது நடாத்தி வருகின்றது. இந்தப் பேரரசை ஆள்பவர்தான் தொட்டப்பு. அவர் இடுவதுதான் சட்டம். சிலவேளைகளில் இத்தாபனத்திற்குள்ளே பிணக்குகள் தோன்றுவதுண்டு. தொட்டப்புக்கு உயிர் ஆபத்து நேரலாம், நேர்ந்துமிருக்கின்றது; முதலாளித்துவத்தின் தடையற்ற போட்டியின் தர்க்க நியதி இது தானே. தொட்டப்பு கொல்லப்பட்டால், வல்லவனாகிய இன்னொருத்தன் அந்த இடத்தில் அமர்வான்; தொழில் வழமை போல் நடக்கும்.

இத்தகைய வாழ்க்கைப் பின்னணியைத்தான் இப்படம் கையாளுகின்றது. பிரான்சில் கொப்போலாவின் நெறியாள்கையில் தொட்டப்புவினதும் அவரது குடும்பத்தினரதும் வாழ்க்கை சித்தரிக்கப்படுகின்றது. முதல் காட்சியே தொட்டப்புவின் (மார்லன் பிராண்டோ) அதிகார பலத்தையும், அவரது செல்வாக்கையும் உணர்த்துகின்றது. தனது மகளைக் கற்பழித்தவர்கள் மீது வஞ்சம் தீர்க்க உதவ வேண்டும் எனச் சவப்பெட்டிக் கடைக்காரர் ஒருவர் — பின்னர் வரும் காட்சியில் இவர் யார் என்பது தெளிவாக்கப் படுகின்றது. — தொட்டப்புவை வேண்டுகின்றார். இக்காட்சி படமாக்கப்பட்ட முறையிலிருந்தே தொட்டப்புவின் அந்தஸ்து கட்புலப் பாணியிலே — அதாவது சினிமாவுக்கே உரித்தான 'மொழியில்' நிறுவப்படுகின்றது. கொம்போலாவின் நேர்த்தியான நெறியாள்கைக்கு பல சான்றுகளைத் தரலாம். உதாரணத்திற்கு :கோயிலிலே குழந்தைக்கு ஞானஸ்தானம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தீடீரென 'கமெரா' 'மாபியா'வின் எதிரிகள் கொல்லப்படும் காட்சிகளுக்குத் தாவி, மீண்டும் கோயிலுக்குள் நுழைகின்றது. மீண்டும் தாவுகின்றது, மீண்டும் கோயிலுக்குத் திரும்புகின்றது. இவர்களது வாழ்க்கையிலுள்ள கோர முரண்பாடுகள் கட்புலன் வழியாக எமக்கு உணர்த்தப்படுகின்றன. உதாரணத்துக்கு இன்னொன்று: தொட்டப்பு தோட்டத்திலே சிறு பையனுடன் விளையாடிக் கொண்டிருக்கின்றார். சடுதியாக மயக்கமுற்று நிலத்திலே விழுகின்றார். பையன் ஓடிவிடுகிறான். 'கமெரா' விழுந்து கிடக்கும் உருவத்தை அவதானித்தபடியே தரித்து நிற்கிறது; சாவுமணி அடிக்கத் தொடங்குகிறது, மூன்றாவது முறை மணி அடித்த பின்னர்தான் 'கமெரா' சவக்காலைக் காட்சிக்குத் தாவுகிறது.

நேர்த்தியான நெறியாள்கையும் உத்தி நுணுக்கமும் தான் திரைப்படம் பயக்கும் சுவை என்றால் இவற்றுடன் நாம் திருப்தி அடைய வேண்டியதுதான். ஆனால் ஏனைய கலைகளைப் போன்று திரைப்படமும் வாழ்க்கைத் தரிசனத்தை அளிப்பதால் இவற்றுடன் நாம் நின்றுவிட முடியாது. இந்த அளவுகோலின்படி, தொட்டப்பு எந்தளவிற்குத் தேறுகிறது.

தொட்டப்புவும், அவரது குடும்பத்தினரும் எம்மைப் போன்று பந்தபாசமுள்ளவர்களாகத்தான் காட்டப்படுகின்றனர். ஆனால் அதே ஆட்கள் ஈவிரக்கமற்ற கொலைஞர்களாகவும் அவ்வப்போது மாறுகின்றனர். நெறியாளரின் கலைநுணுக்கம் இந்தக் கொலைகளின் வயிற்றைக் பிரட்டும் கோரத்தன்மையை இரட்டிக்கச் செய்கின்றது. இதன் மூலம் இப் பலாத்கார வாழ்க்கை



மீது தான் கொண்டிருக்கும் வெறுப்பை நெறியாளர் புலப்படுத்துன்றார் எனச் சிலர் வாதிடலாம். ஆனால் படத்தைப் பார்த்தபோது இத்தகைய உணர்வு எனக்கு ஏற்படவில்லை. மாறாக, ஒருவகை அறவொழுக்க சூனியவாதமே விரவியிருந்ததாக எனக்குப் பட்டது. இந்த வாழ்க்கை முறையிலுள்ள கோர முரண்பாடுகளை நெறியாளர் 'பிட்டுக்' காட்டுகின்றார் என்பது உண்மைதான். ஆனால் ஒன்றன் பின் ஒன்றாகக் கொலைகள் நடந்து முடிகின்றன, அவை ஓரளவிற்கு நியாயப்படுத்தக் கூடியவை என்ற தொனியும் எழுப்பப்படுகின்றது. எமது அருவருப்பு மறைந்து, இதெல்லாம் சர்வசாதாரணம் என்று ஏற்கும் மனப்பான்மை ஒருவகை அலட்சியம் தலைதூக்குகின்றது. 'இந்தப் பலாத்கார வாழ்க்கையை நான் நிராகரிக்கின்றேன்' என நெறியாளர் அப்பட்டமான பிரசங்கம் செய்திருக்க வேண்டுமென நான் சொல்லவில்லை. தனது உளப்பாங்கை நாசூக்காக வெளிப்படுத்துவதற்கு வழியிருந்தும் அவ்வாறு அவர் செய்யவில்லை. கொலைஞர்களை மனச்சாட்சி உறுத்துவதாக காட்ட முனைந்திருந்தால் அது படத்தின் வாழ்க்கைப் பகைப் புலத்திற்கு முரணானதாய், யதார்த்தமற்றதாய் இருந்திருக்கும்.

தொட்டப்புவின் இளைய மகன் மைக்கல் ஆரம்பத்தில் 'மாபியாவில் இனி வேலை இல்லை' என்ற உணர்வுள்ளவராகக் காட்டப்படுகிறார். ஆனால் பின்னர் சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தால் ஈவிரக்கமற்றவனாக (மச்சானைக் கொல்லுவிக்கும் காட்சி கோரமானது) மாறுகிறான். தொட்டப்புவின் மரணத்திற்குப் பின் இவனே புதிய தொட்டப்பு ஆகிறான். இது இயல்பாகத்தான் படுகிறது. ஆனால் அவனது காதலியின் ஊடாக நெறியாளர் தனது கண்ணோட்டத்தை நுணுக்கமாகப் புலப்படுத்தியிருக்கலாம். அவள் வெளியாள். இறுதிக் கட்டங்களில், மைக்கலின் சகோதரி 'என் கணவனைக்கொன்ற பாதகா' என மைக்கலை வையும்போது, அவள் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும்தான் நிற்கிறாள். 'இது உண்மையா' எனப் பின்னர் மைக்கலிடம் கேட்கிறாள். 'அதெல்லாம் உனக்குத் தேவையில்லை' என முதலில் ஆத்திரப்பட்டு கத்தும் மைக்கல், பின் 'அது உண்மையில்லை' எனக் காதலிக்குப் பொய் சொல்லுகிறான். இந்தப் பொய்யை அவளும் ஏற்று சமாதானமடைகிறாள். காதலியின் ஐய உணர்வுகளை வளர்த்திருப்பின், அவளுடைய உணர்வு ஊடாக நெறியாளர் தனது நிலைப்பாட்டை நுட்பமாகத் தெளிவுபடுத்தியிருக்கலாம். அது இயல்பாகவும் இருந்திருக்கும். ஆனால் மாறாக அவளுடன் சேர்ந்து நாமும் இப் பலாத்காரத்தை ஏற்கும்படி செய்துவிடுகிறார் அவர். கலை நுட்பம் எமது உணர்வுச் செவ்வி மரத்துப் போவதற்கே வழிகோலுகின்றது.

மேற்கத்திய திரைப்படங்களிலே காணப்படும் பலாத்காரமும் பாலியல் கோணல்களும் ஏற்படுத்தியுள்ள ஆபத்தான விளைவுகள் பற்றிப் போதிய சான்றுகள் ஆய்வாளரால் சேகரிக்கப்பட்டுள்ளன. உத்தி நேர்த்திகளில் சிக்குண்டு மயங்காதவர்களுக்கு, ஒரு கலைப்படைப்பை முழுமையாக நோக்குபவர்களுக்கு, தொட்டப்புவின் கலைநுட்பம் என்ற முகமூடிக்குப் பின்னால் உள்ள பயங்கரச் சீரழிவு புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுச் சேரா இயக்கமும் ஏகாதிபத்திய — எதிர்ப்பு உள்ளடக்கமும்

**ஏ. பியல்ஜோவ்ஸ்கி**

கூட்டுச் சேரா நாடுகளின் 6-வது உச்சகட்ட மாநாடு, இன்னும் ஒரு மாத காலத்திற்குள் ஹவானாவில் நடைபெற இருக்கிறது. இதற்கு முந்திய கொழும்பு மாநாட்டிற்குப் பிறகு நடைபெற்ற பல நிகழ்ச்சிகள், புதிதாக விடுதலை பெற்று வளர்ச்சிப் பாதையில் நடைபோடும் சுமார் 90 நாடுகள் தமது ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் காலனியாதிக்க — எதிர்ப்புத் தன்மையை நீடிக்கின்றன என்பதற்குச் சான்றாகும். சமாதானத்தை வலுப்படுத்துவதிலும், சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளை உறுதிப்படுத்தி நாடுகளிடையே பரந்த அளவில் ஒத்துழைப்பை வளர்ப்பதிலும், இது ஆக்க பூர்வமான பங்காற்றுகிறது.

எனினும் கூட்டுச் சேரா இயக்கத்தைச் சேர்ந்த நாடுகள், தமது ஒற்றுமையைப் பேணவும், இயக்கத்தின் ஏகாதிபத்திய - எதிர்ப்பு மற்றும் காலனியாதிக்க — எதிர்ப்பு அடிப்படைகளை வலுப்படுத்தவும், கணிசமாக முயல வேண்டும்.

கூட்டுச் சேரா இயக்கத்தில் தனது செல்வாக்கை அதிகரிக்கவும், தனது மேலாதிக்க நோக்கங்களுக்கேற்ப இந்த இயக்கத்தின் திசை வழியை மாற்றவும், கடந்த சில மாதங்களாகப் பீகிங் முயன்று வருகிறது. ஜகர்தாவிலிருந்து வெளிவரும் 'இந்தோனேஷியன் அப்சர்வர்' என்ற பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது: கூட்டுச் சேரா இயக்கத்தில் உறுப்பினராக இல்லாத சீனா, கூட்டுச் சேரா நாடுகள் மீது நிர்ப்பந்தம் செலுத்த இடையறாது முயலுகிறது. கூட்டுச் சேரா நாடுகளின் அணியில் ஊடுருவவும் அது பெரு முயற்சி செய்கிறது. பிற நாடுகளின் உள் விவகாரங்களில் சீனாவின் அப்பட்டமான தலையீடும், சமாதானம், பதற்றத் தணிவை வலுப்படுத்துதல், பூரணமான உலகளாவிய படைக் குறைப்பு என்னும் முக்கிய பிரச்னைகள் விஷயத்தில் பீகிங்கின் முட்டுககட்டை நிலையும், கூட்டுச்சேரா இயக்கத்தின் அடிப்படைக் கருத்துக்களுக்கு முரணானவை ஆகும்.

கருத்து வேற்றுமைகள் இருப்பினும், பல பிரச்னைகள் சம்பந்தமாகக் கூட்டுச் சேரா நாடுகள் ஒருமித்த கருத்துக் கொண்டுள்ளன என்பதை கொழும்பு மாநாடு எடுத்துக் காட்டியது. பதற்றத் தணிவுப் போக்கு வளர்ந்து வருதல், ஏகாதிபத்தியம் மற்றும் காலனியாதிக்கத்தின் பலம் குன்றி வருதல், 'சென்டோ' ராணுவக் கூட்டணியின் வீழ்ச்சி, இவை குறித்து மனநிறைவு கொள்வதாக கொழும்பு மாநாட்டி இறுதி அறிக்கை தெரிவிக்கிறது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக் கொள்கை நீடிப்பதாலும், இந்து மாகடலின் ஐந்தாவது கப்பற்படையை நிறுவ அமெரிக்கா தீர்மானித்திருப்பதாலும், அரபுக் கடலில் அமெரிக்க ராணுவத்தின் நடமாட்டத்தாலும் சமாதான லட்சியத்திற்கு அபாயம் உண்டாகிறது என்பதை அந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

எனவே, சர்வதேச அரங்கத்தில் சோஷலிச நாடுகளும் கூட்டுச் சேரா நாடுகளும் ஆக்கபூர்வமாக ஒத்துழைக்க முடிகிறது. இந்த ஒத்துழைப்பு, உலக அரங்கில் ஒரு முக்கிய அம்சமாகும்.



## ஈழத்தமிழ் நாடக உலகு

**சி. மௌனகுரு**

க, செல்வரத்தினம்

மத்திய தர வகுப்பினரின் வருகையுடன் ஈழத்து நாடக வரலாற்றிலே நவீன நாடக மரபு உருவாகின்றது. தமிழ் நாட்டிலே பம்மல் சம்பந்தமுதலியார் வகித்த இடத்தினை ஈழத்தில் கலையரசு சொர்ணலிங்கம் பெறுகிறார். 1910-ஆம் ஆண்டு தொடக்கம் 50 வருட காலம் ஈழத்து நாடக வரலாற்றில் கலையரசு வகித்த பங்கு குறிப்பிடத் தக்கது. இக் காலகட்டத்தில் ஈழத்து நாடக உலகோடு தொடர்புடைய அனைவரும் கலையரசின் நாடகக் குழுவில் இருந்தவர்களாக அல்லது அவரால் கவரப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். க. செல்வரத்தினம் அவர்கள் கலையரசோடு சேர்ந்து நடித்தவர், கலையரசினால் உருவாக்கப் பட்டவர்.

'திரு. செல்வரத்தினம் அவர்கள் அன்று தொடக்கம் தொடர்ந்து என்னுடன் நடித்து வருகிறார். ஹாசிய நடிப்பில் இணையற்றவர். ஹாசியமாயிருந்தாலும் அவருடைய நடிப்பில் கருத்து நிறைந்திருக்கும். 'வழி தெரிந்தது' என்னும் நாடகத்தில் அவர் உடையாராக நடித்ததை எவரும் மறக்க மாட்டார்கள். அவர் ஓர் இயற்கையான குண சித்திர நடிகர். தன்னுடன் நடிப்பவர்களுக்கு உற்சாகமூட்டி நன்றாக நடிக்கச் செய்வார்!'

**'ஈழத்தில் நாடகமும் நானும்'** என்ற தமது நூலிலே கலையரசு சொர்ணலிங்கம் நடிகர் க. செல்வரத்தினம் அவர்களைப்பற்றி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கலையரசின் நடிப்புப் பண்ணையிலே வளர்ந்து, பின்னர் தனக்கென ஒரு பாணியை உருவாக்கி யாழ்ப்பாண நாடக உலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கொரிக் செல்வரத்தினம்'' என்ற பெயரைப் பெற்று விட்ட திரு. கணபதிப்பிள்ளை செல்வரத்தினத்தை நான் கண்டு கதைத்தபோது ஒரு குறிப்பிட்ட காலத்து நாடக உலகு பற்றிய விபரங்களை விஸ்தாரமாகப் பெற முடிந்தது.

53 வயதுடைய திரு. செல்வரத்தினம் அவர்கள் கிராம சேவகராகக் கடமை புரிகின்றார். திருநெல்வேலியில் வசிக்கின்றார். 1910 - ஆம் ஆண்டு கொழும்பு சென்ற் பெனடிக்ற் பாடசாலையில் பயின்ற காலத்தில் தமது 14 வயதில் மேடையேறியவர் இன்றுவரை நடித்துக் கொண்டிருக்கிறார். இவரது கடைசி நாடகம் 197ɔ - இல் மேடையேறிய 'அன்னத்துக்கு அரோஹரா'. 86 வருட மேடை அனுபவமுள்ள திரு. செல்வரத்தினத்தின் குரல் இன்றும் உரையாடும் பொழுது கணீரென்று சுத்தமாக ஒலிக்கிறது.

சிறு வயதிலே கொழும்பு சென்ற் பெனடிக்ற் பாடசாலையில் முதல் மேடையேற்றத்தின் பின் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நாடகங்களிலும் நடிக்க ஆரம்பித்தார். படித்த மக்களிடையே கலையரசு நாடக மரபு செல்வாக்குற்று வளர்ந்த காலமும் இதுவேயாகும். கலையரசின் நாடகங்களைப் பார்த்து அவர் மீது ஓர் ஏகலைவ மதிப்பு வைத்திருந்த திரு. செல்வரத்தினம் அவர்கள், கலையரசுடன் 1945 ல் தொடர்பு கொண்டார். இதனால் 1946 ல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கார்ணிவெலில் கலையரசு மேடையிட்ட வேதாள உலகம், சந்திரஹரி, மனோஹரா ஆகிய நாடகங்களில் சிறு பாத்திரங்களில் நடிக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. இவருடன் இந்நாடகத்தில் நடித்தவர்களுள் பிரம்மஸ்ரீ மணிபாகவதர் (சுவாமிநாதத் தம்பிரான்), நல்லூர் சிவன்கோவில் அதிபர் பிரம்மஸ்ரீ இரத்தினக் கைலாசநாதக் குருக்கள், ஆசிரியர் கனகசபாபதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இதே காலத்தில் இவர் பரமேஸ்வராக் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருந்தார். சட்டோபாத்யாரின் 'சவப்பெட்டி', இப்சனின் 'நிழல்கள்' ஆகிய நாடகங்களை கலையரசு இவர்களுக்கு இங்கு பழக்கினார். பரமேஸ்வரா ட்ரமெற்றிக் சொசைட்டி ஆரம்பித்ததும் இக் காலகட்டத்திலேயே. இதிலிருந்து உருவானவர்களே, ஏ. ரி. பொன்னுத்துரை, ஏழாலை செல்லத்துரை ஆகியவர்கள்.

திரு. செல்வரத்தினம் அவர்களுக்கு நாடகம் நடிக்க வீட்டார் ஆரம்பத்தில் அனுமதிக்கவில்லை. நாடகம் பற்றிய பெரியவர்களின் கணிப்பீடு அன்று அப்படி இருந்தது. நாடகத்தில் நடிப்பது அன்று தரக்குறைவாகவும் கணிக்கப்பட்டது. எனினும் கலையரசு சொர்ணலிங்கம் செல்வரத்தினத்தின் பாதுகாவலர்களுடன் பேசி நாடகத்தில் நடிக்க அனுமதி பெற்றார். அக்காலகட்டத்தில் திருநெல்வேலியிலிருந்து கலையரசின் ஊரான நவாலிக்கு நடையிற் சென்று ஒத்திகை பார்த்த காலங்களைச் செல்வரத்தினம் பரவசமுடன் வர்ணித்த போது இன்று ஒத்திகை அதிகம் இன்றி மேடையேறும் நாடகங்கள் பல என் ஞாபகத்திற்கு வந்தன.

கொழும்பில் லங்கா சுபோதவிலாச சபை கலையரசு சொர்ணலிங்கத்தின் உதவியுடன் 913 ல் ஆரம்பமானது நாடக ஆர்வலர்கள் அறிந்த செய்தி. இக் காலகட்டத்திலேதான் டவர் ஹாலில் சிங்களக் கலைஞர்களும் இதே முறையான நாடகங்களைச் சிங்கள நாடக உலகிலும் அறிமுகப் படுத்திக் கொண்டிருந்தனர். சிங்கள மக்கள் வாழும் நாட்டுப்புறங்களில் அவர்களது கோலம், சொக்கரி நாடகம் என்ற கூத்துக்களே பிரதானம் பெற்றிருந்தன. இத்தகைய புது நாடகங்கள் பாமர ஜனங்களிடம் செல்லவில்லை, தமிழ் நாடக உலகும் அன்று ஈழத்தில் இவ்வாறே இருந்தது.



கலையரசின் நவீன நாடகங்களும் படித்த மத்தியதர வர்க்கத்தினரிடையே மாத்திரம்தான் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தன. தமிழ் மக்கள் வாழ்ந்த கிராமப்புறங்களில் . கூத்துக்களே பிரதானமான நாடக வடிவங்களாயிருந்தன.

1954 - இல் மானிப்பாய் ஒறியன்ற் றிக்றியேஷன் கிளப் உருவாக்கப்பட்ட பின்னர் கலையரசு யாழ்ப்பாணத்திலும் தமது நாடகங்களைப் பரப்ப முயன்றார்.

இதுபற்றி நான் செல்வரத்தினத்திடம் கேட்டபோது அவர் கூறிய தகவல் பிரயோசனமானதாயிருந்தது. தங்களுடைய பல நாடகங்கள் பட்டினங்களிலே தான் மேடையேறினவாம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, ஹாட்லி கல்லூரி, இளவாலை சென் கென்றில் கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி போன்ற கிறித்தவப் பாடசாலைக்ள் தமது நாடகங்களுக்குப் பேராதரவு தந்தனவாம். சேக்ஸ்பியர் மரபில் வந்த நாடகங்களைத் தமிழில் காண ஆங்கிலம் கற்ற இவ்வுயர் குழாத்தினர் விரும்பியமையே இதற்கான காரணம் என்று கூறிய செல்வரத்தினம் கூற்றில் நவீன நாடகத்திற்கும் மத்தியதர வர்க்கத்தினருக்குமுள்ள தொடர்பு புலனாகின்றதல்லவா? 1945 தொடக்கம் 19ɔ5 வரை மானிப்பாய் ஒறியன்ற் றிக்றியேசன் கிளப், கலையரசு கொழும்பில் நடத்திய பம்மல் சம்பந்தமுதலியாரின் நாடகங்களையே மேடையேற்றியது. அந்த நாடகங்களில் எல்லாம் செல்வரத்தினம் பங்கு கொண்டார். அவருடன் நடித்த லேட் காக்கா சின்னத்துரை, சாவகச்சேரி வீரசிங்கம், நெல்லியடி வீரசிங்கம் ஆகியோரை செல்வரத்தினம் ஒருகணம் நினைவு கூர்ந்தார். 94 க்குப் பிறகு பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் பாணியிலமைந்த யாழ்ப்பாணப் பேச்சு வழக்குடைய தமிழ் நாடகங்கள் செல்வாக்குற்றன. 956 க்குப் பிறகு மானிப்பாய் ஒறியன்ற் றிகிறியேசன் கிளப்பினரும் பம்மலின் பழைய நாடகங்களைக் கைவிட்டுப் புதிய சமூக நாடகங்களை மேடையிட ஆரம்பித்தனர். 1956 இல் இவர்கள் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் 'உடையார் மிடுக்கினை' மேடையேற்றினர். அதில் செல்வரத்தினம் உடையாராக நடித்தார். பேராசிரியர் கணபதிப்பிள்ளை அந் நாடகத்தைப் பார்த்துவிட்டு 'நான் படைத்த உடையாரைக் கண்டேன்' என்று பாராட்டிய நிகழ்ச்சியைப் பெருமையோடு நினைவு கூருகிறார் செல்வரத்தினம். இப் பாத்திரத்தினை ஏற்று பல்கலைக் கழகத்தில் சிறப்பாக நடித்தவர் கலாநிதி கா. சிவத்தம்பியாவர்.

இவ்வண்ணம் கலையரசு மரபில் வளர்ந்தாலும், பேராசிரியர் கணபதிப்பிள்ளை மரபில் கால் ஊன்றியவராகவும் செல்வரத்தினம் காணப்படுகிறார். இது செல்வரத்தினத்திற்கு மாத்திரம் உரிய ஒரு பண்பல்ல. 195ı களில் தமிழ் நாடக உலகில் ஒரு மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தது. பேச்சு மொழியில் மக்கள் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு நாடகங்கள் எழத் தொடங்கின. பல்கலைக் கழகமே இதன் விளைநிலமாயிற்று. பேராசிரியர் கணபதிப்பிள்ளையே இதன் முன்னோடியாவர். அவரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அ. ந. கந்தசாமி முத்துலிங்கம், சொக்கன் முதலியோர் இத்துறையிலுழைத்தனர். கலையரசு மரபில் வந்த பலர் பேராசிரியர் மரபு நாடகங்களிலும் நடிக்க விரும்பினர். செல்வரத்தினமும் அதற்கு ஒரு உதாரணம்.

சாதாரண மக்களின் பேச்சு வழக்கில் அவர்கள் பிரச்சனையை யொட்டிப் பேராசிரியர் போன்றோர் நாடகம் எழுதிய இக்காலகட்டத்திலேதான் சிங்கள நாடக உலகில் மொழிபெயர்ப்பு நாடகங் மெல்ல மெல்லச் சிங்கள நாடக உலகை ஆக்கிரமிக்கத் தொடங்கின. தமிழ் — சிங்கள நாடகங்கள் கூத்தில் ஆரம்பமாகி, நவீன நாடகமரபுக்கூடாக ஒன்றாக வளர்ந்தாலும் இக்காலகட்டத்திலேதான் சிங்கள நாடக உலகில் மொழி பெயர்ப்புகள் அதிகமாகவும், நமது நாடக உலகில் சொந்த ஆக்கம் அதிகமாகவும் பெற்று இரு இளைப்படத் தொடங்கின. இதன் பாதிப்பு இரு நாடக உலகையும் தாக்கியுள்ளது.

மானிப்பாய் ஓரியன்றல் றிகிறியேசன் கிளப்பினர் 'உடையார் மிடுக்கைத்' தொடர்ந்து செல்வரத்தினம் எழுதிய வழி தெரிந்தது, நடராஜன் ஆகிய நாடகங்களையும், குழந்தை சண்முகலிங்கம் எழுதிய லட்சம், தாலியைக் கட்டு ஆகிய நாடகங்களையும் மேடையேற்றினர்.

இந் நாடகங்கள் யாவும் சமூகக் கிண்டலுள்ள நாடகங்களாகவே யமைந்தன. சங்கக்கடை. ஊழல்கள், குலப்பெருமை பணப் பெருமை கொண்டு பெரியவர்களாக நடிக்கும் போலி வேடதாரிகள், சீதனக் கொடுமை ஆகியவற்றை இவை அங்கத வடிவில் சாடின. செல்வரத்தினம் இந் நாடகங்களில் முக்கிய பங்கேற்றார். இவருடன் ரி. ரகுநாதன் (ஆச்சி), ஏ. ரகுநாதன், குழந்தை சண்முகலிங்கம், மகேஸ்வரன், அரஸ்கோ ரி. ராஜலிங்கம் ஆகியோர் நடித்தனர்.

இக்காலகட்டத்தில் இவரும் மறைந்த 'சாணா' வும் சேர்ந்து நகைச்சுவை நிகழ்ச்சிகளை அளிக்க ஆரம்பித்தனர். 'நந்தன் ஆர்?', 'சிங்கப்பூர் போய் வந்த அம்பட்டன்', முருகேசு புறோக்கர்' என்பன போன்ற பல துணுக்குகளை மேடையேற்றினர். சாதாரண மக்கள் மத்தியில் இவை பெரும் செல்வாக்குப் பெற்றன. அன்றாடப் பிரச்சனைகள் மேடையில் மக்கள் பேச்சு வழக்கில் பேசப்படும்பொழுது ஏற்படும் கலகலப்புணர்வு இத்தகைய துணுக்குகளில் நடிக்கும் நடிகர்களுக்கும் பார்வையாளர்களுக்குமிடையே ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்தின. இத்தகைய துணுக்குகள் யாழ்ப்பாண நாடக மேடையை வெகுவாக ஆக்கிரமித்தன. செல்வரத்தினம் இதில் ஈடும் எடுப்புமின்றித் திகழ்ந்தார். கொமிக் செல்வரத்தினம் என்ற பெயரும் பெற்றார். சாணாவிற்குப் பிறகு செல்வரத்தினத்தின் பார்ட்னராகத் திகழ்ந்தவர் குழந்தை சண்முகலிங்கமாவர். கலை விழாக்களிலும், கார்ணிவெல்களிலும் மக்கள் மத்தியில் இத்தகைய உரையாடல்கள் மிகுந்த துணுக்கு நாடகங்கள், பெரும் வரவேற்பைப் பெற்றன. நடிக்கின்ற இருவருடைய சாமர்த்தியத்திலேயே இத்துணுக்கு நாடகங்கள் தங்கி இருந்தன.

'கொடுத்து வாங்குதல்' என்று ஒரு வார்த்தைப் பிரயோகத்தை செல்வரத்தினம் இதற்கு உபயோகித்தார். ஒருவர் ஒரு விடயம் கூற மற்றவர் அதற்குப் பதிலிறுப்பதும், மற்றவர் ஒன்று கூற அதற்கு இவர் ஞாயம் கூறுவதுமாக இவ்வுரையாடல் அமையும். தன்னோடு நடித்த சாணாவும், குழந்தை சண்முகலிங்கமும் கொடுத்து வாங்கிவதில் மிகவும் சமர்த்தர்கள் என்று செல்வரத்தினம் குறிப்பிட்டார். வாய்ச் சாதுரியமும், வாதத்திறமையும், நகைச்சுவையுமே இதன் அத்திவாரம்.

இன்று இத்தகைய துணுக்குகளில் ஆபாசமே மிஞ்சி நிற்பதாகக் கவலைப்பட்ட செல்வரத்தினம், தமது காலத்தில் தாம் அன்றாடச் சமூகக் கேவலங்களை எவ்வாறு கிண்டல் செய்தார் என்பதையும் விளக்கினார்.

இவர்களுக்குப் பிறகு இத்தகைய துணுக்குகளைச் செய்பவராக அச்சுவேலி ராஜரட்ணம் திகழ்கிறார். நாடக வடிவத்திற்குள் இத்துணுக்குகள் அடங்காவிடினும் தமிழ் நாடக வளர்ச்சிப் போக்கில் இவையும் ஒரு கிளைப்போக்கு என்பதை யாரும் மறுக்க முடியாது. 1950 — களில் இலங்கை வானொலியில் நாடகத் தயாரிப்பாளராக இருந்த செல்வரத்தினம் அவர்கள் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் இருந்த கலைக்கழக நாடகக் குழுவில் ஏறக்குறைய பத்து வருடங்கள் உறுப்பினராக இருந்திருக்கிறார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் என். எஸ். கிருஷ்ணன் 1948 இல் வந்து 50 - க்கு 60 நாடகம் ஆடியபோது இவரும் சாணாவும் அந்நாடகத்தில் நாடோடிகளாக நடித்திருக்கிறார்கள். காளி என். ரத்தினம், ரி. எஸ். துரைராஜ ஆகிய பழம் பெரும் நடிகர்கள் ஈழம் வந்த போது அவர்களுடன் சேர்ந்து நடித்திருக்கிறார். விளம்பரத்தை விரும்பாத இவருடைய கலைச் சேவையைப் பாராட்டி 61 - இல் கலாநிதி எச். டபுள்யு தம்பையா அவர்கள் இவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

கலையரசு சொர்ணலிங்கத்தைக் 'கிழவன்' என்று அன்போடு அழைக்கும் இவர், அவர் மீது அபார அன்பு கொண்டவர். தமக்கு நடிப்பையும், உச்சரிப்பையும் கற்றுத் தந்தவர் கலையரசு என்று கூறுமிவர் இன்றைய நாடகங்களில் இவை இரண்டும் இல்லை என்கிறார். ஒலியும், ஒளியும்தான் இன்று நாடகத்தில் பிரதானம் பெறுகின்றன என்பது இவரது அபிப்பிராயம். எனினும் இன்று நாடக வளர்ச்சி சிறப்பாகச் செல்கிறது என்கிறார்.

நாடகம் சமூகத்தைச் சீர் திருத்த வேண்டும் என்று கருத்துடைய இவர், 1958 — 59 களில் சாதிப் பிரச்சனையை வைத்துத் தாம் மேடையேற்றிய 'ஒரே இரத்தம்' என்ற நாடகத்தை நினைவு கூர்ந்தார்.

கலையரசு சொர்ணலிங்கம் மரபில் வளர்ந்து, பேராசிரியர் கணபதிப்பிள்ளை மரபில் காலூன்றி, புதுமையை வரவேற்கும் திரு. செல்வரத்தினம் தமிழ் நாடகக்காரர்களுள் குறிப்பிடத் தக்கவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதான விலை!
நிறைந்த சேவை!!

அதி அற்புத
சர்வ கிருமி நாசினி

அக்றிடோல் ஈ806

துரித செயலாற்றும்
புதிய இலைப் பசளை

கொம்பிளசால்

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

"அக்ரோ விலாஸ்"
(AGRO VILAS)

இடைக்காடு,
அச்சுவேலி



# தமிழ் மரபு நிலைப்பட்ட பெண்மை, பெண் தளைநீக்கம்

(ராஜம் கிருஷ்ணனின் 'வீடு' நாவல் பற்றிய ஒரு விமரிசன நோக்கு)

கார்த்திகேசு சிவத்தம்பி

'ஆண்களாலியற்றப்பெற்ற சட்டங்களைக் கொண்டதும், ஆண்கள் கண்ணோட்டத்தைக் கொண்டே பெண் நடத்தையை மதிட்பிடும் நீதிமுறைமையைக் கொண்டதுமான, முற்றிலும் ஆண் முதன்மையான இன்றைய சமுதாயத்தில் ஒரு பெண் ஆத்ம தனித்துவமுள்ளவளாக வாழ முடியாது'

ஹென்றிக் இப்சன்

## 1

'இந்த நாவலுக்கு ஒரு முன்னுரை அவசியமில்லை எனக் கருதுகிறேன்' என்ற ஒரேயொரு முன் வாக்கியத்துடன் 'வீடு' வெளியிடப்பட்டுள்ளது. முதற் பதிப்பினைக் கொண்டு பார்க்கும் பொழுது (நவம்பர் 19/7) இந்நாவல், முன்னர் 'தொடர் கதை'யாக வெளிவராது, பிறப்பிலேயே நாவலாகவே தோன்றியுள்ளது என்பது தெரியவருகின்றது.

தமிழ் நாட்டுக் குடும்பப் பெண்ணொருத்தியின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் இந் நாவல் தமிழ் நாவற்பரப்பில் முக்கியமான ஒன்றென்பது இந் நாவலின் இறுதியில் வரும் பகுதி மூலம் நன்கு தெரிய வருகின்றது.

கீழ் நடுத்தர வர்க்கத்திலிருந்து அல்லற்பட்டு நின்ற தனது குடும்பத்தின் முன்னேற்றத்திற்குத் தன் உழைப்பையும் தன் சேவையையும் முற்று முழுதாக அர்ப்பணித்துக் கடமையாற்றிய தேவி, தனது கணவனையும், மகனையும், மகள்மாரையும் மகளின் விவாக தினத்தன்று விட்டு வெளியேறுகிருள். அவ்வாறு அவள் புறப்படும் கட்டத்தை விவரிக்கும் ராஜம் கிருஷ்ணன்,

'உங்கள் ஆளுகையில் அழுந்திப் புழுங்கிக் கொண்டிருந்த ஒருத்தி உங்கள் எல்லையை, கோப தாபங்களை, அறியாமைகளை உதறிவிட்டுப் போகிருள். அவள் இந்த நேரத்தில் இவ்வாறு முடிவு செய்ததையே ஒரு பெரிய சாதனையாகக் கருதுகிருள். நீங்கள் எது செய்தாலும் சரியே என்று கருதும் மனப்பாங்கிலிருந்து விடுபட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவம் பெற்று, உங்கள் சொல்லையும் செயலையும் விமரிசிக்கும் துணிவு பெற்று எதிர்ப்புக் காட்டி, தன் நியாயத்தை நிலைநிறுத்திக் கொண்டு அவள் தன் மனச்சாட்சிக்கொப்ப நடக்கிறாள். இதன் விளைவுகள் அவளைப் பலவாறாகப் பாதிக்கக் கூடும், உங்களுக்கும் பெருத்த அதிர்ச்சி அளிக்கக் கூடும். என்றாலும் மனிதத்தன்மைக்குப் பொதுவான கசிவு அவளை வென்றுவிட்டது. உங்களோடு வாழ்ந்து, மக்களைப் பெற்று, ஒரு குடும்பத்தை உருவாக்கியவள் என்ற நிலையில் அவள் உங்களை என்றும் மதிக்கிறாள். ஆனால், அதற்காக அவள் கண்களை மூடிக் கொண்டு மனச்சாட்சியை விழுங்கும் அறியாமைகளை உதறும் சந்தர்ப்பம் இதுவே எனக்கருதி அகலுகிறாள்......'

மனத்தில் இவ்வாசகங்கள் திரைப்படக் காட்சி போல் மின்ன அவள் சிறிது நேரம் அங்கு நிற்கிறாள்.

பிறகு விடுவிடென்று கையில் பெட்டியுடன் தேவி அந்தக் கல்யாண மண்டபத்தை விட்டு வெளியேறுகிறாள்

எனக் கூறி நாவலை முடிக்கிறார்.

பெண்ணை 'மனைவி'யாக (குடும்பத்துக்குரியவளாக)க் கொள்ளும் ஒரு பாரம்பரியத்தில், 'கல்லானாலும் கணவன்' எனத் தொடங்கும் பழமொழியை நியமமான சட்டவலிமையுடைய ஒரு தர்மக் கோட்பாடாகக் கொள்ளும் ஒரு பண்பாட்டில், கணவன் பிள்ளைகளின் வாழ்விலேயே தனது வாழ்க்கை நிறைவை மனைவி — தாய் பெறுகிறாள் என்னும் இலட்சியத்தையே பெண்மையின் நிறைவாகக் கொள்ளும் ஒரு சமுதாயத்தில், தனது மகளின் கலியாண தினத்தன்று, தனது ஆத்ம தனித்துவத்துக்காகவும் நிறைவுக்காகவும் வெளிநடப்புச் செய்யும் தேவி (முழுப் பெயர் ஸ்ரீதேவி) என்னும் பாத்திரமும் அவள் சிந்தனையும் முடிவும் தமிழ் இலக்கியப்பரப்பில் மிக மிக அசாதாரணமானவை என்பதில் இருவேறு கருத்து நிலவமுடியாது.

இம்முடிவு எவ்வாறு 'வந்து எய்துகின்ற'தென்பதுதான் நாவலின் கதைப்பின்னலாக அமைகின்றது.

இத்தகைய ஓர் அசாதாரணமான, தர்மாவேச நாவலை ஒரு பெண்ணே எழுதியுள்ளார் என்பது இலக்கிய வரலாற்று முக்கியத்துவமுடைய ஓர் அமிசமாகும்.

## 2

பெண்ணினுடைய சிந்தனை நோக்கிலிருந்தும், உணர்வுக் கோணத்திலிருந்தும் படைக்கப்பட்ட இலக்கியங்கள் தமிழிலே முற்று முழுதாக இல்லையென்றே கூறிவிடலாம், ஆண்டாள் என்னும் வைஷ்ணவ யுவதியின் காதல் நிலை எமது இலக்கியப் பாரம்பரியத்தின் ஒரு முழுமையான, வளமை நிறைந்த பகுதியாகப் பேணப்படாதிருந்திருப்பின், நச்செள்ளையாள் முதல் பெருங்கோப்பெண்டு, காமக்கண்ணியார் வரை இருபத்தாறு 'பெண்பாற் புலவர்கள்' சங்க இலக்கியத்தில் இடம் பெறுகின்றனர், இந்தப்



பெண்பாற் புலவர்கள் அவ்விலக்கியத் தொகுதியிற் பேசப்படும் 'ஆண்பாற் புலவர்'களிலிருந்து எவ்வகையில் வேறுபடுகின்றனரென்ற சிந்தனையே இன்னும் எமது இலக்கிய ஆராய்ச்சியாளர் சிந்தனையைத் தொடவில்லை. இந்தத் தொழில்முறை ஆராய்ச்சியாளர்களுள் பேராசிரியைகள் தொகை மிக மிகக் கணிசமானது. அகப் புறக் கோட்பாட்டின் இலக்கணக் கோப்பு வன்மைக்குள் அக்கோட்பாட்டின் அடிவேரான ஆண் — பெண் உணர்வுக் கோல வேறுபாடு மறைக்கப்பட்டு விட்டமையே எமது ஆராய்ச்சித்துறையின் ஆண் முதன்மையைக் குறிப்பிடுகின்றதெனில் அதனை வெறும் பிரசார ஒலியாகக் கைகழுவி விடமுடியாது. அடுத்து வரும் காரைக்காலம்மையார் பாடல்களிலும் இத்தனித்துவம் நோக்கப்படவில்லை முன்னர் கூறியது போல ஆண்டாள் எமது இலக்கிய உலகின் மகிழ்ச்சிதரும் புறநடையாக மிளிர்கிறாள். ஆண் பெண்ணாக நின்று உருகுவதை முக்கிய இலக்கிய 'பாவமா'கக் கருதும் எமது பாரம்பரியத்தில், ஒரு பெண் பெண்ணாகவே நின்றுருகுவதை விதந்தோதுவது குறைவாகவேயுள்ளது. குழந்தைப் பாடல்களை அக்காலக் கல்விமுறைக்கேற்பப் பாடிவைத்த ஒளவைப் 'பிராட்டி'யை விட்டால், 'பெண்பாற் புலவர்கள்' முக்கியம் பெறுவது தற்காலத் தமிழிலக்கியத்திலேயே, சிட்டி — சிவபாதசுந்தரத்தின் நூலில் நாவலாசிரியைகளென இருபத்தொருவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஹேமா ஆனந்ததீர்த்தன், எஸ். ரங்கநாயகி, சி. ஆர். ராஜம்மா போன்றோர் இடம் பெறவில்லை. இன்றைய சனரஞ்சக நாவலாசிரியைகளான சுஜாதா, இந்துமதி முதலியோரும் இடம் பெறவில்லை. ராஜம் கிருஷ்ணன் உட்படப் பல பெண்கள் பல நாவல்களை எழுதியுள்ளனரெனினும் தமிழ் நாவலின் வளர்ச்சியில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியவர்களென அவர்களைக் கொண்டாடும் இலக்கிய வழக்கும் இல்லை. ஜோர்ஜ் எலியட், வேர்ஜினியா ஊல்ஃப் ஆகியோருக்கு மேனாட்டு நாவல் இலக்கிய வரலாற்றிலுள்ள இடம்போன்று இங்கு எந்த நாவலாசிரியையும் போற்றப் படுவதில்லை,

எமது நாவலாசிரியைகளிற் பலர் 'குடும்ப நாவல்' என்ற நாவலின் உபவகையின் அகலமான வளர்ச்சிக்குதவியுள்ளனர். கோதைநாயகி அம்மாள் முதல் லக்ஷ்மி வரை பலர் 'கண்ணீர் இழுப்பி'கள் பலவற்றை எழுதியுள்ளனர். இன்றைய பெண் நாவலாசிரியைகளிற் சிலர் இன்று சஞ்சிகை இலக்கிய வழக்காகி விட்ட அசப்பியக்காம வர்ணனைகளைத் தமது வர்த்தக முத்திரையாகக் கொண்டுள்ளனரென்ற குற்றச்சாட்டும் உண்டு,

உண்மையில் பெண்ணின் கண்ணீரை தமது எழுத்து மூலதனமாகக் கொண்டு வாய்ப்பான இடத்தைப் பெற்றவர்கள் ஆண்களே. பி. எம். கண்ணனின் களமே அதுதான் என்று கூறிவிடலாம். இலக்கியத்தர நிலைகொண்டு நோக்கினாலும் அகிலன், ஷண்முகசுந்தரம், ஜானகிராமன், ஜெயகாந்தன் ஆகியோரின் வாசகியர் கவர்ச்சிக்கும் இதுவே காரணம்.

ஆயினும் பெண், தமிழ் நாவலின் முக்கிய கதைப் பொருளானதற்கு அடிப்படையான சமூகவியற் காரணமொன்றுண்டு. 'பாரம்பரியப் பண்பாட்டின் தொடர்ச்சி மறிவைச் சித்திரிக்கக் குடும்பம் எனும் சமூக நிறுவனத்தின் அச்சாணியான பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தாய். மனைவி, தமக்கை, தங்கை) முதன்மை நிலைப்பட்டது ஆச்சரியமன்று. மேனாட்டுச் சமூக அறத் தாக்கங்கள் காரணமாக முதன் முதலிற் கவனத்தை ஈர்த்தது இந்திய சமூகத்தில் பெண்ணின் நிலையேயாகும்' (நாவலும் வாழ்க்கையும்).

பெண்ணை நாவற் பொருளாகக் கொள்ளும் இப்பண்பு ஒரு புறமாக, பெண்களே இன்று தமிழ் நாவலின் முக்கிய வாசக வட்டத்தினராகவுள்ளனர் எனும் உண்மையையும் மனத்திருத்துதல் மறுபுறம் அத்தியாவசியமாகின்றது. நடுத்தர வர்க்கத்தின் கீழ், நடுநிலைகளிலுள்ள, பெண்களின் முக்கிய அறிவுப் போஷணையும் கால ஆக்ஷேபமும் (பொழுது போக்கும்) நாவல் வாசிப்பின் வழியாகவே கிட்டுகின்றன. இந்தத் 'தேவை' காரணமாக வழங்கப்படும் 'நிரப்பல்' தான் பெரும்பாலான தொடர்கதைகளும் ஒரு ரூபாய் நாவல்களும் என்பதையும் மனத்திருத்துதல் அத்தியாவசியமாகும்.

மேற்குறிப்பிட்ட பண்புகள் தனித்தனியாகவும் ஒருங்கிணைந்தும் தமிழ் நாவலில் பெண் பாத்திரங்கள் கையாளப்படும் முறையினைத் தீர்மானித்துள்ளன எனலாம். தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறு மட்டங்களிலும் பெண் அவ்வச் சமுதாயத்தின் அச்சாணியான குடும்ப நிறுவனத்தின் தொடர்ச்சிக்கு எவ்வாறு காலாக அமைகின்றாள் என்பதைக் காலமாற்றத்திற்கு ஏற்ப சித்திரிப்பது ஒரு பொதுப் பண்பாக முகிழ்த்துள்ளது எனலாம்.

இத்துடன் அழகியல் பற்றிய ஒரு காரணியும் இணைந்தே தொழிற்பட்டு வருகின்றது. நமது சமுதாயத்தின் பண்பாட்டுப் பாரம்பரியயத்தின் அழகியல் அம்சங்களாக நாம் கொள்பவை பெண்மையைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள லாவண்ய உணர்வை அடிப்படையாகக் கொண்டவையே என்பது சற்று ஆழமாக ஆராயும் பொழுது தெரியவரும். அழகு, பண்பாட்டுப் பூரணத்துவம் பற்றி நாம் ஒவ்வொருவரும் கொண்டுள்ள கருத்துக்களின் பிரத்தியட்ச படிமங்கள் யாவை என்பது பற்றிய வினாவை எம்மெம் மனங்களுக்குள் எழுப்பி விடைகாணும் பொழுது இது சற்றுப் புலனாகும்.

இதனாலே பெண்ணைப் பெண்ணின் நோக்கிலிருந்து அறிந்து கொள்வதற்கான பண்பாட்டுத் தடைகள் பல ஏற்பட்டுள்ளன. பெண் எழுத்தாளர்களே இத்தடைக்கு ஆட்பட்டு நிற்பதே இதிலுள்ள சுவாரசியமான அமிசமாகும். அதாவது, பெண், பெண்மை பற்றி ஆண் — நோக்கு நிறுவியுள்ள சமூக — அழகியற் கோட்பாடுகளையே பெண் எழுத்தாளர்களும் வளர்த்தெடுத்துச் செல்கின்றனர். (இவ்விடத்திலேதான் ஆண்டாளுக்குள்ள இலக்கியத் தனித்துவம் புலப்படுகின்றது.)

இத்தகைய ஒரு சமூக — இலக்கிய — அழகியற் பின்னணியில் வைத்து நோக்கும் பொழுதுதான் ராஜம் கிருஷ்ணனின் இந் நாவல் முக்கியம் பெறுகின்றது.

## 3

வீடு நாவலின் முக்கியத்துவத்தை இன்னொரு நிலை நின்றும் எடுத்துக் கூறவேண்டுவது அத்தியாவசியமாகின்றது. நாவலைப் பொறுத்தவரையில் அதன் 'இலக்கண நெகிழ்ச்சி'க்கு முக்கிய



காரணியாக அமைவது, அது நாவலாசிரியரின் நோக்கு நிலைப்படச் சமுதாயத்தை, (அது சமகாலமாகவல்லாது, அதற்கு முற்பட்ட வரலாற்றுக் காலமாகக்கூடவிருக்கலாம்) தவிர்க்க முடியா வகையிற் பிரதிபலிக்கும் பண்பாகும். இந்தவகையில் ஆங்கிலத்தில் 'வுமின்ஸ் லிபரேஷன் மூவ்மென்ற்' எனப்படும் ''பெண் தளைநீக்க வியக்கம்''. இந்தப் பெண் தளைநீக்க வியக்கம் மேனாட்டு அறிவுச் சூழலுடன் வந்ததால் அப்பண்பாட்டமைப்பிற் காணப்படும் அமிசங்களை மாத்திரமே கொண்டதால் (உடை, மோஸ்தர், சுலோகங்கள் முதலியவற்றில் இது தெரியும்) இருப்பதும் கொள்ளப்படுவதுமே இயல்பாகியுள்ளது. பெண் தளை நீக்கம் எமது வரலாற்றுப் பண்பாட்டுச் சமூகச் சூழலில் எத்தகைய உருவையும் அமைப்பையும் பெறும், பெறமுடியுமென்பதை இந்நாவல் நன்கு சித்திரிக்கின்றது. அந்த முறையிலேயே கவர்ச்சிகரமுள்ளதாகவுள்ளது என்பது என் அபிப்பிராயமாகும். அத்துடன் தளை நீக்கப்பட்ட பெண் பாத்திரங்களைக் கொண்ட பிற தமிழ் நாவல்களுக்கும் இந்நாவலுக்குமுள்ள வேறுபாடும் இதிலேயே தங்கியுள்ளதெனலாம். இது பற்றிப் பின்னர் பார்ப்போம்.

## 4

நாவலாசிரியர் தமக்கு நன்கு பரிச்சயமான தென்னிந்தியத் தமிழ்ப் பிராமணக் குடும்பமொன்றினையே கதைக் களமாகக் கொண்டுள்ளார்.

வறுமைப்பட்ட ஒரு குடும்பத்திற் பிறந்த தேவி, தனது குடும்பத்தின் சக்திக்கு மீறிய சீதனம், வரதட்சணையுடன் சாமிநாதனை மணக்கிறாள். புகுந்த குடும்பத்தின் அந்தஸ்து மட்டம் சற்று உயர்ந்ததாகவிருப்பதால் பிறந்தகத்திலிருந்து அந்நியப்படுத்தப்பட்ட தேவி, தன் குடும்பம் கீழ் — நடுத்தர நிலையிலிருந்த பொழுது அதன் பொருளியல் முன்னேற்றத்திற்குத் தையல் வேலை செய்வதன் மூலம் தன் பங்களிப்பினைச் செய்கிறாள். குடும்ப நிலை முன்னேறுவதற்கு அவள் தன் தேவைகளை விட்டுக் கொடுத்துப் பெருஞ் சிரமத்துடன் உழைக்கின்றாள். கணவன் சாமிநாதனின் விடாப்பிடியான சுயநலஞ் சார்ந்த குணங்கள் காரணமாக தன் குடும்பத்துடன் தொடர்புகள் அற்றவளாகவே காணப்படுகிறாள். சாமிநாதன் இது சம்பந்தமாகச் சற்றும் அநுதாபமற்றவராகவே காணப்படுகிறார். அவருக்குத் தேவி ஒரு உழைக்கும் யந்திரம் தான். அவள் மிக்க சிரமத்துடன் தனது மூன்று பிள்ளைகளையும் வளர்த்தெடுத்தாலும் அவர்கள் தகப்பனிடத்திற் காணப்படும் நடுத்தரவர்க்கப் பெறுமான விருப்புடையோராகவே காணப்படுகின்றனர். மூத்த மகள் கலியாணமாகிச் சென்றுவிட்டாள். பிள்ளைகளின் இந்நிலைபாடு அவளின் 'அந்நியப்பாட்டினை' உக்கிரப் படுத்துகின்றது. அவளது பள்ளித் தோழியின் மகளும், பெண் தளைநீக்க இயக்கத்தில் திரிகரண சுத்தியாக ஈடுபடுபவளும், சிந்தனை வேகமும் குணநேர்மையுமுடைய ரஞ்ஜனியின் வருகையால் தேவி குடும்பம் சம்பந்தமான தனது நிலைமையையும், தனது கணவன் பிள்ளைகளுடன் தான் இணைய முடியாத்தன்மையையும் நன்கு உணர்கின்றாள். சாமிநாதனின் தன்னிச்சையான பண்பு, உத்தியோகத்திலிருந்து இளைப்பாறிய பின்பு மேலும் இறுக்கமுறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இரண்டாம் மகளின் திருமணத்தைப் பயன்படுத்தித் தனது மேல்வர்க்க இணைவினைப் பூர்த்தி செய்யவிரும்பும் கணவன், அதனைப் பூர்த்தி செய்வதற்கான கிரயமாக, தாங்கள் இருவரும் முன்னர் தமது எதிர்காலப் பாதுகாப்பிற்காகக் கட்டிய வீட்டையே விற்கத் துணிகின்ற பொழுது அவளின் எதிர்ப்புணர்ச்சி செயல்வடிவம் பெறத் தொடங்குகின்றது. வீடு விற்கப் பெறுகிறது. அவளும் அவளது சகோதரியும் மேலும் உதாசீனம் செய்யப்படுகின்றனர். கல்யாண மண்டபத்தில் வைத்து, நாட்டியக்கச்சேரி ஒழுங்கு செய்து வருமாறு கணவன் கொடுத்த பணத்திற்குக் கச்சேரி ஒழுங்கு செய்யாது, தன் விதவைத் தங்கையின் குழந்தைகளுக்குத் துணிகள் வாங்கிக் கொண்டுவந்து விடுகிறாள். கலியாணம் முடிந்து நாட்டியக் கச்சேரி தொடங்குவதற்கு முன் தேவகி தலைநீக்கியவளாக (மேலே குறிப்பிடப் பெற்ற எண்ணங்களை மனதில் தாங்கியவளாய்)ப் புறப்படுகிறாள்.

இதுதான் 'வீடு' நாவலின் பருவரைவான கதைப் பின்னல். இக்கதைப் பின்னலின் இயக்கம், வேகத்திற்கான 'சம்பவங்கள்' பல்வேறு பாத்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஊடாடிக் கொள்ளுவதனடியாகவும், ஒன்றையொன்று பாதிக்கும் வழிவகைகளினடியாகவும் வருகின்றன, வளர்கின்றன. தேவியின் குணவிகசிப்பிற்குச் சாமிநாதனின் அநுதாபமற்ற, தன்னிச்சையான போக்கு. அவளது சகோதரியின் பரிதாபத்துக்குரிய பொருளாதார நிலைப்பற்றி அவளிடத்து ஏற்படும் தாப உணர்வு ஆதியன உதவுகின்றன; யாவற்றுக்கும் மேலாக ரஞ்ஜனியின்பால் அவளுக்குள்ள கவர்ச்சி, ஈடுபாடே காரணமாக அமைகிறது. நாவலின் பின்வரும் பகுதி அந்த ஈடுபாட்டுணர்வை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

'......ஆன்ட்டி, இப்ப பெண்ணுரிமைப் போராட்டம்னு மேல்நாட்டிலெல்லாம் நடக்கிறதே, நீங்க அதைப்பத்தி என்ன நினைக்கிறீங்க?'

சடாரென்று அவள் உணர்ச்சி வசப்பட்டுவிடுகின்றான். தேவியோ திக்குமுக்காடினாற் போல் நிற்கிறாள்.

'இருக்கலாம், ஆன்ட்டி, இந்த ஆண்வர்க்கமே முக்காலும் பெண்ணைப் பொம்மைபோல வச்சு விளையாடத்தான் நினைக்குது. குழந்தை ஒரு சமயம் பொம்மை வச்சுக்கும், அடிக்கும், உதைக்கும், மண்ணில புரட்டும். அப்படித்தான். எங்கப்பா அப்படித்தான் நினைச்சார். ஆனா, மம்மி எல்லாரையும் போல் இயந்திரமாகி இயங்கி விட்டு மண்பொம்மையாக மாய இஷ்டப்படாமல் புகழ் சேர்க்க விரும்பினாள் அது நடக்கல. அதற்குப் பிறகுதான் ஆன்ட்டி, நான் தீவிரமாக இப்படி ஒரு புரட்சி பண்ணனும்னு விரும்பினேன். ஆன்ட்டி, பெரிய படிப்பு படிச்சு, வேலை செய்து ஆணுக்குக் குறையாமல் சம்பளம் வாங்குபவர்களெல்லாம் பணத்தைக்கொட்டிக் கொடுத்து, படுக்கையறைப் பொம்மை அந்தஸ்துக்குத் தலைகுனியிறாங்களே? அக்கிரமமாயில்லை!'



அவள் உதடுகள் துடிக்கின்றன. அவளை 'என் கண்ணே' என்று நெஞ்சாரத் தழுவிக் கொள்ளும் உணர்ச்சி உந்துகிறது: ஆனால் எல்லாவற்றுக்கும் வரையறை சமைத்துக் கொண்டே உணர்ச்சியற்றுப் போய்விட்ட பழக்கம் அவளைக் கட்டுப்படுத்துகிறது:

'அக்கிரமம்தான்...... உன்னைப் பார்த்ததே எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறதும்மா. எனக்குச் சொல்லத் தெரியவில்லை........'

உண்மையில் தேவி தன்னை உணர்ந்து செயல்படுதற்கு ரஞ்ஜனிதான் காரணமாகிறாள் என்றுகூடக் கூறலாம். தேவியின் கருத்துக்கள் நிலைபேறான உருவும் ஸ்திரப்பாடும் பெறுவதற்கு துரையின் பாத்திரமும் நன்கு உதவுகின்றது. தனது இரண்டாவது மகளினதும் (நளினியினதும்) ரஞ்ஜனியினதும் குணவேறுபாட்டில், பெண்மையின் வர்த்தமான முரண்பாட்டைக் கண்டு ரஞ்ஜனிபால் ஆத்மார்த்தமாக இழுக்கப்பெறும் தேவி தன் மகன் துரையுடன்தான் தன் உள்ளுணர்வுகள் வெளிப்படும் முறையில் விவாதிக்கிறாள். தன்னை, தன் ஆத்ம ஓலங்களை நன்கு விளங்கிக் கொண்டவன் என்று நம்பியிருந்தவனிடமிருந்தும் பின்னர் அவள் உணர்வு ரீதியாக விடுபடுகிறாள்.

'அவன் அவளிடமிருந்து இதொன்றையும் எதிர்பாராதவன் போல் திகைத்து நிற்கிறான். அந்தத் திகைப்பின் பொருளை அவள் புரிந்து கொள்கையில் அவனும் அவளை விட்டு அந்நியமாகி விட்டது ஐயத்துக்கிடமின்றித் தெளிவாகின்றது. தாயை உணர்ந்து கொள்ளும் ஒரு இதமான மகன் என்று அவள் ஒட்டுதலாக நம்பி இருந்ததுங்கூட வெறும் பிரமைதானோ என்று எண்ணுகிறாள். இரண்டு பெண்கள், பையன், மூவரும் தந்தையின் மக்கள்தானா?......'

தேவியின் மாற்றம் படிப்படியாகவே ஏற்படுகிறது: ஒரு தடவை மகன் 'அப்பா எங்கே? ஆபீசில்லை என்ற பேரே ஒழிய அவர் வீட்டிலேயே தங்குவதில்லை. போலிருக்கு' என்று கேட்கும் பொழுது அவள் கூறும் பதில்:

'என்னிடம் கேட்காதே; என்கடமை உழைக்கிறேன்; வேறு என்ன உரிமை இருக்கு' என்றாள்.

ஆனால் அவள் இந்நிலைமைக்கு வருவதற்கு முன் அவள் குடும்ப உறவைப் பேணிக் காக்க விரும்பியவள்தான்.

'அவளுடைய தூக்கி எறியும் குரலுக்கு ரோசம் காட்டுவதாக இருந்தால் அவள் ஆயுள் முழுவதும் பேசக்கூடாது: குறைந்த பட்சம் அன்று முழுதுமேனும் அவர் முகத்தில் விழிக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்...... அவருக்கு வெற்றிலை எடுத்துக் கொடுக்கத்தான் வேண்டும்; அவர் பேசாவிட்டாலும் அவள் ஒன்றுமே நடவாதது போன்று இயங்க வேண்டும் அவளுடைய பலவீனம் அது 'நாலுபேருக்கு' முன் அந்த அமைப்பு குலைந்துவிடக் கூடாதென்ற பயம்.

இது கூடத் தளைநீக்க உணர்வு வந்தபின் ஏற்படும் சிந்தனைதான். ஆனால் அவள் தன் வாழ்வு முழுவதிலும் மாங்கல்ய பாக்கியத்தின் — மஞ்சள் குங்குமத்தின் மகிமையை மற்றெந்த மரபு வழிவரும் பெண்போலவே போற்றி வந்தவள் என்பது அவள் முதல் தடவையாகக் கணவனது அநுதாபமற்ற அதிகாரத்தை மீறியதனால் ஏற்பட்ட தாக்கத்தினால் தெரியவருகிறது.

'சின்னஞ்சிறு பெண்ணாக பேதைப் பருவத்திலிருந்து மலரும்போதே, மஞ்சளும் குங்குமமுமாக, சுமங்கலி என்ற பெருமைசேர வாழ்வதே ஒரு பெண்ணின் வாழ்க்கை என்ற கோட்பாட்டினால் ஊட்டம் பெற்றிருக்கிறாள். அந்த இலக்கை உயிர் நாடியாகச் சுமந்திருப்பதனாலேயே அவள் அவருடைய ஆதிக்கக் கடுமையின் நியாயத்தை ஏற்றிருக்கிறாள். அதனாலேயே அவள் வாயில்லாப் பூச்சியாக இருந்திருக்கிறாள். பல போழ்துகளில் அந்த உணர்வு அவளை ஆட்டிப் படைக்கவும் செய்திருக்கிறது. இப்போதும் அவளைத் தடுமாறச் செய்கிறது.

ஆண்டவனே, அவருக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள்; எனக்கு மாங்கல்யப் பிச்சை போடுங்கள்! என்று கரைகிறாள். அவருடைய சுயநலம் விளைவித்த கடுமைகளை மீறி அவள் உள்ளம் அவர் 'லொடுக்' கென்று தளர்ந்துவிட்டதே என்று பதைபதைத்ததென்றால், அதற்கும் காரணம் அந்த மஞ்சள் குங்குமம் என்ற இலக்குத்தான். அவர் வெளியே சென்று குறித்த நேரத்தில் திரும்பவில்லையெனின் ஏதேதோ எண்ணங்களைச் சுமந்துகொண்டு திகில் கவ்வ வழிமேல் வைத்த விழிகளுடன் நிற்பாள். 'விளக்கேற்றி நூறு முறை நாம ஜெபம் செய்கிறேன்; அதற்குள் வந்துவிடுவார்......' என்று முனைவாள். தான் சுமங்கலியாக, ஊராரும் உற்றவரும் புகழ மகன் கொள்ளி வைக்க, ஒரு இந்துப் பெண்ணாக வாழ்ந்து முடியும் இலட்சியம்? ......அது மூளியாகிவிடுமா?

இப்படியாக மஞ்சள் குங்குமமேதான் இலட்சியமென்று வாழ்ந்தவள், இறுதியில் வீட்டை விட்டுப் புறப்படுவதில்தான், தேவி சாதித்த புரட்சியின் உக்கிரம் புலனாகின்றது.

தேவியின் மனோபாவத்தின் ஒரு முக்கிய அம்சம் அவள் தான் சுயமாகச் சம்பாதித்து வாழவேண்டுமென்று விரும்பியதுதான். அத்துடன் அவள் பகட்டாரவாரமான செலவையும் வெறுத்தாள். முதலிற் கூறப்பட்ட அந்தப் பொருளியற் சுதந்திர தாகம்



கூட அவளின் வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு முடிவாகத்தான் அமைந்தது.

தேவியின் தளைநீக்க உணர்வினை அவள் காட்டிய இரு எதிர்ப்புக்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

முதலாவது சம்பவம், அவள் மகள் நளினியைப் பெண்பார்க்க வரும்பொழுது தேவி, தன் தையல் வகுப்புக்கள் மூலம் தொடர்பு கொண்ட ரமணம் மாறுக்காக, மகளிர் — சிறுவர் முன்னேற்ற மன்ற ஆண்டு விழாவுக்குப் போகவேண்டி ஏற்படுவதாகும். விழாவுக்கான அழைப்பு முன்னரே வந்துவிடுகிறது. நளினியின் பெண் பார்ப்பு வைபவம் பற்றிக் கணவர் அப்பொழுதுதான் தெரிவிக்கின்றார். தன் மகளுக்கு வரன் நிச்சயமாவது தனக்கு இத்தனை தாமதமாகத் தெரிகிறது என்பது ஆச்சரியமாகவிருந்தாலும் அவள் விழாவுக்குப் போகத் தீர்மானிக்கிறாள்.

'அவளுடைய இத்தனை ஆண்டுக் குடும்ப வாழ்வில் இவ்வாறு ஒருநாள் கூட எதிர்க்கொடி பிடிக்க அவள் முனைந்ததில்லை. இப்பொழுது அவளுக்கே அவள் செயல் புதுமையாக இருக்கிறது'

இந்த எதிர்ப்புக் காரணமாகக் கணவன் மனைவிக்கிடையே ஏற்படும் சண்டை காரணமாகச் சாமிநாதனுக்கு 'ஸ்ட்ரோக்' ஏற்படுகிறது. அந்த நிலைமையில் அவளுக்கு ஏற்பட்ட மஞ்சள் குங்குமப் பிரக்ஞையுணர்வுதான் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது எதிர்ப்பு நிகழ்ச்சி அவள் வீட்டை விட்டு வெளியேறுவது. இதுவே நாவலின் உச்சக்கட்டம். அதுவே நாவலின் முடிவும். இந்த 'வெளிநடப்பினால்' ஏற்படக் கூடிய தாக்கங்கள் யாவற்றையும் உணர்ந்தவளாகவே புறப்படுகிறாள்.

'இதன் விளைவுகள் அவளைப் பலவாறாகப் பாதிக்கக் கூடும்; உங்களுக்கும் பெருத்த அதிர்ச்சி அளிக்கக்கூடும். என்றாலும் மனிதத்தன்மைக்குப் பொதுவான கசிவு அவளை வென்றுவிட்டது......'

என்று, நாவல் இறுதி நோக்கிச் செல்கிறது. தமிழ் இலக்கியப் பரிச்சயமுடையோருக்குக் கம்பனுடையது என்று கருதப்படும் 'மானுடம் வென்றதம்மா' என்ற வரி நினைவுக்கு வரலாம்.

மஞ்சளும் குங்குமமும் என்ற பண்பாட்டு வரையறைக்குள்ளே பெண் தளைநீக்க உணர்வு எவ்வாறு தொழிற்படுகின்றதென்பதை இந்நாவல் காட்ட முனைகின்றது. பாரம்பரியச் சமுதாயத்தின் அழிபாட்டில் நாவல் தோன்றுகின்றதென்ற உண்மையை ஏற்றுக் கொண்டால், இந்நாவலில் நாம் உண்மையான ஒரு நாவலைக் காண்கின்றோம் எனலாம்.

(அடுத்த இதழில் முடியும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்ந்தவர் நிமிர்ந்திட
தனிக் குரல் கொடுக்கும்
மல்லிகையே நீ வாடா மல்லிகை

**வாழும் மலரே, வாழ்க!**

**தா. திருநாவுக்கரசு** பா. உ.
கல்லூரி வீதி,
**காங்கேசன்துறை.**

தொலைபேசி: 892

## எழுத்தாளர்
# சு. சமுத்திரத்தின்
### புதிய படைப்புக்கள்

செ. யோகநாதன்

மல்லிகை வாசகர்கள் சு. சமுத்திரத்தை நன்கு அறிவார்கள். ஏற்கனவே மல்லிகை இதழில் சமுத்திரத்தைப் பற்றி எழுதியிருக்கின்றேன். இப்போது அவருடைய மூன்று சிறுகதைத் தொகுதிகளும், நாடக நூல் ஒன்றும் பார்வைக்குக் கிடைத்திருக்கின்றன.

'காகித உறவு', 'ஒரு சத்தியத்தின் அழுகை', 'உறவுக்கு அப்பால்' ஆகிய மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் மணிவாசகர் நூலகத்தினரும், 'லியோ டால்ஸ்டாய்' நாடக நூலினை கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தினரும் வெளியிட்டுள்ளனர்.

'லியோ டால்ஸ்டாய்' நாடகம், படிப்பதற்கும், நடிப்பதற்கும் உரிய வகையிலே அமைந்தது. வானொலியிலும், தொலைக்காட்சியிலும் நாடகமாக இதனைக் கண்டும், கேட்டும் தமிழ் மக்கள் மகிழ்ந்திருக்கிறார்கள். பத்தாண்டு காலமாக சமுத்திரம் இந்த நாடகத்தினை எழுதுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, தகவல்களைச் சேகரித்த நிறைவோடேயே 'லியோ டால்ஸ்டாய்' உருவாகியுள்ளது. தமிழ் நாட்டில் சராசரி மேடை நாடகங்களின் அசட்டுத்தனங்களிடையே, ஒரு திருப்திகரமான முயற்சியாக இந்த நாடகம் இக்காரணத்தாலேயே விளங்க முடிந்தது. நாடகத்தினை வாசித்துப் பார்க்கிறபோது ஒவ்வொரு பாத்திரமும் பிசகின்றி எங்களோடு நெருங்கி வருவதனை நாங்கள் உணர முடிகின்றது. லியோ டால்ஸ்டாய், அவர் மனைவி சோன்யா, டால்ஸ்டாயின் பிள்ளைகளான அலக்சாண்டிரியா, லியோ, ஆத்ம நண்பர் செர்ட் கோவ், மார்க்ஸிம் கோர்க்கி, காஷா, ஓஸோலின் ஆகியோருடைய பாத்திரங்களை மிக நுட்பமாகவும், வெகு சுருக்கமான வார்த்தையாடல்களின் மூலமும் கச்சிதமாகச் சமுத்திரம் உலவ விட்டிருக்கின்றார். நாடகப் பிரதிகள் பஞ்சமான தமிழ் நாடக மேடைத் துறைக்கு, 'லியோ டால்ஸ்டாய்' சிறந்த பங்களிப்பாகவே அமைந்துள்ளது. சமுத்திரம் இத்தகைய முயற்சிகளைத் தொடர வேண்டும் என்பது காலத்தின் வேண்டுகோளாகும்.

பேராசிரியர் நா. வானமாமலையின் நீண்ட, ஆழமான முன்னுரையோடு 'ஒரு சத்தியத்தின் அழுகை' வெளியாகியிருக்கின்றது. பன்னிரண்டு சிறுகதைகள் இத்தொகுதியிலே அடங்கியுள்ளன. பேராசிரியர் க. கைலாசபதியின் முகவுரையோடு வெளியாகியுள்ள 'காகித உறவு' களில் ப[illegible] சிறுகதைகள் உள்ளன. பேராசிரியர் கா[illegible]யின் முன்னுரையோடு ஒன்பது கதைகளை உள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளடக்கிய 'உறவுக்கு அப்பால்' வெளிவந்துள்ளது. மொத்தம் முப்பத்திரெண்டு கதைகளை உள்ளடக்கிய இந்த மூன்று தொகுதிகளும் பொதுவான பல அம்சங்களை உள்ளடக்கியுள்ளன. சு. சமுத்திரத்திற்கு ஒரு ஆழ்ந்த தத்துவ நெறி வழிகாட்டலுண்டு அதனாலேதான் சிவத்தம்பி குறிப்பிடுவது போல 'எமது சமூக வாழ்க்கையிற் காணப்படும் சராசரி சம்பவங்களில், சம்மந்தப்படும் பாத்திரங்களின் இன்னலுணர்வை, அவற்றின் சோகத்தை, திருப்தியை சித்திரிக்கும் சமுத்திரம் அவர்கள் அவற்றுக்கான சமூக நியாயங்களையும் எடுத்தக்காட்டத் தவறவில்லை. இதுவே சமுத்திரத்தின் கதைகளின் மிக முக்கிய சிறப்பு ஆகும்' என்ற கூற்றை வலியுறுத்திக் கூற முடிகிறது. சமுத்திரத்தின் கதைகளின் மற்றதொரு சிறப்பம்சம் அவரது மொழி நடையாகும். அவர் மக்களின் மொழிநடையினை ஆழ்ந்து கிரகித்துள்ளமையை அவரது படைப்புக்களிலே துல்லியமாகத் தரிசிக்க முடிகின்றது. தமிழ் நாட்டுக் கிராமிய மாந்தரையும், நகரத்து வாழ்வில் அடிமட்ட நிலையினில் உழல்வோரையும் அவரது சொந்த மொழிகளிலேயே நமக்கு அறியத்தருகின்றார் சு. சமுத்திரம். 'பொதுவாக பல்வேறு நிலைகளில் தருமத்தின் வாழ்வுதன்னை சூது கவ்வுவதைப் படம் பிடித்துக் காட்டுவதில் ஆசிரியர் வெற்றி கண்டிருக்கிறார். சிற்சில நுணுக்கக் காட்சிகள் அற்புதமாய் அமைந்துள்ளன. இது பாராட்டுக்குரிய சாதனையே' என்ற கைலாசபதியின் கூற்று முற்றிலும் பொருத்தமானதே.

சமுத்திரத்தின் ஆறு நூல்கள் இதுவரை வெளியாகியுள்ளன. அவை ஒவ்வொன்றும் அவரது படிமுறை வளர்ச்சியையும், பார்வையின் முன்னேற்றத்தினையும் நமக்கு உணர்த்துகின்றன. அழுக்கும் ஆபாசமுமே தனக்குக் காட்டி நிற்கின்ற தமிழ் இலக்கிய உலகிலே தத்துவத் தெளிவுடனும், போராட்ட நெறியுடனும் எழுதிவருகின்ற இளைஞரான சமுத்திரம், முற்போக்கு கலாச்சார அணிக்கு வாய்த்துள்ள சிறந்த போராளி ஆவார். பொன்னீலன், அக்கினி புத்திரன், பா. செயப்பிரகாசம், ஜெயந்தன், தெ. சுப்பையன், லிங்கன் போன்ற புதுத் தலைமுறைப் படைப்பாளர்களோடு எழுதி வருகிற சமுத்திரம் இவ்வளவு குறுகிய காலத்தில் வகைவகையான பாத்திரங்களையும், சூழலையும் அறிமுகப் படுத்தியிருப்பதே தமிழிலக்கிய உலகில் யாரும் இயற்றாத ஒரு சாதனையாகும்.

சமுத்திரத்தின் கதைகளைப் பற்றி பேராசியர் நா. வானமாமலையின் கருத்தோடு இந்த அறிமுகத்தை முடிக்கிறேன். எல்லா வாசகர்களுக்கும் சமுத்திரத்தின் நூல்களை வாசிக்கச் சிபார்சு செய்கிறேன் — '...சமுத்திரத்தின் கதைகள் பொதுவாகத் தற்காலச் சமுதாய அமைப்பின் முரண்பாடுகளையும் அவற்றின் நியாய அநியாயங்களையும் அலசிப்பார்க்கிற சமுதாய ஆய்வு நிரம்பியதாக உள்ளது. இவ்வாய்வின் விளைவுகள் கற்பனை, கலையுணர்வு, கலைத்திறன் ஆகிய ஊடகங்களின் வழியே கலைப் படைப்பாகின்றன. ஒரு தத்துவார்த்தக் கண்ணோட்டம் இருப்பதால் இப்படைப்புகள் வக்கரித்து நிற்பதில்லை. புற உண்மைகளை கலை உண்மைகளாக மாற்றுவதில் வெற்றி பெறுகின்றன'.



# கூரை ஒன்றுதான்

தெணியான்

நேர்முகப் பரீட்சைக்காகக் கொழும்புக்கு வந்திருந்தான், குமரேசன்.

அவன் கொழும்பு வந்திருப்பது இதுதான் முதல் தடவையல்ல. இதற்கு முன்னரும் இரண்டொரு தடவைகள் வந்து போயிருக்கிறான்.

முன்னரெல்லாம் அவன் கொழும்புக்குப் புறப்படுகின்றபோது அவன் தாய் வந்து, 'நீ அங்கே ஆரோடை தங்கப் போறாய்? உனக்குத் தெரிஞ்சவை அங்கே ஆர் இருக்கினம்?' என்று விசாரிப்பதில்லை. குமரேசனும் அந்த விபரங்களை அவளுக்குச் சொல்லிக் கொள்வதுமில்லை. அவனோடு ஒன்றாகப் படித்த நண்பர்கள் சிலர் உத்தியோகமாக அங்கு இருக்கிறார்கள். அவர்களின் அறைக்குட் போய் முடங்கி, நேர்முகப் பரீட்சையை முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்பி விடுவான்.

இந்தத் தடவை அவன் கொழும்புக்குப் புறப்படப் போகிறான் என்று அறிந்ததும் அவன் தாய் உள்ளூரத் துடித்துப் போனாள். அவள் அண்மைக் காலத்தில் கேள்விப்பட்ட செய்திகள் அவ்வளவு பயங்கரமானவை. ஆனால் தினமுந்தான் புகைவண்டிகள் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே ஓடிக்கொண்டிருக்கின்றன; அவற்றில் சனங்கள்தான் பிரயாணம் செய்கிறார்கள் என்பது அவள் விளங்கிக் கொண்டு ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளல்ல,

'மேனை நீபோய் ஆரோடை தங்கப்போறாய்?'

'சினேகிதனவை இருக்கினம்'

'கண்டவையளையும் நம்பி இப்ப போகேலாது'

'அதுக்கென்ன செய்யிறது?'

'நீ நல்ல இடத்திலேபோய் நிக்கவேணும். இடையிலே போக்குவரத்திலே மாத்திரம் கொஞ்சம் கவனமாய் இரு! கொம்மான் அருணாசலம் பெரிய உத்தியோகத்திலே இருக்கிறான். அவன் இப்ப அங்கத்தையில் ஆள்தானே! நீ தம்பி, தம்பி வீட்டுக்கே போ!'

'அவர் வீட்டுக்கு இதுவரையிலே நான் ஒருநாளும் போகயில்லையே!'

'போகாட்டால் என்ன? எப்பிடியோ ஒரு இரத்தம் உன்னைக் கவனியாமல் விட்டுவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனே! இரண்டு நாள் நிண்டு விட்டு வாறதுதானே! அவனுக்கு எழுதினால் இந்த உத்தியோகம் உனக்குக் கிடைச்சாலும் கிடைக்கும். பெரிய பெரிய ஆக்களெல்லாம் அவனுக்கு நல்ல சினேகிதமாம்'

'.........................'

'என்ன ஒண்டும் பேசிறு யில்லை. நான் ஒரு கடதாசி எழுதுவிச்சுப் போடுறன்; நீ அவனிட்டைத்தான் போ'

அவள் தன் ஒன்றுவிட்ட சகோதரன் அருணசலத்துக்கு விஸ்தாரமாக ஒரு கடிதம் எழுதுவித்து அனுப்பினாள். அவருக்கு அவள் அனுப்பிவைத்த முதற் கடிதமும் அதுதான். கடிதத்திலேயே முருங்கைக்காயும் மாம்பழமும் மகனிடம் கொடுத்தனுப்புவதாகவும் தெரிவித்திருந்தாள்.

அருணசலம் யாழ்ப்பாணத்துக்கு வந்துபோய் ஏறத்தாழ இருபது ஆண்டுகள்வரையில் இருக்கும். அவர் தந்தை காலமான சமயம், அவர் மாத்திரம் வந்து தன் கடைசி உறவுக்கும் கொள்ளி வைத்துவிட்டுப் போனார். அப்போது குமரேசனுக்கு ஐந்து வயது. அரையில் துணி கட்டிக்கொள்ளாத அம்மணச் சிறுவனாக நின்று முதல் தடவையாக அவரை அவன் பார்த்திருக்கிறான். அதன் பின்னர் நாட்டிலே எத்தனையோ சம்பவங்கள் நடந்து முடிந்து விட்டன. அவர் விமானத்தில் பறந்து வந்து குதிக்கவுமில்லை, கப்பலேறிக் கரை சேரவுமில்லை. கொழும்பு ஏழில் வாழ்ந்து கொண்டிருக்கும் அவருக்கு எல்லாம் சௌசன்னியமாகத்தான் இருந்து வருகின்றன.

அவருக்கு மனைவியாக வந்து வாய்த்தவள் பிறந்ததும் வளர்ந்ததும் எல்லாமே கொழும்பில் தான். அவள் பெற்றோரின் பூர்விகம் மாத்திரம் யாழ்ப்பாணம். குமரேசனோ அல்லது அவன் தாயோ அவளை இது வரை என்றுமே கண்டதில்லை.

அவன் வீட்டிலிருந்து புறப்பட்ட அன்று, அவன் தாய் கோயிலுக்குப் போய்வந்தாள். அவன் பெயரில் பூசை கட்டி, திருநீறு சந்தனத்தைக் கொண்டு வந்து பக்தி சிரத்தையோடு அவன் நெற்றியிலே பூசி பொட்டு மிட்டாள்.

'மேலை மிச்சம் கவனம். கொம்மான் ரெயிலடிக்கு வருவன். அவனிட்டை மாளிகை போல இரண்டு பெரிய கார் நிக்கிதாம்' என்று சற்றுப் பெருமையோடு அவள் சொல்லிக் கொண்டபோது, முருங்கைக் காயையும் மாம்பழத்தையும் ஏற்றிச் செல்லவாவது அருணசலம் வரக்கூடும் என்று அவள் நம்பினாள்.

குமரேசன் கோட்டைப் புகையிரத நிலையத்தில் சென்று இறங்கியதும், அவனை யாராவது எதிர்பார்க்கிறார்களா என்று ஆவலோடு விழிகளைப் பல திக்கிலும் ஓடவிட்டுத் தேடுதல் நடத்தினான். சற்று நேரம் தாமதித்ததின் பின்னர் ஏமாற்றமடைந்து, டாக்ஸி ஒன்றைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டான்.

இருள் இன்னும் சரியாக வடியாத அந்த அதிகாலை வேளையில், குமரேசன் டாக்ஸியை விட்டிறங்கி, பெட்டிகளைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு, கேற்றைத் தாண்டி உள்ளே சென்று வீட்டு வாசல் 'கோலிங் பெல்லை' மெல்ல அழுத்தினான். சில நிமிட தாமதத்தின் பின் இரவு உடையை இன்னும் களையாத நிலையில்



# கடற்புறம்

காலமகள் மணமெடுத்து
கோலமிட்ட கடற்புறத்தில்
ஏழைமகள் ஒருத்தி.
முன்னே கடல் விரியும்
முதுகடலின் பின்னடி
விண்ணோ தொடரும்
விண்ணுக்கும் அப்பாலே
விழிதொடர நிற்கின்றாள்.

தாழைபரவேலி
தள்ளி ஒரு சிறுகுடிசை
சிறுகுடிசைக்குள்ளே
தூங்கும் சிறுகுழந்தை.
ஆழக் கடலில்
ஆடுகின்ற தோணியிலே
தாழம்பூ வாசம்
தரைக்காற்று சுமந்துவரும்.
காற்று கொடுங் காற்று
காற்றோடு கும்இருட்டு
கும்இருட்டே குலைநடுங்க
கோசமிட்ட கடல்பெருக்கு.
கல்லுவைத்த கோவிலெல்லாம்
கைகூப்பி வரம் இரந்த
அந்த இரவு
அதற்குள் மறக்காது.
திரைகடலை வென்றுவந்தும்
திரவியங்கள் கொண்டுவந்தும்
இந்தச் சிறுகுடிசை
இரண்டு பிடிசோறு
தோணி உடையான்
தரும்பிச்சை என்கின்ற
கோணல் நினைப்பு
பெருமூச்சு
தானாய் விடிவெள்ளி
தோன்றுகின்ற சங்கதிகள்
வானத்தில் மட்டும்தான்.
வாழ்வில் இருள் தொடரும்.

வ. ஐ. ச. ஜெயபாலன்

வந்து கதவைத் திறந்தார் அந்த மனிதர். தலையிலே வழுக்கை விழுந்து, கன்னங்களில் நரை பூத்து, முகத்திலே சுருக்கம் படிந்து, மூக்கிலே 'கோல்ட் பிறேம்' கண்ணாடி அணிந்து, உள்வளைந்து தோன்றும் அந்த மனிதரை பல வருடங்களுக்கு முன்பு கண்ட அந்த 'மாமா' தான் இவர் என்று தீர்மானிப்பதற்கு சில கணங்கள் அவனுக்குத் தேவைப்பட்டன.

அவன் தன்னை ஒருவாறு சுதாரித்துக் கொண்டு, குட்மோனிங் மாமா என்று சொல்ல வந்தவன், ஏனோ திடீரென்று மாமாவை உள்ளே விழுங்கிக் கொண்டு, 'குட்மோனிங்......' என்றான்.

'ஆ... நீதான் வள்ளி அக்காளின் சன்னோ?'

அவர் தன் முகத்தில் எந்த விதமான உணர்ச்சி பேதங்களையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், தலையிலிருந்து கால்வரை கண்களால் அவனை அளந்தார்.

அவரைப் பார்த்ததுமே 'ஆம்' என்று வாய்திறந்து சொல்ல முடியாத பதட்டம் குமரேசனுக்கு. தலையை மட்டும் பதிலுக்கு மெல்ல ஆட்டினான்.

'ஆ... உள்ளே வா' என்று சொல்லிக் கொண்டு திரும்பியவர், அவனுக்கொரு அறையைச் சுட்டிக் காட்டிவிட்டுத் தன் பாட்டில் சென்றுவிட்டார்.

அந்த வீட்டின் பளபளத்த தரையில் கால் பதிப்பதற்குக் குமரேசனின் பாதங்கள் கூசின. குதிக்கால் பித்த வெடிப்பினுள்ளே படிந்துபோய்க் கிடக்கும் யாழ்ப்பாணத்துச் செம்பாட்டுப் புழுதியை வெறுப்போடு அவன் ஒருமுறை வெறித்துப் பார்த்துக் கொண்டான்.

மூன்று தினங்களை அந்த வீட்டில் ஒருவாறு குமரேசன் கழித்துவிட்டான், அவனுடைய தேவைகளை அந்த வீட்டு வேலைக்காரியான சோமாவதி கவனித்துக் கொண்டாள். அவளுக்கு நன்றாகத் தமிழ் பேசத் தெரியாது. அவனுக்கோ சிங்களம், பஸ்ஸிலே அடிபடுகின்ற இரண்டொரு வார்த்தைகள்தான் தெரியும். அவளுக்குத் தெரிந்த அரைகுறைத் தமிழ்தான் அவன் அந்த வீட்டிலே பட்டினி கிடக்காமல் அவனைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. அவன் தாய் தம்பி அருணாசலத்தின்மேல் தனக்குள்ள அன்பையெல்லாம் மூட்டைகட்டி, அவன் மூலமாக யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பி வைத்த பெட்டிகளை, சோமாவதி மூலமாகத்தான் கொடுத்தனுப்புவதற்கு அவனுக்கு முடிந்தது. இந்த மூன்று தினங்களும் அந்த வீடு அவனுக்கொரு தனி உலகம். அவன் தனித்துவிடப் பெற்ற, யாருமில்லாத ஓர் அநாதை என்ற ஓர் உணர்வு அவன் உள்ளத்தை நெருடிக் கொண்டிருந்தது. தாயின் சொல்லை நம்பி இந்த வீட்டுக்கு வந்திருக்கக் கூடாது; அதுவும் ஒருநாள் முன்னதாகவே ஏன் தான் இங்கு வரவேண்டும் என்று எண்ணி எண்ணி அவன் மனம் சாம்பினான்.

அருணாசலத்தாரின் மனைவியை முதன் முதலில் அவன் கண்டபோது அவனுக்குப் பெரும் வியப்பாகத்தான் தோன்றியது. அரைகுறையும், கூர்தரும் இறுக்கமுமான நவீன அலங்காரங்களினால் தன்னை வனப்புமிகு யௌவன சுந்தரியாக்கி, கல்லூரி மாணவிபோல அவள் காட்சி அளித்தாள்.

குமரேசன் என்ற புதிய பிரகிருதி ஒருவன் அந்த வீட்டுக்கு வந்திருக்கிறான் என்பதனையோ, அவன் தன் கணவனுக்கு உறவு முறையானவன் என்பதையோ அறிந்தவளாக அவள் காட்டிக்கொள்ளவில்லை. அவனைக் கண்டும் காணாத அலட்சியத்துடன் அவள் அந்த வீட்டில் நடமாடிக் கொண்டிருந்தாள்.

அருணாசலத்தார் தனக்குரிய காரை எடுத்துக்கொண்டு காலையிலேயே வீட்டிலிருந்து தினமும் புறப்பட்டு விடுவார். திரும்பவும் அவர் வீடுவந்து சேர்வதற்கு மாலை நான்கு மணியாகும்.

அவர் மனைவிக்கென்றே புறம்பான ஒரு காரும், அதற்கு ஒரு டிரைவரும், அவள் மணிக்கொருதடவை உடுப்பு மாற்றுவதும், காரிலே கிளம்பிப் போய் வருவதுமாகவே இருந்தாள்.

நீண்டகால தாம்பத்தியத்தின் கடைசிக் கூறில் ஐந்து வயதில் அவர்களுக்கொரு பெண் குழந்தை. அந்தக் குழந்தை பிறந்த பின்னரும் அருணாசலத்தார் தன் மனைவியை 'பேபி' என்று வாஞ்சையோடு அழைப்பதை மாத்திரம் இன்னும் நிறுத்திக் கொள்ளவில்லை.

அவர்களுடைய அந்தப் பெண் குழந்தை எப்பொழுதும் வேலைக்காரியின் கையில் இருக்கும்; அல்லது 'பேபி'யின் கார் டிரைவர் அந்தக் குழந்தையை வைத்து பாசத்துடன் கொஞ்சிக் கொண்டிருப்பான்.

குமரேசனுக்கு அன்றுதான் நேர்முகப் பரீட்சை முடிந்திருந்தது. காலையில் எழுந்து வீட்டுக்குப் புறப்பட வேண்டும் என்ற தீர்மானத்தோடு கட்டிலின்மேல் நிமிர்ந்து படுத்து சூனியத்தை வெறித்துக் கொண்டு கிடக்கின்றான் அவன்.

சோமாவதி வந்து கதவிலே மெல்லத் தட்டி அவன் சிந்தனையைக் கலைத்து அருணாசலத்தார் அவனை அழைப்பதாகச் சொல்லிப் போகிறாள்.

'வாராமல் வந்த மாமணி' போல அந்த அழைப்பு ஆச்சரியத்தோடு கலந்து மகிழ்ச்சியைத் தோற்றுவிக்க, கட்டிலிலிருந்து மெல்ல எழுந்து உடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு அந்த வீட்டின் நடுவேயுள்ள 'ஹாலில்' அவரைத் தேடி முதல் தடவையாக அவன் கால் வைத்தான்.

அருணாசலத்தார் தனக்கு முன்னாலுள்ள கதிரையைக் கையினால் சுட்டிக் காட்டினார்.

குமரேசன் தயக்கத்தோடு அவர் முன் அந்தக் கதிரையில் அமர்ந்து கொண்டான்.

இன்று நடந்து முடிந்துவிட்ட நேர்முகப் பரீட்சையைப் பற்றி மாமனார் விசாரிக்கப் போகிறார். அவர் மனம் வைத்துவிட்டதனால் தனக்கிந்த உத்தியோகம் கிடைக்கப் போகிறது என்று குதூகலத்தால் அவன் உள்ளம் குழந்தையாகத் துள்ளிக் குதிக்கிறது.

'எப்ப போகிறாய்?' ஆங்கிலத்தில்தான் அவர் பேசினார்.

அவருடைய ஆங்கிலத்தை அவனுக்கு விளங்கிக் கொள்ள முடிந்தது. ஆனால் தெளிவாக ஆங்கிலத்திலேயே பதில் சொல்ல இயலாமல் அவன் திண்டாடினான்.

ஆங்கிலம் அறியாதவன் ஆங்கில வார்த்தைகளைப் பேசுகின்ற தொனியில் 'மோனிங் ரெயினிலே' என்று தயக்கத்தோடு பதில் சொன்னான்.

'குருநாகலில் ஏதோ கலவரமாம், இரண்டு நாள் பார்த்துப் போகலாம்'

அவர் இதற்குமேல் எதுவும் பேசவில்லை. பேசுவார் என்ற அவன் எதிர்பார்ப்பு அவனுக்கு ஏமாற்றமாக முடிந்தது. அருகிலே கிடந்த பத்திரிகையை அவர் கையில் தூக்கிக்கொண்டு விட்டார். அவன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அங்கிருந்து மெல்ல எழுந்து சென்று கட்டிலிற்போய் விழுந்தான்.

மறுநாள் நடுப்பகல் குமரேசன் அறைக்குள்ளே கட்டிலில் கிடந்து மன அமைதியின்றி உழலுகிறான். அருணாசலத்தார் வழமைபோலக் காலையிலேயே வீட்டிலிருந்து புறப்பட்டு விட்டார். வெளியே கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் அவன் செவிகளில் விழுகிறது. அதைத் தொடர்ந்து மாமாவின் மனைவியும் டிரைவரும் சிங்களத்தில் ஏதோ பேசிச் சிரித்துக்கொண்டு வருகிறார்கள். அவனுடைய அறையை அவர்கள் தாண்டிச் செல்லும்போது 'சிகரெற்' புகையின் மணம் அவன் நாசியைத் தொடுகிறது. கட்டிலிற் படுத்த வண்ணம் தலையை ஒருக்களித்து கதவுக்கிடையால் நோக்குகிறான்.

அருணாசலத்தாரின் மனைவி கையில் சிகரெற் எரிந்துகொண்டிருக்கிறது.

அவன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. அடுத்த கணம் தன் தாயை நினைத்துக் கொள்ளுகிறான். 'அம்மாவும் குளிர்கால ராவுகளிற் சுருட்டுப் புகைக்கிறா தானே!'

அவர்கள் இருவரும் இப்போது ஹாலைத் தாண்டிப் போய்க் கொண்டிருப்பது, விலகி இருக்கும் யன்னற் சீலைக்கூடாகக் குமரேசனுக்குத் தெளிவாகத் தெரிகிறது.

இருவரும் அவளின் அறைக் கதவுவரை வந்துவிட்டார்கள். அவள் தன் அறையைத் திறந்து உள்ளே நுழைய எத்தனிக்கின்றாள். அவன் கைகளை அவளது கைகள் பற்றி இழுக்கின்றன.

அறைக் கதவு படாரென்று மூடிக் கொள்ளுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரேசன் எதனையும் உள்வாங்கி ஜீரணிக்க முடியவில்லை. அந்த வீடே போலியாக — பொய்மையாக அவனுக்குத் தோன்றுகிறது. அந்த வீட்டில் கிடைக்கும் உணவு அவனுக்கு விஷமாகத் தென்படுகிறது; அன்று சரியாக அவனால் உண்ணவும் முடியவில்லை. நிம்மதியாக உறங்கவும் முடியவில்லை.

குமரேசன் தன் தாயை நினைத்துக் கொள்கிறான். குடிகாரனான அவன் தந்தை தன் தாயைப் படுத்திய கொடுமைகளை நினைத்துப் பார்க்கிறான். அத்தனை நிஷ்டூரங்களுக்கு மத்தியிலும் அவள் தன் கணவனுக்கு எவ்வளவு விசுவாசமாக வாழ்ந்தாள்! அந்த ஓலைக் குடிசையின் கூரையின் கீழ் சண்டையும் சச்சரவுமாய் — துன்பமும் நெருக்கடியுமாய் வாழ்ந்த போதும் இதயங்கள் எவ்வளவு நெருக்கமாக பரிசுத்தமாக இருந்தன?

குமரேசன் ஓயாத மனப் போராட்டத்துக்குப் பின்னர் ஒரு முடிவுக்கு வந்தான். அவனுக்குரிய உரிமையும் தன்மான உணர்வும் அவன் உள்ளத்தைப் பிடர்பிடித்து உந்த அருணாசலத்தாரின் வருகையை வேதனையோடு எதிர்பார்த்துக் கிடந்தான்.

அன்று மாலைப் பொழுது, அருணாசலத்தார் ஹாலில் வந்தமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறார். குமரேசன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவர் முன்வந்து நிற்கிறான்.

அவர் படித்துக் கொண்டிருக்கும் பத்திரிகையைக் கீழே தாழ்த்திக் கொண்டு. என்ன?' என்ற கேள்வியை விழிகளிலே நிறுத்தி கண்ணாடிக்கூடாக ஆச்சரியமாக அவனை நோக்குகிறார்.

அவனுக்கு அங்கு வரும்போதிருந்த மனத்திடம் அவருக்கு முன் வந்து நின்றபோது திடீரெனப் பஞ்சாக பறந்து விடுகிறது. தொண்டை கட்டிக் கொள்ள வார்த்தைகள் வெளிவராமல் தொக்கி நிற்கின்றன. கை, கால்களில் மெல்லிய உதறல், உடல் வேறு வியர்த்துக் கொட்டுகிறது.

அவன் பதட்டத்தைக் கண்டு அவர் மனதுக்குட் சிரித்துக் கொண்டே, 'என்ன விஷயம்?' என்று ஆங்கிலத்தில் வினவுகிறார்.

'நான்........' எதையோ சொல்ல நினைத்து, அதைச் சொல்ல முடியாமல் வாயில் வந்த வார்த்தையை மெல்லுகிறான்.

'நீ......?' அவருக்கு வியப்பு மேலிடுகிறது.

'இல்லை .. இல்லை... மாமி ...' மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளுகிறான் குமரேசன்.

'எந்த மாமி......?'

'உங்க........'

'ஓ...! என்னுடைய பேபி... அவவுக்கென்ன?'

'இல்லே......' அவன் குரலில் திரும்பவும் ஒரு தயக்கம்.

'சொல்லு........!'

'அவவும் ரைவரும்......'

'மூடு வாயை! நாகரிகம் தெரியாதவன், அதெனக்கெப்பவோ தெரியும். அதற்கென்ன? நீ நாட்டுப்புறத்தான்தானே'

அவர் வார்த்தைகளிற் சூடேறிக் கொண்டு வந்தன. அந்தச் சூடான வார்த்தைகளை அவர் தமிழிலேயே அவனை நோக்கிக் கத்தினார்.

எதிர்பாராத தாக்குதல், குமரேசன் அவமானமுற்றுக் கூனிக் குறுகித் தலை குனிந்து கொண்டான்; வேகமாகத் தன் அறைக்குள்ளே நுழைந்து தன்னுடைய பெட்டியைக் கையிலே தூக்கிக் கொண்டான்.



# ஒரு கடிதம்

கடந்த 15 ஆண்டுகளாக வெற்றிகரமாகத் [illegible]ன ஒரு இலக்கியச் சஞ்சிகையை நடாத்தி வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்தச் சாதனையைப் புரிய நீங்கள் எவ்வளவு முயற்சி எடுத்திருப்பீர்கள் என்பதையும், எத்தனையோ நடைமுறைச் சிக்கல்களை எல்லாம் தாண்டி வந்திருப்பீர்கள் என்பதையும் உணர்கிறேன். பலவித சிறப்புக்களைக் கொண்ட மல்லிகை மாத இதழைக் கடந்த மூன்று வருடங்களாகவே சுவைத்து வருகிறேன். ஆரம்பத்தில் கருத்து வேறுபாடு காரணமாக மல்லிகை என்னை எடுத்த எடுப்பிலேயே கவர்ந்து விடவில்லை என்ற உண்மையை நான் மறைக்க விரும்பவில்லை. எனினும் இலக்கியக் கட்டுரைகளும், சிறந்த சமூகப் பார்வையுடைய சிறுகதைகளும் வெகு சீக்கிரத்திலேயே என்னைக் கவர்ந்து விட்டதில் வியப்பில்லை. எனினும் இன்று கூட என் மனதில் ஒரு சிறு சந்தேகம் — சிறு குறை இருக்கவே செய்கிறது. அது, தாங்கள் ஒரு குறிப்பிட்ட எழுத்தாளர்களையே ஆதரிக்கின்றீர்கள் என்ற கசப்பான உண்மையே ஆகும்.

இளம் எழுத்தாளர்களின் படைப்புக்கள் தங்கள் சஞ்சிகையில் இடம் பெறாமல் விடுவதற்கு அடிப்படை காரணம் என்ன என்பது எனக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது. அவர்களது எழுத்தில், சமூகப் பார்வையில் ஏதேனும் குற்றம் குறை இருப்பின் அது நியாயமானது. ஆனால், அப்படியும் தெரியவில்லை. தாங்களும் புதியவர்களை வரவேற்பதில் பின்நிற்பதில்லை என்பதும் தெரிகிறது (யூலை இதழில் கோகிலா மகேந்திரனுக்கு இடம் கொடுத்துள்ளீர்கள்) அப்படியானால் அந்த எழுத்தாளர்கள் எல்லாம் தங்கள் சஞ்சிகைக்குக் கதைகள் அனுப்புவதில்லையா? அப்படியும் எண்ண முடியாமல் இருக்கிறது. இந்தப் புதிரை விடுவிப்பீர்களா? அடுத்ததாக மல்லிகையில் பிறநாட்டுப் போராட்டங்கள் பற்றிய அரிய கட்டுரைகளை, இலக்கிய விமர்சனங்களை எல்லாம் எழுதுகிறீர்கள். ஆனால் எமது சூழலில் இன்று நிலவுகின்ற சில பாரிய பிரச்சினைகளை வெறும் மேலோட்டமாகச் சொல்லிவிட்டு அல்லது அபிப்பிராயம் தெரிவிக்காது விட்டு விடுகிறீர்களே? தாங்கள் அணியில் வேறுபட்டு நின்றாலும் கூட தங்களுக்கும் இன்றைய சமூக, அரசியல் நிலையில் உள்ள உண்மைகள் புரியாமல் இருக்காது. இவற்றைப் பற்றி எல்லாம் உங்கள் பார்வையை — கருத்தைக் கூறுங்கள். அதை வாசகர்கள் வரவேற்பார்கள். சாதி, இலக்கியப் பிரச்சினைகளில் நீங்கள் உறுதியாகக் குரல் கொடுப்பது போல இப்பிரச்சினைகளிலும் தங்கள் கருத்துக்களைக் கூறுங்கள். ஒதுங்கி நிற்காதீர்கள். எந்தக் கருத்தையும் இருபக்கமாகவும் அலசுவது நல்லதல்லவா?

ச. முருகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுக்க முழுக்க தனி உழுந்தினால்

தயாரிக்கப்பட்ட பப்படம்

செட்டிக்கோப் பப்படம்

நறுமணமும், மொருமொருப்பும் கொண்ட பப்படம்

செட்டிக்கோப் பப்படம்

குறைந்த விலையில் நிறைந்த பலனைக் கொடுப்பது

செட்டிக்கோப் பப்படம்

புசித்தவர்கள் மீண்டும் மீண்டும் புசிக்கத் துடிப்பதும்
சுவைக்காதோர் சுவைக்கத் துடிப்பதும்
எல்லோராலும் பாராட்டப்பட்டு மதிக்கப்படுவதும்
செட்டிக்கோப் பப்படம்

கால், அரை, ஒரு றுத்தல் நிறைகளில்

வர்ண வர்ண தாள்களில் பொதி செய்யப்பட்டதும்
செட்டிகுளம், வவுனியா, மன்னார்,
திருகோணமலை, யாழ்நகர் ஆகிய
எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடியதும்
செட்டிக்கோப் பப்படம்

இன்றே கேட்டு வாங்கிச் சுவைத்து இன்புறுங்கள்
செட்டிக்கோப் பப்படம்

பப்படம் வாங்கும்போது

செட்டிக்கோப் பப்படம்

என்று கேட்டு வாங்குங்கள்.

தயாரிப்பாளர் :

வெங்கலச் செட்டிகுளம்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

செட்டிகுளம்

# குமிழிகள்

சாந்தன்

ஜன்னலுக்கு வெளியே பார்க்கப் பார்க்க எரிச்சலாய் வந்தது. எவ்வளவு நேரந்தான் சரங்கட்டி இறங்குகிற இந்த ஓயா மழையைப் பார்த்திருப்பது?

லீவை இன்னும் இரண்டு நாட்கள் நீடிப்பது என்ற முந்திய யோசனையை விட்டு, நாளைக்கே புறப்பட்டால் நன்றாயிருக்கும் என்ற எண்ணம் வலுத்தது. ஆனால், கூடவே அங்கும் போய்த்தான் என்னத்தைக் கண்டது என்றும் உணர்ந்தான். அதே இயந்திரமயமாகிப்போன வாழ்வு......... பஸ்ஸையுங் கடிகாரத்தையுந்துரத்துகிற வாழ்வு, புழுதி, புகை, நெரிசல்.

படியிலிருந்து நீர்க்கோடு இழுத்தபடி திண்ணையில் ஏறி ஊரத்தொடங்கிய அட்டையை, எழுந்து போய்க் காலால் தட்டினான். சுருண்டுபோய் முற்றத்துத் தண்ணீரில் தொளப்பென்று விழுந்தது.

வருஷத்தில் சராசரி மூன்று தடவைகள்தான் யாழ்ப்பாணம் வரச் சாத்தியப்படுகிறது. ஒவ்வொரு முறையும் இரண்டு மூன்று கிழமைக்குக் குறையாமல் நின்று, இந்த மண்ணைத் துளித் துளியாய்ச் சுவைக்கிற வேட்கையோடு வருவான். திரும்ப மனம் வராது. இம்முறை போவதேகூட, அடுத்த பயணம் வருவதற்காகத்தானே என்றிருக்கும்.

கொழும்பில் — அந்தக் கொங்கிறீற் காட்டில் இருக்க நேரிடுகிற நாட்களில் எல்லாம் மகாகவியின் பாடல் நினைவுக்கு வரும்—

'இந்நாளெல்லாம்
எங்கள் வீட்டுப்
பொன்னொச்சிச் செடி
பூத்துச் சொரியும்......'

போய்ச் சேர்ந்ததிலிருந்து, திரும்ப இன்னும் எத்தனை நாட்கள் என்று மனம் தினசரி கணக்கிடும். அங்கிருந்து யாழ்ப்பாணம் வருகிற ரயில் பயணங்கள் எப்போதுமே இனிய அனுபவங்கள்.

ஊரில் நிற்கிற நாட்களுக்கென்று தனியான வாழ்வுமுறை ஒன்றிருக்கும் — கொழும்பில் நிர்ப்பந்திக்கப்பட்ட அவதியையும் பரபரப்பையும் மறக்கிற மாதிரி,. காலையில் வளவெல்லாம் சுற்றித்திரிந்து பல்லுத்தீட்டி, அடுப்படியில் குந்தியிருந்து கோப்பி குடித்து— அந்த நாட்கள் வலு ஆறுதலாக ஆரம்பமாகும். கடைக்குப் போய் வருவது, வருகிறவர்களுடன் பேசுவது, தொட்டாட்டு வேலைகள் என்று சாப்பிடப் பத்து மணியாகும். சாப்பிட்ட பின் சைக்கிளை எடுத்துக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டால், ஒரு நாளைக்குப் பட்டினப் பக்கம், ஒரு நாளைக்கு மானிப்பாய், ஒரு நாளைக்கு இன்னுமெங்கேயோ என்று போய் வருகிற வேலைகளிருக்கும். வந்து முதல் நாளைக்கு காலும் தொடையும் நோகும். பிறகு, சரி. முந்தியெல்லாம் விடலைப் பருவத்தில், காத்தி, கலைஞன், விக்கி. விஜயன் என்று கோஷ்டி குலையாதிருந்த நேரத்தில் ஒரு நாளைக்குக் குறைந்த பட்ச சராசரி ஓட்டம் பதினைந்து மைல் என்பது நினைவு வருகிறபோது இந்த நோவு வேதனை தரும். வீடு வர இரண்டு மணியோ, மூன்று மணியோ, அதன் பிறகும் வேலை இருக்கும் — இதைத் தூக்கி அதில் போட்டு, அதைத் தூக்கி இதில் போட்டு என்று. வீட்டில் அவன் இந்த வேலைகளைச் செய்ய வேண்டிய தேவையோ, எதிர் பார்ப்போ இல்லாதிருந்தாலுங்கூட, இவற்றை இழுத்துத் தன்மேல் போட்டுக்கொண்டு செய்வான்— இந்த மண்ணின் காற்றைச் சுவாசிக்கிற வெறியோடு. குளித்துச் சாப்பிட ஆறு மணியாகும். நிலாக்கால முன்னிரவுகள் முற்றத்தில் கழியும். நிலா வரா ராக்களில், அன்று பகல் சந்தித்திருக்கக் கூடிய ஒரு புத்தகம் அல்லது அண்டை அயல் பெடியங்களுடன் தாயம். கந்தையாண்ணையின் சின்னவன் கண்ணன் நன்றாகப் பாடுவான்.

சைக்கிள் ஓட்டங்கள், யாழ்ப்பாண வாழ்வில் தான் ஒட்டிக் கொண்ட உணர்வை நிச்சயமாக்கும். சைக்கிள், யாழ்ப்பாணத்தின் தேசிய வாகனம் — இந்த மண்ணின் அடையாளம். ஒரு கிணற்றடிப் பனையில் சைக்கிள் ஒன்றைச் சாத்தி வைத்துப் படம் பிடித்தால், அந்தப் படம் யாழ்ப்பாணத்தின் முழுமையான ஸிம்பலாக இருக்கும் என்ற எண்ணம் வரும். சீற்றின் கறுப்பு. வேட்டியில் தேயத் தேய, அதன் தலைப்பை இடக்கையால் பிடித்தபடி, தெருத்தாரில் ரயர் ஒட்டிப் பதிய ஓடுகையில் களைப்புத் தெரிவதில்லை. வாயில் வெற்றிலையும், தலையில் யாழ்ப்பாண வெய்யிலும் புழுதியும். சைக்கிள், தெரு, காற்று, புழுதி, வியர்வை, மோர், தேத்தண்ணி, சூசியம், வெற்றிலை, புத்தகக் கடைகள், கனநாளைக்குப் பிறகு காண நேர்கிற நண்பர்கள்—

'ஆ! எப்ப வந்தது?'

வெய்யிலில் காய்ந்து வருகிற அவனைக் காண்கிற அவர்கள் கேட்பார்கள்;

'என்ன ஐசே, இந்த வெய்யில் உமக்குச் சுடுகிறதில்லையா?' சுடுவதில்லைத்தான்.

வெய்யில்தான் என்றில்லை— மழையுங்கூட என்ன குறைந்து போயிற்று? தூறத்தூற முகத்தை நிமிர்த்தி அதில் நனைத்து, தலையைச் சிலுப்பி வழித்து. சைக்கிளை மிதிப்பது சுகம். மழை நின்ற ஐந்து நிமிடங்களில், எதிர்க்காற்றிலோ, அல்லது ஒரு தேத்தண்ணி குடிக்கிற நேரத்திலோ, அல்லது ஒரு நண்பனை விசாரித்துவிட்டுப் பார்க்கிற போதோ இந்த ஈரம் காய்ந்து விட்டிருக்கும்.

ஆனால், இப்போது என்னாயிற்று — இந்த மழை தன்னைச் சுற்றி மட்டுமே சிணுசிணுத்துக் கொண்டு மீதி உலகத்திலிருந்து தனியே வேலியிட்டுப் பிரிப்பது போல? -

நேற்றுக்காலை தொடங்கிய இந்த மழை பின்னேரங் கொஞ்சங் குறைந்திருந்தபோது, கலைஞன் வீட்டுக்குப் போய் விசாரித்துப் பார்த்தான்; கலைஞன்



வருவதாகத்தான் இருந்தது; ஆனால் வரவில்லை;

## 2

எழுந்து பின் விறாந்தைக்கு வந்தான். தாழ்வாரத்துப் பீலியால் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது — அருவி போல. விழுகிற இடத்தில் பள்ளம் விழுத்தி, நுரைத்து வழிகிற தண்ணீர். இந்த நுரைக் குமிழ்களில் இப்போதுங்கூட ஆசை வருகிறது போல இருந்தது. கொப்புளமாய்ப் பொங்கி, அசைந்து ஆடி, ஒன்றன்பின் ஒன்றாய் அல்லது அருகருகாய்ச் சேர்ந்து தழுவிப் பெருத்தும் வெடித்தும் நீரின் வேகமே தம் வேகமாய் அவை நகர்ந்து கொண்டிருந்தன.

இப்படித்தான் ஒரு மழை நாளில் இந்தக் குமிழ்களைப் பிடிக்கப்போய், தாழ்வாரச் சேற்றில் சறுக்கிக் குண்டியடியுண்ண விழுந்தது ஞாபகம் வந்தது. அது நடந்து இருபது இருபத்திரண்டு வருஷங்கள் இருக்கும், இந்த இருபத்தெட்டு வருடகால வாழ்வின் அர்த்தம் என்னவென யோசித்தபடி, வாரடித்து ஓடுகிற வெள்ளத்தைப்பார்த்துகொண்டிருந்தான். வெள்ளம், அடிவளவில் சேர்ந்து கொண்டிருந்தது. ஆயிரங் காய்ச்சி மாவடியில் நிற்கிற தண்ணீர் முழங்காலடிக்கு வரும். மாட்டுக் குடிலினடியில் மாடுகளிரண்டும் குடங்கியபடி தொட்டிலை நெருங்கி நிற்பது தெரிந்தது.

என்ன செய்வதென்று தெரியாமலேயே அடுப்படிப் பக்கம் போனான். அடுப்படியில் குளிர் தெரியவில்லை. அம்மாவுந் தங்கைகளும் சமையல் மும்முரத்தில் இருந்தார்கள். இந்த மழையாலும் மூட்டங்களாலும் பாதிக்கப்படாதவர்களாக அவர்கள் தெரிந்தார்கள். இப்போதே பகல் சமையல் வேலையைத் தொடங்கிவிட்டார்களா என்ற யோசனை வந்தபோதே, நேரம் பத்துமணிக்கு மேலிருக்கும் என்பதும் நினைவு வந்தது. அடைமழை பிடித்தால் நேரங் கூடத் தெரிகிறதில்லை. காலையில் எழுந்ததிலிருந்து இந்த மூன்று நாலு மணித்தியாலமும் ஒரு வேலையும் செய்யாமலே நாசமாய்ப் போயிருக்கிறது.

'தேத்தண்ணி கொஞ்சம் சுடச்சுட வைச்சுத்தரட்டே, அப்பு?' என்று அம்மா கேட்டதற்கு,

'வேண்டாம்' என்றவன், '......நாளைக்குப் பகல் நான் திரும்ப வேணுமெல்லே?' என்று நினைவு படுத்துபவன் போலச் சொன்னான்.

'உனக்கென்ன, பைத்தியமே? இந்த மழையுக்கையோ? ......வந்த நீ இன்னும் இரண்டு நாள் லீவைப் போட்டிட்டு நிண்டு ஆறுதலாகப் போறது தானே?'

'இஞ்ச நிண்டுதான் என்ன செய்யிறது?'

'ரெயில்கூட ஓடுதோ, தெரியாது......'

'அது ஓடுதாம். இஞ்சை யாழ்ப்பாணத்திலைதான் வெள்ளம். மற்ற இடங்களிலை ஒண்டுமில்லையாம்...... ரேடியோவிலை சொன்னாங்கள்......' என்றபடி, இப்பால் வந்தான்.

கூடத்தில், முத்தையர் வந்து, ஐயாவுடன் பேசிக் கொண்டிருந்தார் — ஐம்பது அறுபது வருஷங்களுக்கு முன் போட்ட பேய் வெள்ளத்தில் நந்தாவிலில் கவிழ்ந்து மூழ்கிய குதிரை வண்டியின் கதையைப் பற்றி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3

கலைஞன் பயல் வராமல் விட்டுவிட்டான். அவன் வந்திருந்தால் இந்தப் பயணத்தின் இந்தக் கடைசிநாட்கள் முழுமை கொண்டிருக்கலாம். மற்ற நண்பர்களை விசாரிப்பது தேவையற்றது: அவர்கள் இப்போது வரச் சந்தர்ப்பம் இல்லை என்பது தெரியும்.

எல்லோரையுமே ஊரில் சந்திப்பதானுல், அதற்கொரு காலம் இருக்கிறது. வருஷ விடுமுறை. வருஷப்பிறப்பன்றுதான் மருதடியிலுந் தேர். ஊரவன் எல்லாம் வருவான்; எங்கிருந்தாலும் வருவான். வருஷப்பிறப்புக்கு ஒரு கிழமை முந்தித் தொடங்குகிற பண்டிகைக் கோலம், வருஷம் பிறந்து அடுத்து வருகிற ஞாயிறுவரை நீடிக்கும். இந்தக் காலத்தில் இன்னமும் ஒரு விசேஷமிருந்தது.

இப்போதுதான் வசந்தந் தொடங்குகிறது. வேப்பம் பூவும், குயில்களும்.

இந்த மாதிரி — அல்லது இதிலும் சிறப்பான காலமும் வேறென்று இருக்கிறது. அது வைகாசிப் பூரணை அல்லது ஆனிப் பூரணையை அண்டிவரும். அப்போது அம்மன் கோவில் கோவில் திருவிழா. சோழகம் தொடங்கி விட்டிருக்கும். ஊர்ப் பனங்கூடல்கள் எல்லாம் ஓவென்று பாடும், ஓயாது. அருகில் எங்கோ சமுத்திரம் மாதிரி. இந்தக் காற்றில் ஏறியும் இறங்கியும் எங்கெங்கிருந்தோ ஒலிக்கிற லவுட்ஸ்பீக்கர்கள்: அருகில் கேட்கிறபோது அரியண்டமாய் இருக்கிற பாட்டுகள் கூட தூரத்துக் காற்றில் மனதை ஈர்க்கும். போதாக் குறைக்கு மாம்பழ ஸீஸனும்.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களும் இப்படி இனிக்கும் என்பதால், மற்றச் சந்தர்ப்பங்கள் கசக்கும் என்றில்லை. ஊருக்கு வருகிற எந்தச் சந்தர்ப்பமுமே கசப்பதில்லை. இனிப்பில்தான் வித்தியாசம்.

ஜனவரி முன்னடியில் பனிக் குளிரும் திருவெம்பாவையும். அரை விழிப்பில் போர்த்துப் புரண்டபடி ரேடியோவில் திருவெம்பாவை கேட்கிற சுகம் — ஒரு மன உறுத்தல் இருந்தாலும் இத்தனை வயதாகியும், எழும்பி முற்றத்திற்கு வந்தவுடன் வாயை விரித்து ஊதி, பனிப்புகை விட்டு ரசிக்கிறது. கொழும்பிலுந்தான் பனி பெய்கிறது.

பிறகு, பொங்கல். புகையிலை இறைப்பு. அக்கம்பக்கத்துத் தோட்டங்களிலெல்லாம் இரவிரவாக — விடியவிடிய — இறைப்பு நடக்கும். மெஷின்களின் ரீங்காரம் தாலாட்டும். பனிப்புகாரில் நீர்த்த நிலவெறிக்கும் இராக்களானுல், இன்னும் விசேஷம். அரை விழிப்புடன் புரள்கிற அப்போதும், இன்னொரு குற்ற உணர்வு குறுகுறுக்குந்தான். அம்மா சின்ன வயதில் சொல்கிற கதை ஒன்று நினைவு வரும். ஒரு ராசகுமாரனின் கதை, தகப்பன் ராசாவை அவன் கேட்டுப் பெற்ற போகங்கள்: தங்கமாளிகை, ஏவலர்கள், சாப்பிடப் பாலுந் தேனும், படுக்கப் பஞ்சுமெத்தை, விடியற் காலையில் மெஷின் இறைக்கும் சத்தத்தைக் கேட்டபடி தூங்க வேண்டும்...... அம்மாவின் கற்பனையும் ரசனை உள்ளமும் இப்போது அதிகபட்சம் புரிகிறது.

இந்த அதிகாலை அரை விழிப்பு சுகங்களில் இன்னும் ஒன்று, ஐப்பசி மாதக் குழை வண்டில்கள்: தூரத்தில் எங்கோ குழைவாங்கி வெட்டிக் கட்டிக்கொண்டு விடியற்புறங்களில் வரிசையாகப் போகிற வண்டில்கள். தெருவின் நிசப்தத்தில், சில்லுகளின் லயம் மாருத 'கடக், கடக்' ஒலி மட்டும் வீடுவரை வந்து தாலாட்டும்: ஆனுல், முழுதாக அயர்ந்துவிடக்கூடாது.

முன்னிரவிலும் ஒன்று உண்டு: கார்த்திகை மட்டில் — கெல்லாவில் பனைக்குள் வெள்ளம் சேர்ந்து தெருவரை தளம்புகிற நாட்களில். பொழுது படத் தொடங்குகிற கச்சேரி எப்போது முடியும் என்று தெரியாது. தவளைகளும் வேறேதோ பிராணிகளும் போடுகிற இந்தக் கத்தல் கூடக் கவர்ச்சிதான்.

பனங்கிழங்கு, சித்திரைக் கஞ்சி, சித்திரபுத்திர நாயனுர் கதை, ஆலம்பழம். கிளிகளும் மைனுக்களும், ஆடிக் கூழ், நல்லூர்த் திருவிழா, கார்த்திகை விளக்கீடு — இப்படி ஒவ்வொரு மாதத்திற்கும், ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு அழகு இருந்தது: ஒவ்வொரு சுவை இருந்தது.

ஏன், இந்த அடைமழை நாட்கள் கூட, அர்த்தமும் அழகுங் கொண்டிருந்தவைதாம். இப்படி வெள்ளம் போட்ட ஒரு போதில் — அறுபத்தேழிலாக இருக்க வேண்டும் — கெல்லாவில் மாதக்கணக்கில் வெள்ளம் நின்றபோது, அவன் மூன்று வாரங்களாக மினைக்கெட்டு, ஒரு நாளைக்கு ஒரு வால்பேத்தையாகப் பிடித்து 'பிறிஸேவ்' பண்ணி, தவளையின் வளர்ச்சிச் சரித்திரத்தை உருவாக்கி, கல்லூரி ஆய்வு கூடத்திற்குக் கொடுத்தான்.

இன்னொரு வருஷ அடைமழையின் போது அவனும் கலைஞனுமாக கிராமபோன் பெட்டியைத் திருத்திஞர்கள். பாட்டா காலத்திய பழைய கிராமபோன் அது. பழுதாகிக் கிடந்தது. அக்குவேறு ஆணிவேருக அதைக் கழற்றி — ஸ்பிறிங் பொக்ஸில் மட்டும் பிழையிருக்கவில்லை — திருத்தி, புது வார்னிஷும் அடித்து, பாடவைத்தார்கள்.

அதற்கு முதல் ஒரு அடைமழை மூடலில்தான் அவன் பாரதக்கதை முழுவதையும் படித்து முடிக்க முடிந்தது. பெரிய எழுத்துப் பாரதம். தடித்த, சிவத்த மட்டைபோட்ட நாலோ, ஐந்தோ பாகம். யாரோ ஒரு நாயக்கர் ஸன்ஸ் வெளியீடு.

அந்த அறுபத்தேழு வெள்ளத்தில் இன்னொரு முக்கியமான வேலையும் நடந்தது. இதே மாதிரி, இந்தக் குறிச்சி முழுவதுங் குளங்கட்டித் தேங்கிப் போன வெள்ளத்தை, அவனும் அவன் கூட்டாளிகளுமாகச் சேர்ந்து கான் வெட்டி, கொத்தாவலை நதியில் பாய வைத்தார்கள். கொத்தாவலை நதி, அம்மன் கோவிலடியில் இருந்து வழுக்கையாற்றுக்குப் போகிற வெள்ளவாய்க்கால். ஊர்ப் பெடியன்கள் வாயில் அது நதியாகக் கௌரவம் கொண்டது. கொத்தாவலை அதைத் திறந்து வைத்த பிரமுகரின் பெயர். இந்த வெள்ளத்தை அந்த நதியில் பாயச் செய்யக் கான் வெட்டிய வேலை முழுதாக ஒருநாள் எடுத்தது. கால்மைல் நீளக் கான்.

ஊரோடு இருந்த காலங்களில் ஒவ்வொரு வருஷமும் மழை வெளித்தவுடன் கல்லுண்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாய்ப் பயணந் தப்பாது. வயல் வெள்ளத்தில் வடிவான நிறநிற மீன்கனெல்லாம் எங்கிருந்தோ அள்ளுண்டு வரும். போத்தல்களும் பழந் துணிகளுமாகப் போவார்கள். விஜயன் ஒரு தடவை, ஒரு ஆமையைக்கூடப் பிடித்தான். இந்த வெள்ளந் தப்புகிற ஆசை, சின்ன வயசிலேயே தொட்டது. அம்மன் கோவிலடி வெள்ளம், அப்போது ஆறும் ஏழாம் வகுப்புப் படித்த காலங்களில் — இடுப்பு மட்டும் வரும். மற்றவர்கள் அருவருத்து நிற்கையிலுங் கூட, விக்கிப்பயல் புளுகந் தாங்காது, ஒரு தரம் அதற்குள் விழுந்து நீந்தினுன். வெள்ளம் கலக்குகிறபோது மரத் தடிகளில் வெள்ள விளிம்போடு ஒட்டிக் கொண்டு கிடக்கும் நட்டுவக்காலிகளும் நண்டுகளும் மேலெங்கும் குறுகுறுக்கச் செய்யும். வெள்ளத்தில் தவளைக் கல் எறிகிற சம்பியன், காத்தி......

இந்த இவ்வளவு நாள் வாழ்வு, இந்த வேலைகள் — எல்லாம் அர்த்தமற்ற பைத்தியக் காரத்தனங்கள் என இப்போது படுகின்றன; இனியும் இதே தடத்திலா என்று நினைக்கிற போது தயக்கமாகவும் இருந்தது. யோசித்தவாறே கிடந்தான்.

## 3

படலையடி வெள்ளத்தில் கால்களை இழுத்து இழுத்து அலம்பியபடி யாரோ வருகிற சத்தங் கேட்டு விழித்தபோது தான், அப்படியே சாய்மனைக் கதிரையில் தான் அயர்ந்து போய்விட்டது புரிந்தது. மழை இப்போது நியாயமாகக் குறைந்திருந்தது.

சாக்கால் போர்த்திக் கொண்டு, குடையுடன் பொன்னையம்மான் வந்தார்.

'எப்பிடியடா தம்பி, வெள்ளம் போதுமே?'

ஒன்றும் சொல்லாமல் எழுந்து சிரித்தான்.

'அங்கை போய்ப் பார், அவன் கந்தையன் வீட்டை — பெரிய பரிதாபம். 'வீட்டுச் சுவர் ஊறி விழுந்து போச்சு, தலைவாசலுக்கை கிடந்த விதை வெங்காயமெல்லாம் வெள்ளம்'

பாவம் கந்தையாண்ணை, பிள்ளைகுட்டிக்காரன். தான் இப்போது தூங்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில், அந்தச் சுவர் அங்கே சரிந்திருக்கும்......

'காத்து எழும்பியிருக்கு' அசு பயந்தான், எண்டாலும் மழை இன்னுங் கொஞ்சத்திலை விட்டிடும்......' என்ருர் அம்மான்.

'விட்டா நல்லதுதானே...' அந்தச் சுவர் எப்படிப் பொத பொதவென்றுபொறிந்திருக்கும்?

'ஆஞ, மழை விட்டாலும் வெள்ளந்தான் பிரச்சினை பண்ணப் போகுது......'

'ஏன்?' — நல்லகாலம், குழந்தை குஞ்சுகள் அந்தச் சுவருக்குள் அகப்படவில்லை.

'ஏனே? இது இவ்வளவும் இஞ்ச பெய்த மழைக்கு வந்த வெள்ளமெண்டே நினைக்கிருய்? வரத்து வெள்ளமடா. ஆரோ தோட்டப்பக்கத்தாலை வெட்டி இஞ்சை விட்டிருக்கிருங்கள்..... பார், செம்பாட்டு வெள்ளம்; மழை நிண்டாலும் வெள்ளம் ஏறப்போகுது' திண்ணைச் சாக்கில் ஈரக் கால்களை மாறி மாறித் துடைத்தபடி அம்மான் சொன்ஞர்.

'அப்ப, நாங்களும் கொத்தாவலை நதிப்பக்கம் வெட்டி விடுவம்?'

'பின்னை? வெட்டத்தானே வேணும். அதுதான் வந்தனுன். கொய்யா எங்கை?' அம்மான் கேட்டார். கூட்டிக் கொண்டு உள்ளே போனுன்.

சண்டிக்கட்டும் தலைப்பாகையுமாய் ஒரு கையில் குடையைப் பிடித்தபடி, மற்றக் கையில் விறகுக் கட்டைச் சுமந்துகொண்டு ஐயா, கொட்டிலிலிருந்து வந்து கொண்டிருந்தார்,

'விறகுக் கொட்டிலுக்குள்ளை வெள்ளம் ஏறிவிட்டுது'

இவனிடம் சொன்ன எல்லாக் கதைகளையும் இங்கும் சொன்ஞர், அம்மான்.

'ஐயோ, பாவம்......'

'அதுதான் இப்ப முதல் வேலையா, இந்த வெள்ளத்தை வெட்டி விடவேணும். பிறகு தான் மற்றக் கதை......'

'ஆர் வெட்டுறது?'

முத்தையர், கந்தையாண்ணை என்று ஏழெட்டுப் பேரைச் சொல்லிவிட்டு, பிறகு ஒரு ரோசத்தோடு அம்மான் சொன்ஞர். 'போனமுறை நீங்கள் இளந்தாரியள் வெட்டினுப் போலை எங்களாலை ஏலாதெண்டு நினைச்சிடாதை, இம்முறை நாங்கள் வெட்டிக்காட்டிறம். நாளைப் பொழுதுபட இந்த முத்தத்திலை ஒரு சொட்டுத் தண்ணி நிக்காது'

'அப்ப வெட்டுங்கோவன். நானும் வாறன் உங்களோட...'

'அப்ப நீ நாளைக்குப் போகேல்லையா?......' — அம்மாவுக்குச் சந்தோஷமாக இருந்தது.

'நிண்டிட்டுப் போறன்' என்ருன்.

'இப்ப துவங்கிஞ பொழுது படுகிறதுக்குள்ளை அரைவாசியாவது வெட்டி முடிச்சிடலாம்...... நீ சாப்பிட்டு வருவியா?' — அம்மான் கேட்டார்.

'வாறன்'

அம்மான் போனதும், அடுப்படிக்கு வந்தான்.

'அங்கை போய்ப்பார், அண்ணை...... மாட்டுக் கொட்டிலை'

போய்ப் பார்த்தபோது, மாடுகளின் காற்குளம்புகளுக்கு மேலாகத் தண்ணீர் நின்றது.

'அதுகளை இந்தத் தாழ்வாரத்திலை அவிழ்த்துக் கட்டுவமா?' — சாரத்தை உதறி சண்டிக்கட்டைக் கட்டினுன்.

'நீ அவிட்டுக்கொண்டு வரப் போறியா?'

'ஓம்' என்றபடி இறங்கியவனிடம் தங்கச்சி சொன்ஞள்: 'உனக்குப் பழக்கமில்லாத மாடுகள். இடிக்கும்......'

அது சரிதானென்று பட்டது; திரும்பிச் சொன்ஞன்.

'அப்ப, நான் விறகு எடுத்துக் கொண்டு வந்து போடுறன், மாட்டை அவிழ்த்துக் கட்டச் சொல்லி ஐயாவைச் சொல்லுங்கோ......'

குடையை வாங்கிக்கொண்டு முற்றத்து வெள்ளத்தில் இறங்கியபோது, உச்சி வரைக்கும் சிலீர் என்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்
என்பது நீண்டகாலத் தமிழ்ப் பழமொழி

உங்கள் உணவு வகைகளுக்கான

அரிசி வகைகள்

தானியங்கள்

மா வர்க்கங்கள்

தகர உணவுகள்

சில்லறைச் சாமான்கள்

சாய்ப்புப் பொருட்கள்

மற்றும்

அனைத்துவித
உபகரணங்களினதும்

மொத்த வியாபாரிகள்
சில்லறை வியாபாரிகள்

எஸ். குலசேகரம்பிள்ளை அன் பிறதர்ஸ்

163, ஐந்தாம் குறுக்குத் தெரு,
கொழும்பு — 11.

போன் : 33856



சிறுவர்

# இலக்கிய வளர்ச்சியில் சித்திரக்கதைகளின் பங்கு

## சில குறிப்புகள்

ஆ. சிவநேசச்செல்வன்

"இன்றைக்கு அச்சுக்கலையில் ஏற்றம் பெற்று அற்புதங்கள் நிகழ்த்தும் அயல் நாட்டுப் பத்திரிகைகளில் சித்திரக் கதைகளைச் சிந்தை கவரும் முறையிலே வெளியிடுவதை நாம் பார்க்கிறோம். சித்திரங்கள் வரைவதில் பல நவீன முறைகளையும் அவற்றை அச்சடிப்பதற்கான நவீன யந்திர சாதனங்களையும் பெற்றிருக்கிறார்கள் அவர்கள். ஆனால் நம் பாரத்திலோ இன்றும் பத்திரிகைத் தொழில் பூரண வளர்ச்சி பெறவில்லை. இந்த நிலையில் நமக்குச் சித்திரக் கதைகளைப் பத்திரிகைகளில் வெளியிடுவதென்பது மகத்தான சாதனையாக இருக்கிறது"

என 'வாண்டுமாமா' என்ற புனைபெயரில் சித்திரக் கதைகள் பல எழுதிப் புகழ்பெற்ற கல்கி உதவியாசிரியர்களுள் ஒருவரான வி. கே. மூர்த்தி தமது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார். தமது கருத்துக்களை வெளிப்படுத்தப் பத்திரிகையோ காகிதமோ இல்லாத காலத்திலே கோவில்களிலும் சுவர்களிலும் கதைகளையெல்லாம், ஓவியங்களாகவும், சிற்பங்களாகவும் சமைத்த வரன்முறையை 'வாண்டுமாமா' தமது கட்டுரையில் கோடிட்டுக் காட்டியுள்ளார். கும்பகோணம் ராமசுவாமி கோவிலில் உட்பிரகாரத்திலே ராமகதையை படங்களாகச் சித்திரித்துள்ளனர். மதுரைப் பொற்றாமரைக் குளத்தைச் சுற்றியுள்ள பிரகாரத்திற் சிவனின் அறுபத்திநான்கு திருவிளையாடல்களையும் கதைப் படங்களாக்கியுள்ளனர். தஞ்சை — சரஸ்வதி மஹாலில் சரபோஜி மன்னர் சேர்த்து வைத்துள்ள ஓலைச்சுவடிகளில், பனை ஓலைகளில் எழுத்தாணி கொண்டு கீறப்பட்ட ஐதீகப் படங்களில் வண்ணம் கொடுத்து விளக்கப்பட்ட சித்திரக் கதைகளைக் காண்கிறோம்.

தமிழ் நாட்டிலே சிற்பங்களையும் சித்திரங்களையும் கலையழகு மிளிரும் வெகுஜன தொடர்புச் சாதனங்களாகப் பயன்படுத்தியுள்ளமையையே இவை விளக்குகின்றன. இராமாயண, பாரதக் கதைகளையும், புராணக் கதைகளையும் மற்றும் வரலாற்றுச் சம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்களையும் சிறுவர் முதல் பெரியோர் வரை உணரும் வகையில் அமைத்து மகிழ்ந்தனர். இந்தவகை வளர்ச்சி ஒருபுறமாக அச்சுக் கலையின் வருகை நவீன சமுதாயத்தில் பல்வேறு நுண்ணிய துறைகள் வளருவதற்கு வாய்ப்பாக அமைந்தமை போலச் சிறுவர் சித்திரங்களை தனியாக நோக்கக் கூடிய வகையிலே அண்மைக் காலத்திற் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தி வருவது அவதானிக்க வேண்டியதொன்று. 'வாண்டு மாமா' வின் வளர்ச்சி பற்றியதும், வெளியிடும் மகத்தான சாதனை பற்றியதுமான குறிப்புகள் இரு முக்கிய விடயங்களை எமக்கு வலியுறுத்துகின்றது. ஒன்று மேலை நாடுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, மற்றது எமது நாடுகளில் இவற்றை வெளியிடும் முயற்சி. எமது நாட்டில் இன்று புற்றீசல் போல வரும் சிறுவர் சித்திரக் கதைப் புத்தகங்கள், வெளிநாட்டுக் கதைகளின் பிரதிகளாக அமைகின்றமை சிறுவர் உளப்பாங்குக்கு ஏற்றதாக அமையாமை கல்வியாளர்கள் பலரின் கவனத்தையும் இன்று ஈர்த்துள்ளது. எனவேதான் எமது வெளியீட்டு முயற்சிகள், பிரபல எழுத்தாளர் தி. ஜ. ர. அங்கலாய்ப்பது போல, ''எமது சிறுவர்களின் இளமை மனப்பதிவுகளை வக்கிர விபரீத நிலைக்கு இட்டுச் செல்லக் கூடாது''.

சித்திரங்களின் மூலம் கதை சொல்லும் முறை மேலை நாடுகளில் அச்சுக்கலை வளர்ச்சியின் பூரணத்துவத்தை உள்வாங்கிய நிலையிலே நன்கு பிரபலமாகியுள்ளது. 'காமிக்ஸ்' வாசிக்காத எவருமே இல்லை என்று கூறக் கூடிய வகையில் வளர்ச்சி பெற்றுள்ளது. ஏறத்தாள பத்து ஆண்டுகளின் முன் அமெரிக்காவில் நடைபெற்ற மேலாய்வின் படி ஒரு மாதத்தில் 20 மில்லியம் சிறுவர் சித்திரக் கதைப் புத்தகங்கள் விற்பனையாவதாகக் கணக்கிடப், பட்டுள்ளது. பத்து ஆண்டுகளுக்குள் இத்தொகை எத்தனையோ மடங்கு பெருகியிருக்கும் எனத் திடமாக நப்பலாம். 1940 - ஆம் ஆண்டளவில் 'ஸ்ரேளிங் நோத்' என்பவர் சித்திரப் படக்கதைப் புத்தகங்களுக்கு எதிராகப் பெரிய இயக்கம் ஒன்றை அமெரிக்காவில் நடத்தினர். ''லாப நோக்கம் கொண்ட வெளியீட்டாளர்கள் இவற்றை எவ்வித சிந்தனையுமின்றி வெயியிட்டு சிறுவர்களின் ஒழுக்க மரபுகளைச் சீர்குலைத்தமையைக் கண்டிக்க முனைந்தமையே இவ்வியக்கத்தின் பிரதான அம்சமாகும்''. வெளியீட்டாளர்களின் பொறுப்பற்ற தன்மையை, நோத் அமெரிக்கப் பெற்றேர்களுக்கு எதிரான சவாலாகவும், நாட்டிற்கு இழிவு ஏற்படுத்தும் ஓர் அம்சமாகவும் வர்ணித்தார். எனினும் வெளியீட்டாளர்கள் தொடர்ந்தும் தம் போக்கிலேயே இயங்கி வந்தனர்.

'காமிக்ஸ்' எனப்படும் இக் கதைப்புத்தகங்கள் எமது சிறுவர் மத்தியில் இன்று பெருஞ் செல்வாக்குப் பெற்று வருவதைப் பலரும் அவதானித்திருப்பர். எமது வாரப்பத்திரிகைகளிலும் இது ஒரு தனி அம்சமாகவே காணப்படுகின்றது. ஜானி, வேதாளர், மாயாஜால மன்றுக், சிந்துபாத், டார்ஸான் போன்ற பெயர்கள் சிறுவர் மத்தியில் அதி பிரபலம் பெற்றுள்ளன. ஏறத்தாள இருபது ஆண்டுகளின் முன் வீரகேசரி, டார்ஸான் கதைக்கு ஒரு முழுப்பக்கத்தையே ஒதுக்கியிருந்தமையைப் பலரும் மறந்திருக்க மாட்டார்கள். பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் இக்கதைகளையெல்லாம் ஒரு முறைக்குப் பலமுறை வாசித்து வருகிறுர்கள்: சில தாய் தந்தையர் இந்த ஆர்வம் பற்றிக் குறைபட்டுக் கொள்



வதும் உண்டு. சில தாய் தந்தையர் இந்த ஆர்வத்தோடு தாமும் கலந்து ஒன்றி விடுவதும் உண்டு. பல்கலைக் கழகத்தில் பயிற்றும் சிரேஷ்ட விரிவுரையாள நண்பரொருவர் தமது குழந்தைகளுடன் சேர்ந்து சிறுவர் சித்திரக் கதைகளில் மூழ்கியிருந்ததை நான் பல சந்தர்ப்பங்களில் கண்டு வியந்ததுண்டு. வியப்பின் எதிரொலியாக சில மாதங்கள் கிடைத்தவற்றையெல்லாம் வாசிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டேன். சிறுவர் சித்திரக் கதைப் புத்தகங்கள் இன்றைய சிறுவர் வாழ்க்கையின் ஒரு அம்சமாகவே அமைவதன் உண்மை அப்பொழுதுதான் விளங்கியது. வேதாளரின் கதையோ, சிந்துபாத்தின் கடற் பிரயாணங்களோ ஏதும் இளைய தலைமுறையினரிடம் பெற்றுள்ள ம்க்கியத்துவம் போகிற போக்கிலே தட்டிக் கழிக்கக் கூடிய விடயமல்ல.

சிறுவர் சித்திரக் கதைப் புத்தகங்களிலே ஊடுருவியிருக்கும் ஆச்சரியம், திகில், விறுவிறுப்பு, தொடர்ந்து நடைபெறும் சம்பவங்கள் பற்றிய பரபரப்பு ஆதிய பண்புகள் பலரையும் கவர்ந்திழுக்கும் தன்மையின. நாவல். சிறுகதை, திரைப்படங்கள் ஆதியனவற்றிலே பாத்திரங்களுடன் வளர்ந்தோர் ஒன்றிவிடுவது போல சிறுவர் சித்திரக் கதை வீரர்களோடு ஒன்றிவிடும் அனுபவம் பிரதானமானது. நவீன யுகத்தைச் சேர்ந்த சிறுவர்கள் திகிலூட்டும் விஞ்ஞான விந்தைகளோடு தம்மையும் இணைத்துக் கொள்கின்றனர். வேதாளரின் கதைகளிலும் மற்றும் ஜானியின் துப்பறியும் அனுபவங்களிலும் அகில உலக கொள்ளையர் கழகத்தின் முயற்சிகளுடனும் ஒன்றிவிடுவதைக் காணலாம். அர்ச்சுணன், அபிமன்பு, இராமன் போன்ற நாயகர்கள் அம்புகளை மழை போலச் சொரிந்தமை இன்றைய சிறுவர்களைக் கவருவதிலும் வேதாளர், ஜானி, மாயாஜால மன்றுக் போன்றேரின் 'இலக்ரோனிக் யுக சாதனைகள்' சிறுவர்களை அதிகம் கவருவதை உணர முடிகிறது.

டெல்கியிலிருந்து ஆங்கிலத்தில் வெளிவரும் 'புத்தக திறனாய்வுச் சஞ்சிகை' யின் 1979 யூன் மாத இதழிலே, இந்திய தேசிய புத்தக நிறுவினத்தின் சிறுவர் புத்தகப் பகுதி முன்னைநாள் இயக்குநர் மோகினிராவ், சிறு இலக்கியத்திலே சித்திரக் கதைப் புத்தகங்ளான 'காமிக்ஸ்' சின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சில குறிப்புகள் கூறியுள்ளார். அவர் கருத்துகளை அப்படியே ஏற்பது கடினமாகவிருப்பினும் சில அண்மைக் கால முயற்சிகள் பற்றிய குறிப்புகள் இன்றைய சூழ்நிலையில் முக்கியமானவை.

சித்திரக் கதைப் புத்தகங்கள், புத்தகங்களின் இடத்தை நிரப்பும் பிரதி சாதனமாக விளங்கவோ அமையவோ கூடாது. வருங்காலத்திற் தோன்றக் கூடிய கதை கூறும் புத்தகங்களோ அல்லது நுண்ணிய அமைப்பைக் கொண்ட ஒளிப்படப் புத்தகங்களோ புத்தக வளர்ச்சியையும் தேவைகளையும் நிறைவு செய்வதாகக் கூறமுடியாது. சுருங்கக் கூறின் புத்தகங்களின் பௌதீக அமைப்பில் மாற்றம் ஏற்படினும் அவற்றின் உள்ளடக்கம் அல்லது நூற்பொருள் மாற்றம் நிதானமானதாக அமைய வேண்டும். கண்ணிற்கு அதிகம் வேலை கொடுக்காத வகையிற் பெரிய எழுத்துக்களோ அல்லது சிறிய பத்தி அமைப்புகளோ அமையலாம். ஆனல் இன்று பரவலாக வெளிவரும் சித்திரக் கதைப் புத்தகங்கள் இவ்வகைத் தேவைகளை ஒட்டி உருவானவை அல்ல. பாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிய கதைகளினூடேயும் இராமாயண பாரதக் கதைகள் மற்றும் சிறுவர்களுக்கான இலக்கிய உணர்ச்சி மனிதப் பண்புகள் ஆகிய அத்தனையையும் வளர்க்கும் கதைகளினூடேயும் அமையும் நோக்கம் குறிக்கோள் என்றின்னோரன்னவற்றை வளர்க்கும் வகையினவாக இன்று புற்றீசல் போல வரும் சிறுவர் சித்திரக் கதைப் புத்தகங்கள் அமைவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

'குழந்தைகளிடத்து மனிதாபிமானத்தை வளர்ப்பதென்பது பிறருடைய இன்பதுன்பங்களைத் தம்முடையதாகக் கருதும் மாண்பினை வளர்த்தலே சிறுவர் இலக்கியத்தின் குறிக்கோளாகும்' எனப் பிரபல சோவியத் எழுத்தாளர் ஒருவர் சிறுவர் இலக்கியத்தின் நோக்கினை அழுத்திக் கூறுகிறார். மனிதாபிமானம் இல்லாத ஆக்கங்கள் மூலம் முழுமனிதனை உருவாக்க முடியாது. சிறுவர் இலக்கியம் முழுமையான மனித வாழ்க்கையை ஒட்டி இணக்கமூற்றுச் செல்லும் பான்மையில் அமைய வேண்டும். இது இன்றைய வளர்முக நாடுகளின் சமுதாய தேசிய உணர்வுகளுக்கு மிக மிக அத்தியாவசியமானது. சுதந்திரத்திற்குப் பின் ஏறத்தாள மூன்று தஸாப்தங்களைக் கடந்தும் சிறுவர் இலக்கியம் பற்றி முழுமையான கோட்பாடுகள் மலராத எமது எழுத்துச் சூழ்நிலையில், சர்வதேச சிறுவர் நூற்றாண்டை ஒட்டியாவது சில கருத்துக்கள் தெளிவுபடுவது அவசியமானது. தேசிய விழிப்பு, சமூக மாற்றம் ஆதியன அரசியல் கல்வி இலக்கியத் துறைகளில் ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க மாற்றமும் வெறுமனே போகிற போக்கில் தட்டிக் கழிக்கக் கூடியதொன்றல்ல. தாய்மொழி மூலம் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளும், அயல் நாட்டு இலக்கியச் சிந்தனை வளர்ச்சியும், விஞ்ஞானக் கருத்துக்களின் தாக்கமும் எமது சிறுவரிடையே தரமான முன்னேற்றத்தை உருவாக்கியுள்ளன, தேசிய முரண்பாடுகள், தெளிவான கலை இலக்கியப் பார்வையை முன்னெடுத்துச் செல்வதற்குக் குந்தகம் செய்பினும், அவற்றை அகற்றவும், இன மத மொழிக்கப்பாற்பட்ட பரந்த எண்ணக் கருக்களை வளர்க்கவும், அவற்றின் அடிப்படையில் தேசியப் பின்னணியில் உலகப் பொதுமை கொண்ட இலக்கியங்களுக்கு உழைக்கவும் சிறுவர் இலக்கியப் பின்னணியிற் கருவமைத்தல் இன்றியமையாதது.

வண்ணங்கள், கதையின் பரபரப்பு ஆதியனவற்றின் மூலம் தற்காலிகக் கிளர்ச்சியைச் சிறுவருக்கு அளிப்பது மட்டுமேயன்றிப் பாரம்பரிய கதைகள் வளர்த்த மனிதப் பண்புகளை மூழ்கடிக்கும் தன்மையினவாக இன்றைய சிறுவர் சித்திரப் புத்தகள் கள் அமைகின்றன. சிறுவர்களின் உள்ளத்தைப் புரிந்துகொண்டு எழுதும் நிலை உருவாக வேண்டும். தொடர்பு சாதன வளர்ச்சியின் அடிப்படையிற் கட்புல சாதன வளர்ச்சிக்குக் கொடுக்கும் அதி முக்கியத்துவம் நியாயமானதுதான். எனினும் இதிகாசக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், ஈசாப் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள், விநோத ரச மஞ்சரிக் கதைகள் ஆதியனவற்றின் மூலம் வளர்த்த ஆளுமை வெறுமனே புற்றீசல்போல வரும் சித்திரக் கதைகள் மூலம் உருவாவதில்லை என்பதை நாம் உணரத் தவறிவிடுகின்றோம். பரபரப்பு திகில் போன்றவை வெறுமனே மன அசைவுகளை ஏற்படுத்துவனவேயாகும். ''சிறுவர்களின் இதய ஆழத்தில் முதன் முதல் புகுத்தப்படும் கருத்துக்கள் லேசில் மறைவதில்லை என்ற உண்மையை நாம் புறக்கணிக்கக் கூடாது''



சோவியத் எழுத்தாளரான 'அர்காதிகைதர்' எழுதிய 'தைமூரும் அவனது குழுவும்' என்ற கதை உலக இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது. மனிதாபிமானத்தை நேசிப்பதற்காக எழுதப்பட்ட இக் கதையில் தைமூரும் அவனது குழுவும் ஆற்றும் பணிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் உலக யுத்தத்தின் போது தைமூரின் உதாரணத்தைப் பின்பற்றித் 'தைமூரோ வைட்' என்ற இயக்கமே உருவாகியது. இந்தவகையிலான சிறுவர் இலக்கியங்களே உருவாக வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. ''புதிய கதைகளை உருவாக்கும் போது அவற்றினூடே மனிதப் பண்புகளுக்கான அழுத்தத்தைப் பதிய வைப்பதிற் கவனம் வேண்டும்'

சிறுவர் சித்திரக் கதைகளோ, அல்லது கூடார்த்த சித்திரத் துண்டுகளோ வலு நிறைந்த கருத்துத் தொடர்புச் சாதனம் என்ற உண்மையையும் மறுக்கமுடியாது. அவற்றைப் புத்தகங்கள் என்ற அடிப்படையில் வகைபடுத்த வேண்டிய அவசியமுமில்லை. வலுநிறைந்த இச் சாதனத்தின் முழுப்பயனையும் பெறும் வகையிற் பயன் படுத்துவதுதான் முக்கியமானது.

இந்தியாவிலே சிறுவர் சித்திரக் கதை மரபு அண்மைக் காலத்திலே மிகவும் செல்வாக்குப் பெற்று வருகின்றது. சிவகாசி முத்துக் கொமிக்ஸ், வாசுமுத்துக் காமிக்ஸ் இந்திய புத்தக நிலையத்தினரின் அமர் சித்திர கதா வரிசை போன்ற பல நிறுவன முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. இலங்கைப் புத்தகக் கடைகளில் இவை நன்கு விற்பனையாகின்றன. எம். டி. குணசேன நிறுவனத்தினர் வெளியிட்டுள்ள பாடசாலைக்குச் சென்ற யானை, தப்பியோடிய தோழர்கள், குரங்கின் தீர்ப்பு, அருந்ததியின் காற்றாடிக் கொடி, கிளிப்பிள்ளை, போன்ற சித்திரக் கதைகள் இலங்கையில் வெளிவந்துள்ளன. அமர் சித்திர கதா வரிசை, இந்திய புத்தக நிறுவனத்தினரின் பரிசோதனை முயற்சி என மோகினிராவ் கூறுகிறார். வரலாற்று ரீதியான கதைகளையும், இதிகாசக் கதைகளையும் கூடார்த்த சித்திரத் துண்டுகளாக வெளியிடுவதன் மூலம் சிறுவர்களின் சித்திரக் கதை ஆர்வத்தையும், மரபுக் கதைகளைச் சிறுவர் அறிய வேண்டும் என்ற பெற்றோர்களின் வேணவாவையும் ஒருங்கே பூர்த்தி செய்யும் வகையில் இம்முயற்சிகள் அமைகின்றன. லாபநோக்கம் கருதிய பல நிறுவனங்கள் ஆங்கில காமிக்ஸின் பிரதிகளாக பலவற்றை வெளியிட்டு வருகின்றன. சோஷலிச நாடுகள் சித்திரக் கதைகளின் மூலம் பல பரிசோதனைகளை நடாத்தி வருகின்றன. இச் சாதனத்தின் கல்விப் பயன்பாடு எல்லையற்றது என்பது மறுக்க முடியாத உண்மை. இத்துறையில் ஈடுபடுவோர் ஒருவகைப் பொறுப்புணர்ச்சியுடன் இயங்க வேண்டியது அவசியமாகும். சித்திரப் படக் கதைகள் சிறுவர்களின் வாசிப்புப் பயிற்சியையும், கிரகித்தற் பயிற்சியையும் வேகமாக வளர்க்கின்றது என்பது பரவலான கருத்தாகும். அதே நேரத்தில் வாசிக்கும் ஆர்வத்தை மந்த நிலையடையச் செய்கின்றது என்ற மோகினிராவின் கருத்திலும் உண்மை காண்பது அவசியமாகும். சம்பவங்களின் பரபரப்பும் திகிலும், வாசிக்கும் ஆர்வத்தை மூழ்கடிப்பதோடு நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்து வாசிக்கும் மனோபாவத்தை மழுங்கச் செய்கிறது எனக் கருதுவதிலும் உண்மையில்லாமலில்லை. எமது சிறுவர் மத்தியில் சித்திரக் கதை வாசிக்கும் மரபிற்கு அண்மைக் காலத்தில் போட்டி நிலையில் வெளியிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய நிறுவனங்களின் ஆக்கங்களே கிடைப்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய இலக்கிய வகைகளை சந்தைப்படுத்துவது போல வெறுமனே லாப நோக்கில் சந்தைப்படுத்தும் சூழ்நிலை உருவாகக் கூடாது.

இலங்கையில் சிறுவர் இலக்கியங்களாகப் பாடப் புத்தகங்களே அமையும் சூழலே காணப்படுகின்றது. தமிழ் நாட்டிலே, அம்புலிமாமா, கோகிலம், கண்ணன் போல இலங்கையில் வெற்றிமணி, நட்சத்திர மாமா வெளிவந்தன. இன்றைய நிலையில் சிறுவர் சஞ்சிகை எவையுமே இலங்கையில் இல்லை. சிங்களத்தில் சத்துட்ட, மிஹிர, தசகத்தா, டிக்கிரி தருணி, சாக்கவி ஆகிற பல சிறுவர் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. சித்திரக் கதைகள் இவற்றில் வெளியாவதுடன், தனியே சித்திரக் கதைப் புத்தகங்களாகவும் வெளி வருகின்றன. தமிழில் இவ்வகை முயற்சிகள் இல்லாமை குறிப்பிடத்தக்கது. தினசரிப் பத்திரிகைகளின் வார மலரில் சிறுவர் பகுதிகளே உள்ளன. அவை கவனமாகக் கையாளப்படுவதாகவும் இல்லை. ஈழகேசரி பாலர் மலர் முதல் — சுதந்திரன், வளர்மதி, தினபதியின் சிறுவர் உலகம், வீரகேசரியின் பாலர் பகுதி, தினகரனின் களஞ்சியம் போன்றவைகயே குறிப்பிடத்தக்கவை. எழுத்தாளர் கவனம் சிறுவர் பக்கமும் திரும்ப வேண்டும் என்பது உணர்த்தி உணரவேண்டியதொன்றல்ல. ந. அருணசலம் என்பவர் குழந்தை இலக்கியம் என்ற கட்டுரையில் கூறியுள்ள கருத்து ஈண்டு மனங்கொள்ளத்தக்கது.

> "வயது வந்தவர்களுக்கான இலக்கியக் கோட்பாடுகளும் பொருட் கனமும் சிறு குழந்தைக் கதைகளிலும் மதாளித்து நிற்பது அவசியம். ஏனெனில் கதைகள் மூலம் சின்னஞ் சிறுவரிடம் இரசனையை மாத்திரம் வளர்ப்பது நோக்கமில்லை. இளந் தலைமுறையினர் மாபெரும் வாழ்க்கையில் முன்னேறவும் தேசநலனைக் காக்கவும் பிறநாடுகளை மதிக்கவும் அவர்தம் கலாசாரத்தை பேணிப் போற்றவும், உழைப்பை விரும்பவும், சிறந்த பண்புகளைப் பெறவும், மனித குலத்தின் பேரில் வீரமும், துணிவும், கௌரவமும் கொண்டவர்களாக விளங்கவும் இக் கதைகளே உதவுகின்றன. ரொபின்சன் குருசோ கதை, டார்சான் கதை, சிந்துபாத்தின் கதைகள், ஈசாப் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் என்பன குழந்தைகளிடம் மனோதிடத்தையும் உறுதியையும் இரசனையையும் வளர்க்கும். சிவாஜி, கட்டப்பொம்மன், பண்டார வன்னியன், சங்கிலியன், எகலபொல போன்றோரின் வாழ்க்கை வரலாறுகள் எந்த எதிர்ப்புக்கும் துணிவு கொடுக்கும் வலிமையையும் வளர்க்க வல்லனவாகும்''.

இந் நீண்ட மேற்கோள் சிறுவர் இலக்கியத்தின் தேவையையும், முக்கியத்துவத்தையும் நன்கு புலப்படுத்துகின்றது. சிறுவர் சித்திரங்களைப் பொறுத்தவரையும் மேற் குறிப்பிட்ட கருத்துப் பொருந்தி நோக்கவேண்டியதொன்றாகும். தீய விளைவுகளை உருவாக்காத வகையில் சொந்தச் சிந்தனையையும், உள்ளச் சுதந்திரத்தையும், ஊட்டக் கூடிய வகையில் உருவாகும் சிறுவர் இலக்கியங்கள் தோன்ற வேண்டும். சர்வதேச சிறுவர் ஆண்டையொட்டி விழாக்களும், கருத்தரங்குகளும் நடைபெறும் இக்கால கட்டத்தில் எமது எழுத்தாளர்களினதும் பத்திரிகையாளர்களினது கவனம் பிரக்ஞை பூர்வமாகத் திரும்புவது அவசியமல்லவா?


சுத்தமான
சுவையான
சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்ட
சகல உணவு வகைகளுக்கும்

கொழும்பு மாநகரில் பிரசித்திபெற்ற சைவக் கிளப்

# கோல்டன் கபே

98, பாங்சோல் வீதி,
கொழும்பு-11.

தொலைபேசி: 24712


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தில் தனித்துவச்

சாதனை புரிந்து கொண்டுவரும்

'மல்லிகை' யின்

இலக்கியப்பணி தொடரட்டும்

# சி. பி. ஏ. றஸாக் அன்ட் கம்பனி

510

83, கண்டி வீதி,

கம்பளை.


ஆங்கிலமொழி

# இந்திய இலக்கியங்கள் பற்றி சோவியத் ஆய்வுகள்

ஐ. டனிலின்

சோவியத் யூனியனில் இந்திய இலக்கியங்களை மிகப் பிரபலமாக்குவதற்கு, சோவியத் இந்தியவியலாளர்கள் உதவியுள்ளார்கள். யெலேனா கலின்னிக்கோவா அவர்களில் ஒருவர். சோவியத் விஞ்ஞான அக்கடமியின் கிழக்கத்திய ஆய்வுகளுக்கான நிலையத்தில், இந்திய இலக்கியம் பற்றிய முன்னணி ஆய்வாளர்களில் ஒருவரான பேராசிரியர் யெவ்கெனி செலுஷெவ் அவர்களுடன் இணைந்து பணிபுரியும் யெலேனா, மொழி ஆய்வியலில், சாஸ்திர தேர்வு நாடியாவர்.

அவர் எடுத்துக் கொண்ட பொருள் — ஆங்கிலத்தில் எழுதும் இந்திய எழுத்தாளர்கள்— மிகவும் சுவாரஸ்யமானது. இந்தியாவின் கடந்த காலத்தையும் தற்காலத்தையும் பிரதிபலித்துக் காட்டும் பல திறமைசால் எழுத்தாளர்களினதும் கவிஞர்களினதும் ஆக்கங்களை சோவியத் மக்களுக்கு யெலேனா அறிமுகப்படுத்தியுள்ளார்.

ஆங்கிலத்தில் எழுதும் இந்திய எழுத்தாளர்கள், பல்வேறு தேசிய இனங்களையும் சேர்ந்தவர்கள். ஆதலால் அவர்கள் ஆக்கங்களும், பல்லின நாட்டினது முழுதான வாழ்வைக் காட்டிடும் ஆடியாக அமைகின்றன. முல்க்ராஜ் ஆனந்த், கே. ஏ. அப்பாஸ், ஆர். கே. நாராயன், ராஜா ராவ், பாபணி பட்டாச்சார்யா, கமலா மார்க்கண்டேயா, சரோஜினி நாயுடு. ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா ஆகியோரின் ஆக்கங்களைப் படித்து இந்தியாவைப் பற்றிய தம் அறிவைக் குறிப்பிடத்தக்க அளவு அதிரித்துக் கொண்டுள்ள சோவியத் வாசகர்களுக்கு. இக் காரணத்தினால் தான் இவ்வாக்கங்கள் பெரும் பயன் வாய்ந்தவையாகவுள்ளன.

ஆங்கிலத்தில் எழுதும் சிறப்பு வாய்ந்த பல இந்தியர்களின் பங்களிப்புகள் பற்றி, கலின்னிக்கோவா ஆராய்ந்துள்ளார். முதலில், ஆர். கே. நாராயன், நாராயனுடைய ஆக்கங்கள் தாம் அவருடைய பிரபந்தப் பொருளாயமைந்தவை என்பதோடு, நாராயனுடைய கதைகளை — வெண்மலர், பதினைந்து ஆண்டுகள் உட்பட்ட அவர் ருஷ்ய மொழியில் பெயர்த்துமுள்ளார்.

நௌகா பதிப்பகத்தின், 'கிழக்கின் எழுத்தாளர் — விஞ்ஞானிகள்' வரிசையில், ஆர். கே. நாராயனைப்பற்றி யெலேனா எழுதியுள்ள நூல் விரைவில் வெளியாகவுள்ளது. 'ஆங்கிலத்தில் இந்திய இலக்கியம்' என்ற அவரது இன்னொரு நூலும்— இவ்விலக்கியத்தின் தோற்றம் பற்றியும், வளர்ச்சி பற்றியும் காட்ட முயற்சிக்கிற; அதன் முன்னணி கர்த்தாக்கள் பற்றியும் அவர் தம் சிறந்த ஆக்கங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பற்றியும் முறையாக நோக்க முயல்கிற, முதல் சோவியத் இலக்கிய ஆய்வு என்பதால் — மிக மதிப்பு வாய்ந்த தொன்ருகும்.

ஆங்கில மொழி இந்திய இலக்கியங்கள் பற்றி, சோவியத் யூனியனில் இருவகைப்பட்ட கொள்கைகள் உள்ளன. இம்மாதிரி தனியான பிரிவொன்று இருப்பதாகக் கருதப்படலாகாது என்றும், எழுத்தாளர்களின் ஆக்கங்கள் தேச வாரியாகவே பார்க்கப்பட வேண்டுமென்றும், சொல்வது ஒன்று.

அடுத்தது — இதைத்தான் கலின்னிகோவா ஆதரிக்கிருர் — ஆங்கில மொழி இந்திய இலக்கியம் என்பது, கடந்த 150 ஆண்டுகளாக இருந்து வரும் ஒரு தனியான பிரிவு என்பதாகும்.

'ஆங்கிலத்தில் இந்திய இலக்கியம்' என்ற நூல், இந்த இலக்கியத்தின் தோற்றுவாய்கள் பற்றி விபரிக்கிறது. 1835-ல் ஆங்கிலம் இந்தியாவின் ராஜ்ய பாஷையாகி, காலனியாட்சிக்குக் காத்திரமான ஊழியர்களை உருவாக்குவதற்காக, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாவிக்கப்படலாயிற்று. 'ஆனல்........' கலின்னிக்கோவா சுட்டிக்காட்டுகிருர். '......இந்தியக் கலாசாரத்தைப் பொறுத்தளவில், பிரிட்டிஷார் ஒருபோதும் எதிர்பார்த்திராதவை இதனுல் நிகழ்ந்தன — ஆட்சியாளர்கள் இறுதியில் ஒரு முரணன விளைவையே ஏற்படுத்திஞர்கள். ஆங்கிலத்தை வலிந்து புகுத்தியதானது, அகண்டதொரு ஐஸ்வர்யமான உலக கலாசாரத்தை அணுக இந்தியர்க்கு வழிசெய்து கொடுத்தது. இதன் மூலம் சுதந்திரம் பற்றியும் மானுடம் பற்றியும் புதிய சிந்தனைகளைப் பெறத்தக்க செழிப்பான புதுக்களமொன்றைக் கிடைக்கச் செய்து, பிரிட்டிஷ் நுகத்தடியிலிருந்து தம் நாட்டை மீட்பதற்கான போராட்ட உந்துணர்வை அவர்களுக்கு ஊட்டிற்று' இக் கூற்ருனது, தாம் ஆய்வு செய்த இலக்கியத்தை கலின்னிகோவா அணுகிய முறை எத்தன்மையது என்பதையும் அறியத்தருகிறது. 'புராதன கண்டத்தின் கலாசார வரலாற்றில் புதிய சகாப்தமொன்றைத் தொடக்கி வைத்த, குறிப்பிடத்தக்க மனிதர்' என ரொமெய்ன் ரோலிண்டிஞல் குறிப்பிடப்பட்டவரும், 19-ம் நூற்ருண்டு இந்தியாவுடன் தம் பெயரை இறுகப் பிணைத்துக் கொண்டவருமான ராம்மோகன் ராய் பற்றி கலின்னிக்கோவா எழுதியதும் இக்கோணத்தில் நோக்கித்தான்.

'ஆங்கில இலக்கியம் பற்றி, முக்கியமாக, ஷேக்ஸ்பியர், மில்டன், மற்றும் உணர்வியற் கவிஞர்கள் பற்றி இந்தியர்கள் அறிய நேர்ந்ததில்...' கலின்னிக்கோவா சொல்கிருர்: '...பாரம்பரியங்களாலும் மதக் கொள்கைகளாலும் பந்திக்கப்படாத — வாழ்ந்து, வருந்தி, காதலித்து, மானிட உணர்வுகளின் முழு வீரியத்துடன் போரிட்ட, மனிதனைக் கொண்ட ஒரு புதிய உலகை அவர்கள் கண்டு கொண்டார்கள்'

சுதந்திரப் போராட்டம் பற்றிய சிந்தனைகள் பிரபலமடைய ஏதுவாயிருந்த இந்தியப் பத்திரிகைகளினதும் செய்தித் துறையினதும் தோற்றமும் (19-ம் நூற்ருண்டு) வளர்ச்சியும் இன்னெரு கருப்பொருளாகும்.

அனிதா தேசாய், அருண் ஜோஷி, நயன்தாரா ஸெகல் — விஜயலக்ஷ்மி பண்டிட்டின்

ரம்பேஜ் என்ற ஆங்கிலப் படத்திற்கு ஒளிப் பதிவாளராகக் கடமை புரிந்து தனது தனித் திறமையைக் காட்டியதற்காக இவ்வாண்டு ஜனுதிபதிப் பரிசைப் பெற்றுக்கொண்ட கமரா வாமதேவன் அவர்களை மல்லிகை வாழ்த்துகின்றது.

மகள், நேருவின் மருமகள் — போன்ற சமகால இந்திய எழுத்தாளர்களினது படைப்புக்கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. மஞேஹர் மல்கயோங்கரின் நாவல்கள் பற்றி — குறிப்பாக ருஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டு, 1972-ல் மாஸ்கோவில் வெளியிடப்பட்ட 'கங்கையின் திருப்பம்' பற்றி, யெலேஞ மிக விரிவாகவே விளக்குகிருர்.

'ஆங்கிலத்திலான இந்திய இலக்கியம், எப்போதும் அந்நாட்டின் விதியுடன் இறுகப் பிணைந்தே இருந்துள்ளது. சொந்த மண்ணின் உணர்வுந்தல்கள் அதைப் பாதித்தன. இன்னமும் பாதிக்கின்றன. மற்றெந்த இந்தியமொழி இலக்கியத்தையும் போலவே, அதுவும் பெறுமதி வாய்ந்தது' என்கிற அவரது வார்த்தைகள், அவரது நூலுக்குச் சார்பாக உள்ள நியாயத்தை விளக்குகின்றன.

இப்போது, நௌகா வரிசைக்காக, முல்க்ராஜ் ஆனந்த் பற்றிய ஒரு பெரிய நூலை ஆக்குவதில் கலின்னிக்கோவா ஈடுபட்டுள்ளார் இந்நூலின் ஒரு பகுதியில், டால்ஸ்டாய், நெக்ராஸோவ் போன்ற ருஷ்ய எழுத்தாளர்களும் சோவியத் இலக்கியங்களும் முக்கியமாக கோர்க்கியும், ஆனந்தின் எழுத்துக்களில் ஏற்படுத்திய பாதிப்புக்களைப் பற்றி இந்நூலின் ஒரு பகுதியில் அவர் மதிப்பீடு செய்கிருர்.

எம். ஆர். ஆனந்த், ஸி. டீ. நரசிம்மையா, அல்ஃபோன்ஸோ கார்கலா, ஸரொஸ் கவாஸ்ஜீ, ஸோ அன்ஸாரி போன்ற எழுத்தாளர்களும் கல்வியாளர்களுமான அவரது இந்திய சகாக்களுடனன தொடர்புகள், கலின்னிக்கோவாவின் ஆய்வுகளுக்குப் பேருதவியாக உள்ளன. சோவியத் — இந்திய மொழி ஆய்வாளர்களின் கட்டுரைத் தொகுப்பாகிய 'நவீன இந்திய இலக்கியத்தின் பிரச்னைகள்' நூலுக்கு அவர் ஒரு பங்களிப்பாளர். இந்தியாவுடனன யெலேஞ கலினிக்கோவாவின் தொடர்புகளை, பொதுப்பணியும் இலகுவாக்குகிறது —

சோவியத் — இந்திய நட்புறவுச் சங்கத்தின் கலை இலக்கியப் பகுதிக்கு, அவர்தான் தலைமைசால் காரியதரிசியாக உள்ளாரென்பதால்.

தமிழில்: சாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானின் திடமான முன்னேற்றம்

கே. கவர்கியான்

ஏப்ரல் மாதத்தில் மக்கள் புரட்சியால் வகுக்கப் பெற்ற பாதையில் ஆப்கானிஸ்தான் ஜனநாயகக் குடியரசு, திட நம்பிக்கையுடன் முன்னேறி வருகிறது. புதிய சமுதாயத்திற்கான ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று மாத விளைவுகள் இதற்குச் சான்றாகும். கிராமப் புறத்தில் நிலப் பிரபுத்துவ உறவுகளுக்குப் பலத்த அடி கொடுக்கப் பெற்றுள்ளது என்ற ஆப்கானிஸ்தான் திட்ட அமைச்சர் கூறினார். நிலச் சீர்திருத்தத்தின் முதல் கட்டம் முடிவடைந்து விட்டது என்றும், நாட்டில் நிலமற்ற விவசாயக் குடும்பங்கள் எதுவும் இல்லை என்றும், அவர் குறிப்பிட்டார்.

இதர பொருளாதாரத் துறைகளிலும் வெற்றிகள் கிடைத்துள்ளன. மின்விசை எஞ்சினியரிங் மற்றும் போக்குவரத்து, உணவு மற்றும் மென்னியந்திரத் தொழி நிறுவனங்களை அமைத்தல், வீட்டு வசதி நிர்மாணம், இவை சம்ப மான திட்ட இலக்குகள் முழு மூச்சுடன் நிறைவேற்றப் படுகின்றன. பொதுக் கல்வி மற்றும் சுகாதாரத் துறையில் ஆப்கன் குடியரசு, கணிசமான வெற்றி பெற்றுள்ளது.

பல்வேறு பொருளாதாரத் துறைகளில் சோஷலிச நாடுகளுடன் பல ஒப்பந்தங்களையும் உடன்பாடுகளையும் ஆப்கானிஸ்தான் செய்து கொண்டுள்ளது: எனவே ஆப்கன் நாட்டின் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குச் சோஷலிச நாடுகள் பெருமளவில் உதவுகின்றன.

சோவியத் யூனியனுடன் நெருங்கிய பொருளாதாரத் தொடர்புகளை ஆப்கானிஸ்தான் கொண்டுள்ளது. 20 தொழில், விவசாய, மின்விசை மற்றும் பிற திட்ட நிலையங்களைச் சோவியத் உதவியுடன் ஆப்கானிஸ்தான் நிறுவியுள்ளது. நாட்டின் பொதுத் துறையில், 60 சதவிகிதத்திற்கு மேற்பட்ட தொழில் பண்டங்களை அவை உற்பத்தி செய்கின்றன. சோவியத் நில இயலாளர்கள் எண்ணெய்த் தொழிலாளர்கள், கட்டிடத் துறையினர், டாக்டர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் ஆப்கன் நண்பர்களுக்குக் கணிசமான உதவி அளிக்கின்றனர்.

ஆப்கன் புரட்சிக்கு எதிரான தமது குழிபறிப்பு நடவடிக்கையை மூடி மறைப்பதற்காகச் சீனாவும் மேலை நாடுகளும் 'சோவியத் தலையீடு' பற்றிய பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. எதிர்ப் புரட்சிக்காரர்களுக்குப் பணம் மற்றும் ஆயுதங்களை அவை வழங்குகிறன.

ஆப்கன் நாட்டின் புரட்சிகரத் திட்டங்களது நிறைவேற்றத்தைச் சீர்குலைக்க, உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுப் பிற்போக்குச் சக்திகள் மிகத் தீவிரகாகச் செயல்படுகின்றன. எனினும் தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள பாதையின் திட நம்பிக்கையுடன் ஆப்கன் மக்கள் முன்னேறுகின்றனர்.



நுட்பமும், சிறப்பும், அழகும்
ஒருங்கே அமையப்பெற்ற
ஆபரணங்களுக்கு ....

உத்தரவாதமான தரமிக்க
தங்க வைர நகைகளுக்கு ....

அருமையான வேலைப்பாடுகள் அமைந்த
நவீன டிசைன் தங்க ஆபரணங்களுக்கு ...

நேர்த்தியானதும்,
மகிழ்ந்து பரவசமடையக் கூடியதுமான
அணிகலன்களுக்கு ....

யாழ்ப்பாணத்தில் சிறந்த நகைக்கடை

ஹரன் ஜுவல்லர்ஸ்

50, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 444
தந்தி; ''இரத்தினம்ஸ்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை மடந்தையின் 15-வது ஆண்டுக்கு—

**டொலர், அலுமினிய பித்தளை எவர்சில்வர்**
பாத்திரங்கள்
**வல்லேத் துணிவகைகள்**
**பரிசுப் பொருட்கள்**
**பஜாஜ் ஸ்கூட்டர்**

முதலிய பொருட்களுக்கு யாழ் நகரில் ஏக விநியோகஸ்தர்களான

எம்

**நல் வாழ்த்துக்கள்**

## சிவன் ஸ்ரோர்ஸ்

80, கே. கே. எஸ். வீதி, — **யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: **7837**

எமது ஸ்தாபனத்தில் கீழ்காணும் வேலைகள்
விஷேசமான முறையில் செய்கிறோம்

- லொறி ஹவ்ஸிட் செய்தல்
- லோஞ்ச் சாவ்ட் சீர்படுத்தல்
- டிராக்டர் கிங்பின் செய்தல்
- கிறஸர் சாவ்ட் செய்தல்

தொலைபேசி: **7140**

## பைனல் ரேணிங் வேக்ஸ்

சிறந்த முறையில்
சேவை செய்வற்காக
நவீன இயந்திரங்களை
வரவழைத்துள்ளோம்.

**103, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**ரன்பக்** — மூட்டைப் பூச்சிக் கொல்லி

**ரன்ரெட்** — எலிக் கொல்லி

**ரன் இன்செக்ட் கில்லர்** — சகல பூச்சிக் கொல்லி

**ஈவா கொஸ்மெடிக்**

சகலவித பேப்பர் பேக்ஸ் சைஸ்கள்

தயாரிப்பாளர்:-

## அப்துல்லா இன்டஸ்ரீஸ் அன் பேப்பர் பேக்ஸ் மெனுபெக்ஷரி

**72, பார்பர் வீதி, கொழும்பு - 13**

தொலைபேசி: **33952**

சகல தேவைக்கும் தேவையான
**சாயங்களும்,**
**ரசாயனப் பொருள்களும்**
எம்மிடம் உண்டு.

விஷேசமாக பூக்கள், பத்திக், பன் போன்றவைகள்
நிறம் ஊட்ட பலவர்ண சாயங்கள்
எம்மிடம் உண்டு

## COLOUR CAMP

**41, பாங்சால் ஸ்றீற், கொழும்பு-11**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15 வது**

ஆண்டைப்

பெருமிதத்துடன் ஆரப்பித்திருக்கும்

**மல்லிகைக்கு**

எமது

மனப்பூர்வமான

வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்

பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

நமது நாட்டில் ஓர் இலக்கியச் சஞ்சிகையை நடத்துவதென்பது இலேசான காரியமல்ல.

இதை நிலை நாட்டிய உழைப்புக்கு நாங்கள் மதிப்புக்கொடுக்கிறோம்.

மேலும் மேலும் மல்லிகை வளரப் பிரார்த்திக்கிறோம்!

# விநாயகர் டிரேடிங் கம்பெனி

6-ஏ, மொடல் மார்க்கட்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.




மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி பின்வரும் சிறந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் :-

**அழகிய துவாய்; பொலித்தீன் பாக்;**

**மில்க்வைற் அப்பியாசக் கொப்பி;**

**மில்க்வைற் செய்தி;**

**அறிவு நூல்கள்**

★ மில்க்வைற் — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Mallikai** *15th Anniversary Special Number*

Registered as a Newspaper in Sri Lanka

AUGUST 1979


# *Vijaya Medical Stores*

*Dealers in:*

*VEGETABLE SEEDS,*
*PATENT MEDICINES,*
*AGRO CHEMICALS,*
*& SPRAYERS*

**260, MAIN STREET,**
**MATALE.**

*Phone. 0662 - 564*

# *Rani Grinding Mills*

*Phone: 425*

**219, MAIN STREET,**
**MATALE.**

# *Vijaya General Stores*

*Dealers in :*

- *CHEMICALS, SPRAYERS & FERTILIZERS*

**85, WOLFENDHAL STREET,**
**COLOMBO - 13.**


இப்பத்திரிகை 234B, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும் ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களால் மல்லிகை சந்தாதாரர்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்திலும் அட்டை யா. மா. ப. நோ. கூ. ச. கூட்டுறவு அச்சகத்திலும் அச்சிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org